Volume-13
Issue-8

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

ஆகஸ்ட்-2020 (துல்ஹஜ்-1441)

விலை ரூ. 20/-



## பிரசாந்த் பூஷனும் உச்ச நீதிமன்றமும்

## விடுதலைப் போரில் ஃபக்கீர்கள்

## பெரியாரும் இஸ்லாமும்

## புதிய கல்விக்கொள்கை

### நல்லது எது..? சர்ச்சைகளுக்கான பதில்

بسم الله الرحمن الرحيم

"
தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்
(அல்குர்ஆன் - 9:13)
"


உச்ச நீதிமன்ற நீதி - 6

விடுதலைப் போரில் ஃபக்கீர்கள் - 11

ஃபக்கீர்களின் விடுதலைப் போர் தொடக்கம் - 14

விடுதலைப் போரில் வீரமிகு இஸ்லாமிய தாய்மார்கள் - 24

பெரியாரும் - இஸ்லாமும் - 26

புதிய கல்விக் கொள்கை - 35

நமது முதல் எதிரி! - 41

இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள் - 52

கடந்த 30 ஆண்டுகளாக நாங்கள் இரத்தத்தை தவிர வேறு எதனையும் பார்த்ததில்லை - 58

இஸ்லாம் VS நாத்திகம் - 60

புத்தகத்திலிருந்து - 62

ஊரடங்கு காலத்தில் ஆர்.எஸ்.எஸ். தலைவரின் கோவை வருகை - 63



ஆகஸ்ட்-2020

# வைகறை வெளிச்சம்

துல்ஹஜ்-1441)

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.


http:/www.facebook.com/vaigarivelicham

# அநியாயக் கொலைகள்

நாளுக்கு நாள் கொலை, குற்றங்கள் அதிகமாகி கொண்டே இருக்கிறது. குற்றங்களை தடுக்க வேண்டிய காவல் துறையினர் அநியாயமாக அப்பாவிகளை அடித்துக் கொல்வது மக்களிடையே காவல்துறையின் மீதும் அரசாங்கத்தின் மீதும் உள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கிறது.

சமீபத்தில் சாத்தான்குளத்தில் தந்தை-மகன் இரண்டு பேரையும் காவல்துறையினர் போலிஸ் காவலில் வைத்து அடித்தே கொன்றனர். இந்த சம்பவத்தால் கொரோனா காலக்கட்டத்திலும் மிகப்பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெற்றன. இந்திய அளவில் நிறைய நபர்கள் காவல் துறையினருக்கு எதிராக பல கண்டனங்களை பதிவு செய்தார்கள்.

இப்படிப்பட்ட அநியாயக் கொலைகள் இந்தியாவில் நிகழ்வது புதிதான சம்பவம் ஒன்றுமல்ல. காலம் காலமாக நடப்பவைதான்.

*2017*-இல் *1647* பேர் போலிஸ் காவலில் வைத்து மரணித்துள்ளதாக National Human Rights Commission (NHRC) பதிவு செய்துள்ளது.

NGO-வின் கூட்டமைப்பு சார்பில் வெளியிடப்பட்ட "இந்திய சித்திரவதைப் பற்றிய வருடாந்திர அறிக்கையில்" *2019*-ஆம் ஆண்டில் *1731* பேரும், *2018*-ஆம் ஆண்டில் *1966* பேரும் போலிஸ் காவலில் வைத்து சித்திரவதை செய்து கொல்லப்பட்டதாக அறிவித்துள்ளது.

அதாவது சுமார் ஐந்து நபர்கள் நாள்தோறும் இந்திய அளவில் போலிஸ் காவலில் வைத்து கொலை செய்யப்படுகிறார்கள். இந்த தொடர் அநியாயக் கொலைகள் ஒன்றை தெளிவுபடுத்துகிறது. இவர்கள் எந்த சட்டத்தின் மீது சத்தியம் செய்து பதவி ஏற்றார்களோ அந்த சட்டம் எங்களை எதுவும் செய்துவிடாது என்ற நம்பிக்கை அவர்களிடம் உறுதியாக உள்ளது. இதைத்தான் சாத்தான்குளம் சம்பவத்தில் விசாரித்த நீதிபதியை பார்த்து அந்த காவல்துறை அதிகாரி கூறினார். உங்களால் எங்களை எதுவும் செய்ய முடியாது. யாருக்கும் நாங்கள் பதில் சொல்லத் தேவையில்லை. எங்கள் மனோ இச்சையின் அடிப்படையில் நாங்கள் நடந்துகொள்வோம் என்கின்ற ஆணவப்போக்குதான் இன்று காவல்துறை மட்டுமல்ல எல்லா துறைகளிலும் குற்றங்கள் குறையாமல் நாளுக்கு நாள் அதிகரிக்கக் காரணம்.

காந்தியடிகள் ராமர் பெயரைக் கூறி மரணித்தாலும் அவர் விரும்பியது உமர் (ரழி) அவர்களின் ஆட்சியைத்தான்.

உமர் (ரழி) அவர்கள் இந்த உலகில் நாம் பதவியால், பணத்தால், பலத்தால் நம்மை தற்காத்துக் கொண்டாலும், நாளை மறுமையில் மரணத்திற்கு பின் உள்ள வாழ்க்கையில் நம்முடைய ஒவ்வொரு நொடிப் பொழுதுக்கும் நம்மைப் படைத்த இறைவனிடம் பதில் சொல்லியே ஆக வேண்டும். இறைவனிடம் எந்த சூழலிலும் தப்பிக்க முடியாது என்கின்ற இஸ்லாமிய சட்டத்திற்கு உட்பட்டு ஆட்சி

நடத்தினார். அதனால்தான் உமர் (ரழி) இப்படி கூறினார்...

என்னுடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் அநியாயமாக ஒரு ஆடு இறந்தாலும் அதற்கு நான் இறைவனின் விசாரணையில் நாளை பதில் சொல்ல வேண்டும் என்கின்ற இறையச்சம் அவரை நீதிமிக்க ஆட்சியாளராய் மாற்றியது.

உமர் (ரழி) அவர்கள் ஆளுநர்களையும் அதிகாரிகளையும் நியமிக்கும் போது இப்படிக் கூறினார்கள்...

"உங்களை நான் ஆட்சியாளர்களாகவும் கொடுமை புரிபவர்களாகவும் அனுப்பவில்லை. மாறாக மக்கள் உங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவும் மக்களுடைய உரிமைகளையும் பொறுப்புகளையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவும் உங்களை நான் நியமிக்கின்றேன்.

"அவர்கள் மீது நீங்கள் அராஜகம் புரிய வேண்டாம். அக்கிரமம் இழைக்க வேண்டாம். வதைகளுக்கு ஆளாக்க வேண்டாம். அவமானப்படுத்த வேண்டாம்" தேவையில்லாமல் **அவர்களைப் புகழ வேண்டாம். அதனால் அவர்கள் குற்றம் செய்பவர்களாக மாறிவிடக்கூடும்.** அவர்களுடைய வருகையைத் தடுக்கின்ற விதத்தில் உங்களுடைய வாசலைத் தாழிட்டு வைக்க வேண்டாம். இதனால் வலியவர்கள், எளியவர்கள் விழுங்கி விடக்கூடும்.

எந்த விதத்திலும் அவர்களை விட உங்களை நீங்களே முற்படுத்திக் கொள்ள வேண்டாம். இது அவர்கள் மீது நீங்கள் இழைக்கின்ற கொடுமை ஆகும். இவற்றிற்கு மாறாக நடக்கும் அதிகாரிகளுக்கு உடனே தண்டனையை வழங்கினார்கள். மக்கள் மத்தியில் அதிகாரிகளைப் பற்றிய அச்சத்தை போக்கினார்கள். காவல்துறை உங்கள் நண்பன் என்று சொல் அளவில் இல்லாமல் செயலில் நடத்திக் காண்பித்தார்கள்.

மறுமை நாளில் மனிதர்களிடையே நீதிபதியான அல்லாஹ் விசாரணையைத் துவங்கும்போது "கொலை" பற்றியே முதலில் விசாரிப்பான்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்...

கொலை செய்யப்பட்டு இவ்வுலகில் இறந்தவன் தன் தலையைக் கையில் தூக்கி வைத்துக்கொண்டு இறைவா இன்ன மனிதன் என்னை அநியாயமாகக் கொலை செய்துவிட்டான். அவனிடம் காரணம் கேள் என்று கூறுவான்.

**இவ்வுலகில் யாராவது அநியாயமாக ஒருவரைக் கொலை செய்தால் அது இவ்வுலகிலுள்ள அனைத்து உயிர்களையும் கொன்றதற்கு சமமாகும். என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

**பிற உயிர்களிடத்தில் இரக்கம் கொள்ளாதவர் மீது இறைவன் இரக்கம் கொள்ள மாட்டான் என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**



# உச்ச நீதிமன்ற நீதி..?

## உச்ச நீதிமன்றத்தை உலுக்கிய வழக்கு

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ரஞ்சன் கோகய் மீது ஒரு குற்றச்சாட்டு. அது, அவர் பதவியிலிருக்கும் நாட்களில், ஒரு பெண் பணியாளரோடு தவறாக நடந்து கொண்டார் என்பதே அது.

இந்தக் குற்றச்சாட்டை விசாரிக்க முதலில் நீதிபதி ரஞ்சன் கோகையின் தலைமையிலேயே ஒரு குழுவை அவர்களே அமைத்துக் கொண்டார்கள். அதை நீதி துறையியிலிருப்பவர்களும், ஏனையவர்களும் கடுமையாக எதிர்த்தார்கள். விமர்சனங்கள் குவிந்தன.

வந்த நெருக்கடி தாளாமல், ஒரு (in House Committee) எனச் சொல்லக்கூடிய, உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட குழு ஒன்றை அமைத்தார்கள். அந்தக் குழு விசாரணை என்ற பெயரில் ஒரு பெரும் அநீதியை அந்தப் பெண்ணுக்கு இழைத்தது.

2018 அக்டோபர் மாதத்தில் இந்தப் பெண்ணிடம் உச்ச நீதிமன்ற நீதிபதி தவறாக நடந்துகொண்டார். ஆனால் அந்தப் பெண், பாபரி மஸ்ஜித் வழக்கு வேகமாக நடந்து கொண்டிருந்தபோதுதான், தனக்கு நடந்த பாலியல் வன்மம் பற்றி புகார் கொடுத்தார் என்பதில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்தன. இந்தப் புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தால் நீதிபதி ரஞ்சன் கோகை சிறைப் பிடிக்கப்பட்டிருப்பார். அவருக்கு சிறைவாசம்

புகுமுன்...

அன்பார்ந்த வாசகர்களே!

நமது இந்திய உச்ச நீதுமன்ற நீதிபதிகள் தொடர்ந்து அநீதியைத் தீர்ப்பாக வழங்கி வருகின்றார்கள். பின்னர் ஆளும் பாரதீய ஜனதா கட்சியிடமிருந்து கைமாறுகளைப் பெறுகின்றார்கள். இதனை மக்கள் அனைவரும் அறிவர்.

ஆனால், அவர்களால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. காரணம் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு வந்துவிடும்.

ஆனால், இங்கே உச்ச நீதிமன்றத்தில் ஓர் வழக்கறிஞர், உச்ச நீதி மன்றத்திலேயே அதன் அநீதிகளை உரக்க முழங்கி இருக்கின்றார். அநீதியாளர்கள் முன் தைரியமாக நின்று நீங்கள் செய்வது அநீதி என்று கூறி இருக்கின்றார்.

படியுங்கள் கடைசி வரை,
பரப்புங்கள் கடைசி குடிமகன்கள் வரை

வேண்டுமா? அல்லது (ஒய்வுக்குப்பின்), சுக வாழ்க்கை வேண்டுமா? என்ற கேள்வி முன் வைக்கப்பட்டது. ஆனால் அவர் பாபரி மஸ்ஜித் வழக்கில் ஓர் இந்துத்துவ தீர்ப்பை வழங்கி தன்னைக் காப்பாற்றிக் கொண்டார்.

சுகவாழ்வை சுவைத்திட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் பெற்று, பெருவாழ்வு ஒன்றை தனதாக்கிக் கொண்டார். அத்தோடு அவர் மனைவிக்கும் ஒரு பதவி பரிசாகத் தரப்பட்டது. அவரைச்சுற்றி பாதுகாப்பு.

இவையெல்லாம் நாடாளும் பாசிஸ்ட்டு களின் நாடகம் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

## பெண் ஊழியரின் புகார் பொய்யா - உண்மையா ?

ஆனால், அந்தப் பெண் ஊழியர் நீதிபதி ரஞ்சன் கோகை மீது தந்த புகார் உண்மையா? பொய்யா? என்ற விவாதம் பின்னர் எழுந்தது. அந்தப் பெண் ஊழியர் தந்த புகாரில் உண்மை உண்டு என்பது இப்போது உண்மையாகி இருக்கின்றது.

அதனை ஆளும் வர்க்கத்தினர் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பாபரி மஸ்ஜித் தீர்ப்பைத் தங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொண்டார்கள்.

அந்த பெண் பணிப்பெண், நீதிபதி ரஞ்சன் கோகைக்கு இணங்க மறுத்த நாள் முதல் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட் டார். அடிக்கடி பணியில் இடமாற்றம் செய்யப் பட்டார். அவற்றைப் பற்றி கேள்விப் கேட்ட போது அவர் பணியிலிருந்து தூக்கி வீசப்பட்டார். சில பொய் வழக்குகளைப் புனைந்து சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார். பின்னர் பிணையில் வந்திருக்கின்றார். அவர் விசார ணையை எதிர்கொள்ளும் போதும் அந்தப் பொய் வழக்குகள் அப்படியே இருந்தன.

அவருடைய சொந்தக்காரர்கள், இராஜஸ் தானிலும், உத்திரப் பிரதேசத்திலும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களெல்லாம் தொல்லை களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அவர்களில் அரசு பணியில் பலர் இருந்தார்கள். அவர்களும் பணியிலிருந்து தூக்கி வீசப்பட்டார்கள்.

இந்தப் பெண் ஊழியர் போகுமிடமெல்லாம் சில ரவுடிகள் பின் தொடர்ந்தார்கள். இவற்றையெல்லாம் பற்றி புகார் செய்தபின், நீதி விசாரணை என்ற பெயரில் நடந்த நாடகத்தின் போதும்அவர் தாங்கொண்ணா வேதனைக்கு உள்ளாக்கப்பட்டார். 29, ஏப்ரல் 2019 முதல் அவரது புகாரின் மீது விசாரணை நடந்தது.

இந்த விசாரணையின்போது எனக்கு உதவிக்கு ஒரு ஆள் வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார், அந்தப் பெண்மணி. ஆனால் மறுத்துவிட்டது உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப் பட்ட "In House Committee" என்ற விசாரணை குழு. எனக்கு காது பிரச்சனை இருக்கின்றது. சில நேரங்களில் வலது காது சரியாகக் கேட்ப தில்லை. சில நேரங்களில் இடது காது சரியாக கேளாது. ஆகவே நீதிபதிகள் கேட்கும் கேள்வி களை சரியாகப் புரிந்துகொண்டு சரியாக எனது பதிலைப் பதியவைக்க ஒரு துணை வேண்டும் எனக்கேட்டார். முறையிட்டார். (அ)நீதிபதிகள் அதனைப் பொருட்படுத்தவில்லை. உதவிக்கு வர யாரையும் அனுமதிக்கவில்லை.

தொடர்ந்து விசாரணை மே-2019, 5,6 தேதி களில் நடந்தது. விசாரணை உச்ச நீதிமன்றத்தின் விருந்தினர் மாளிகையில்தான் நடைபெற்றது. அங்கே நுழைவாயிலில் சோதனை என்ற பெயரில் அவருடைய முடியைக்கூட இழை இழையாக சோதனை செய்திருக்கின்றார்கள். இதிலிருந்து இதர சோதனைகள் எப்படி நடந் திருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள இயலும். இதனிடையே அவருடைய வீட்டில் காவல்துறை யினரை ஏவி ஒரு பயங்கர சோதனை.

விசாரணைக்கு உள்ளே சென்றவுடன் நீதிபதி பாப்டே (இப்போதைய தலைமை நீபதி) தான் தன்னை முன்னிலைப்படுத்தி பேசி இருக்கின்றார். எடுத்த எடுப்பிலேயே "நாங்கள் பாலியல் வன்கொடுமை வழக்கு இங்கே விசாரிக்க வில்லை. இது "In House Committee" என்ற உச்ச நீதிமன்ற விசாரணைக் குழுவின் விசாரணையுமில்லை. உன் வேலை உனக்குத் திரும்பக் கிடைத்துவிடும், என்றெல்லாம் அளந்து கொட்டி இருக்கின்றார் நீதிபதி பாப்டே.

இதற்கு அந்தப் பெண் ஊழியர் சொன்ன ஒரே பதில், "எனக்கு வேலை வேண்டாம். நீதிதான் வேண்டும்." பெண் ஊழியரின் இந்தத் தீர்க்கமான

பதில் ஓர் உண்மையை உரக்க முழங்குகின்றது. அது, அந்தப் பெண், நீதிபதி ரஞ்சன் கோகையால் கொடுமையான பாலியல் வன்மத்திற்கு ஆளாக் கப்பட்டுள்ளாள். அதனால்தான் அவள் தனது வேலை, சம்பளம், அதனால் கிடைக்கும் வாழ்க்கை இவற்றையெல்லாம் பற்றிக் கவலைப் படாமல், தனது பெண்மையை பேராபத்திற் குள்ளாக்கிய நீதிபதி ரஞ்சன் கோகை தண்டிக் கப்பட வேண்டும் என்பதில் குறியாக இருந்திருக் கின்றார்.

## மீண்டும் மிரட்டல்

தன்னை மீளாத் துயருக்கு ஆளாக்கியவர் மீது ஒரு துரும்பும் விழாது என அங்கலாய்த் திருக்கின்றார். அவர் எனக்கு எதுவும் வேண்டாம். நீதிதான் வேண்டும் எனக் கூறியதின் பொருள் இதுதான்.

இவையெல்லாம் முதல் விசாரணை என்ற பெயரில் ஏப்ரல் 29, 2019-இல் நடைபெற்றது.

ஏப்ரல் 26,27,28 ஆகிய நாட்களிலும் சில மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் 29-இல் விசாரணை 12.30 மணிக்குத் தொடங்கி 4 மணிக்கு முடிந்திருக்கின்றது. தான் சொல்வதையெல்லாம் பதிவு செய்கின்றார்களா எனப் பார்த்திருக்கின்றார் அந்தப் பெண். இல்லை. அங்கே சொல்பவற்றைப் பதிவு செய்திட வந்தவர், முறையான தட்டச்சு உதவியாளர் அல்ல. விசாரணை முடியும் தருவாயில் நீதிபதி பாப்டே சிலவற்றை இந்த அம்மணி சொன்னதாகச் சொல்லி இருக்கின்றார். அதைத்தான் பதிவு செய்திருக்கின்றார் தட்டச்சர் என்ற பெயரில் வந்தவர்.

## வீடு வரை ரவுடிகள்

மாலை 4 மணிக்கு விசாரணை முடிந்த பின் இந்தப் பெண்மணி தன் கணவருடன் வீடு திரும்பி இருக்கின்றார். அவரை சிலர் "பைக்"-இல் பின் தொடர்ந்திருக்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் ஒரு கடிதமாக எழுதி நீதிபதிகளுக்கும், ஊடகங்களுக்கும் அனுப்பு கின்றார். இந்தக் கடிதமும், அந்த அம்மணிக்கு நடந்த கொடுமைகளும் நாடெங்கும் பேசப் படுகின்றன.

அதனால் மே மாதம் (2019) தொடக்கத்தில் அந்த விசாரணையில், நீதிபதி பாப்டே, நீதிபதி மிஸ்ரா முதற்கொண்டு அனைவரும் சீரியசாக ஆகிவிடுகின்றார்கள். சில கேள்விகளைக் கேட்டுவிட்டு அனுப்பிவிடுகின்றார்கள். மே-7, 2019 இதில் நீதிபதி ரஞ்சன் கோகை மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டு உப்பச் சப்பற்றது என அவருக்கு "உத்தமர்" சான்று வழங்கப்படு கின்றது.

இந்த அம்மணி விரக்தி வயப்படுகின்றார்.

இதனிடையே பாபரி மஸ்ஜித் தீர்ப்பு நவம்பர்-2019-இல் வருகின்றது. ஆட்சியிலிருக்கும் கொடுங்கோலர்களின் விருப்பம். தேர்தல் வாக்குறுதி எல்லாம் நிறைவேறுகின்றது.

நீதிபதி ரஞ்சன் கோகை 2019 நவம்பர்-17-இல் ஓய்வு பெறுகின்றார். குடியரசு தலைவரின் விருப்பத்தின்படி மார்ச் 2020-இல் நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கப்படுகின்றார். அவரும் அதை தனக்குக் கிடைத்த சன்மானமாகக்கருதி அகமலர்ச்சியுடன் பெற்றுக் கொள்கின்றார். பதவி ஏற்பு பவிசாக நடைபெறுகின்றது.

பின்னர், இத்தனைக்கும் உதவிய அந்தப் பாலியல் வன்கொடுமைக்குப் பலியான சகோதரிக்கு சன்மானம் தருகின்றார்கள்.

அவர்மீது இருந்த அத்தனை குற்றச்சாட்டு களும் வழக்குகளும் விசாரணையின்றி பொத்தொன்று குப்பைத் தொட்டியில் வீசப்படுகின்றன. அவர் அதே பதவியில் (Asst. Grand-II) பணியில் சேர்க்கப்படுகின்றார்.

அவர் பணியிலிருந்து நீக்கப்பட்ட நாள் முதல் பணியில் மீண்டும் இணைக்கப்பட்ட நாள் (22-01-2020 வரை) அவர் பணியிலிருந்ததாக எடுத்துக் கொள்ளப்படு கின்றது. இந்தக் காலம் முழுமைக்குமான சம்பளம் சல்லிகாசு கூட குறையாமல் சரியாக கணக்குப் பார்த்து வழங்கப் படுகின்றது. அனைத்தையும் பெறுகின்றார்.

தனக்கு "பிரசவ விடுப்பு" (Maternity Leave) வேண்டும் எனக்கேட்டு விடுப்பில் சென்று விடுகின்றார். இத்தோடு நீதிபதி ரஞ்சன் கோகை விவகாரம் நிற்கவில்லை. நீளுகின்றது.


இப்போது உச்சநீதிமன்றத்தில் புதுப் பொலிவுடன் வந்திருக்கின்றது.

## பிரசாந்த் பூஷன் VS மீண்டும் ரஞ்சன் கோகை 6-8-2020 Telegraph

### பிரசாந்த் பூஷன்

இவர் பிரபல வழக்கறிஞரும், இந்தியாவின் முன்னாள் சட்ட அமைச்சருமான ஷாந்தி பூஷனின் மகன்.

பிரசாந்த் பூஷனின் தந்தை ஷாந்தி பூஷன் நீதித்துறையில் பல சாதனைகளைச் சாதித்தவர்.



இந்திரா காந்தி சர்வ அதிகாரத்தோடும் டெல்லியில் பிரதமாக வீற்றிருந்தபோது அவரை ரேபரேலி தொகுதியிலிருந்து நாடாளு மன்றத் திற்குத் தேர்ந்தெடுத்தது செல்லாது என வாதிட்டு அவரை பதவி இறக்கம் செய்தவர். அவர் அலஹபாத் நீதிமன்றத்தில் தொடுத்த வாதங்கள் உலக அரங்கில் பிரசித்திப் பெற்றவை.

அடுத்து நமது நாடாளுமன்ற தாக்குதலில் பிரதான குற்றவாளியாகவும், மூளையாகவும் காட்டப்பட்ட SAR ஜீலானி (டெல்லி பல்கலைக்கழகப் பேராசிரியர்)க்காக வாதிட்டு, அதுவும் இலவசமாக வாதிட்டு வழக்கிலிருந்து விடுவித்தவர்.

அதேபோல் ஒரு கட்டத்தில் நமது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகள் பலர், ஊழல் மயமானவர்கள் எனக்கூறினார். உச்ச நீதிமன்றம் அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர்ந்தபோது தனது கூற்றுக்கு ஆதாரங்கள் உண்டு என அடித்துப் பேசினார். அவரை சிறையில் அடைத்து விடுவோம் என மிரட்டியபோது சற்றும் தயங்காமல் இந்த நாட்டின் நீதித்துறை சீர்பெற நான் சில நாட்கள் சிறையிலிருக்கவும் தயார் என தயங்காமல் கூறியவர்.

இப்படி நீதியின் மேல் நாட்டங் கொண்டவரின் மகன்தான் பிரசாந்த் பூஷன் அவரும் உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர். Senior Council

இவரும் பலமுறை உச்ச நீதிமன்றம் நீதி பிறழ்ந்தபோது பொதுநல வழக்குகளைத் தொடர்ந்தவர். நாட்டின் அநீதிகள், அத்து மீறல்கள் இவையெல்லாம் கரைபுரண்டு ஓடிய போது, பொதுநல வழக்குகள் வழி அவற்றை சீர் செய்தவர். இந்த வழக்குகளில் உச்சநீதி மன்றமே அவரைப் பலமுறை பாராட்டி இருக்கின்றது.

ஆனால் அதே உச்ச நீதிமன்றம் அவர் மீது இப்போது நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றை தொடர்ந்திருக்கின்றது. காரணம் அவர்,

கடந்த ஆறு ஆண்டுகளாக இந்தியாவின் தலைமை நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் நடத்தைகளால் இந்திய ஜனநாயகத்தை அழித்து விட்டார்கள் எனக் கூறியதுதான்.

அத்தோடு நமது தலைமை நீதிபதி ஒரு ஐம்பது லட்ச ரூபாய் பைக்கில் பவனி வந்தார். (இந்த பைக் சங்கப் பரிவாரத்தைச் சார்ந்த ஒருவடைய பைக்) என்பதைப் பற்றி கருத்து கூறினார். என்ற இரண்டு குற்றச்சாட்டுகளுக்காக, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு!

ஆனால், அவருக்காக உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய மூத்த வழக்கறிஞர் துஷ்ஷாந்த் தேவ் - முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகை மீதான பாலியல் வன்மத்தை வம்பிற்கிழுத்தார்.

அவர் கூறினார் :

"முன்னாள் தலைமை நீதிபதி மீது பாலியல் பலாத்கார குற்றச்சாட்டைச் சுமத்திய பெண் மீண்டும், அதே பணியில், சகல பணி பயன் களோடும் சேர்க்கப்பட்டிருக்கின்றார். அவர் மீதுள்ள அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டுள்ளன. அப்படியானால் அவர் சொன்னபாலியல்குற்றச்சாட்டுக்கள்அனைத்தும் உண்மை என நிரூபணமாகின்றது. நாட்டின் உச்சபச்ச நீதித் துறையின் மேல் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு உண்மையெனில் கடவுளுக்காக

*நிச்சயமாக அதை மூடி மறைக்காதீர்கள்."*

"அந்தப் பணிப்பெண் சொன்னது பொய்யாக இருக்குமேயானால், அவளை நீங்கள் மீண்டும் பணியில் அமர்த்தியது மிகப்பெரிய நீதிமன்ற அவமதிப்பு. இந்த விவகாரத்தில் கண்ணை மூடிக்கொண்ட உச்ச நீதிமன்றம், உண்மையைச் சொன்ன ஒரே காரணத்திற்காக, ஒரு மூத்த வழக்கறிஞர் மீது நீதிமன்ற அவமதிப்பு என்றால், உலகம் சிரிக்கும்" என்றார் (பிரசாந்த் பூஷனின் வழக்கறிஞர் புஷாந்த் தேவ்.)

*உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகையைப் பற்றி இன்னொரு அதிர்ச்சி செய்தியைப் பதிவு செய்தார். அது,*

"ஒரு தலைமை நீதிபதி, தான் செய்த பாலியல் வன்முறை வழக்கை தானே விசாரிப்பேன் என்கின்றார். பின்னர் ஆளும் கட்சியின் சலுகை யில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகின்றார். அதில் "Z Plus" என்ற உயர்தர பாதுகாப்பையும் பெறுகின்றார்."

"இது அவர் வழங்கிய முக்கியத் தீர்ப்புகளில் பெரும் கேள்விகளை எழுப்புகின்றது. அதாவது ரபேல் விமான ஊழல் வழக்கு, அயோத்தி (பாபரி மஸ்ஜித்) தீர்ப்பு. சி.பி.ஐ. இயக்குநர் விஷயத்தில் வழங்கிய தீர்ப்பு, என்பனவாகும். - (இதையும் உச்சநீதிமன்றத்தின் பார்வைக்கு வைத்தார் வழக்கறிஞர் துஷாந்த் தேவ்.)

"அதேபோல் அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 370ஐ நீக்கியது தொடர்பான வழக்கு. பிரிவு 35A-ஐ நீக்கியது தொடர்பான வழக்கு, குடியுரிமை திருத்தச் சட்டத்தின் (2019) பற்றிய வழக்கு இவற்றில் உச்ச நீதிமன்றம் நடந்துகொண்டது. இவையெல்லாம் வழக்கறி ஞர்கள், நீதியின்பால் அக்கறை உள்ளவர்கள், பொதுமக்கள் இவர்களிடம் மிகப்பெரிய ஏமாற்றங்களையும், ஏக்கத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றன."

"முக்கியமான வழக்குகள், அதிலும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், ஒருசில நீதிபதிகளுக்கு மட்டுமே செல்லுகின்றது. அது ஏன்? என துஷாந்த் தேவ், பிரசாந்த் பூஷனின் வழக்கறிஞர் கேள்விகளை எழுப்பினார்.

*இந்திய நீதித்துறையின் வரலாற்றில் மிகவும் மட்டமான நிகழ்வு ஒன்று நடந்தது என்றால் அது ஜனவரி 12,2018 -இல் தான்.* அதில்தான் மூன்று அமர்வு, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எல்லா வரையறைகளையும் கடந்து பத்திரிகையாளர்கள் சந்திப்பு ஒன்றை நடத்தி னார்கள். அதில் உச்ச நீதிமன்றம் சரியாக இல்லை, பல விரும்பத்தகாத நிகழ்வுகள் நடந்தன என்றார்கள். அப்போதெல்லாம் இல்லாத அவமதிப்பு இப்போது எங்கிருந்து வந்தது?"

*பிரசாந்த் பூஷன் மொத்த நிறுவனத்தை குறை கூறவில்லை. அவர் சில நீதிபதிகளைத்தான் கூறுகின்றார்.*

**பிரசாந்த் பூஷனின் வழக்கறிஞர் இப்படிக் கூறினார்...**

**இப்படியெல்லாம் வாதிட்டதற்காக என் மீதும் நீதிமன்ற அவமதிப்பு வரலாம். நான் இங்கே சொன்னதும் பிரசாந்த் பூஷன் சொன்னதும், நீதிமன்றத்தை அவமதிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக, நீதியும், நீதிபதிபாலரும் சீரமைக்கப்பட வேண்டும் என்ற அன்பாலும், அக்கறையாலும்தான்.**

**ஆகவே பிரசாந்த் மீதுள்ள அவமதிப்பு வழக்கை கைவிடுங்கள்.**

**பிரசாந்த் பூஷன் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றார்கள் நீதிபதிகள். அவர் மன்னிப்புக் கேட்க மாட்டேன். மன்னிப்புக் கேட்பது, என் மனசாட்சிக் கும், நீதிக்கம் அவமதிப்பு எனக்கூறி ஓர் அறிக்கையையும் தாக்கல் செய்தார். நீதிபதிகள் வழக்கை செப்டம்பர் 10-க்கு தள்ளி வைத்தனர்.**

**நமது விருப்பம்**

**நீதி நிலைக்க, ஆறு ஆண்டுகளாக 4 நீதிபதிகளும் கொடுத்த தீர்ப்புகளை ரத்து செய்து விட்டு, அனைத்து வழக்குகளும் நடத்தப்பட வேண்டும்.**

Source : The Print,
- MGM

**இந்திய விடுலைப் போரின் வனப்பானதொரு பகுதி மறைந்தே கிடக்கின்றது.**

நாட்டு மக்களின் கவனமும், கவலையும் வேறு பக்கமாகத் திருப்பப்பட்டு விட்டதால், வரலாற்றின் அரியபல நிகழ்வுகள் நிகழ்கால தலைமுறையினருக்கு கிடைக்காமலேயே போய்விடுகின்றன.

# விடுதலைப் போரில் ஃபக்கீர்கள்



இந்த வகையில் தென்னிந்தியாவில் நடைபெற்ற விடுதலைப் போர்களைப் பற்றி பேராசிரியர் சின்னையன் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் பாராட்டுக்குரியன. காலத்தால் நின்று வாழும் ஓர் நிரந்தர பணியினை அவர்கள் செய்திருக்கின்றார்கள்.

அவர்கள், நான் தென்னிந்தியாவில் நடந்த விடுதலைப் போர்களைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டபோது, விடுதலைப்போரில் ஒப்பற்ற பணிகளை ஆற்றிய இன்னொரு இயக்கத்தைக் கண்டெடுத்தேன். அதுதான் பக்கீர்கள் நடத்திய வீடு தலைப் பேரியக்கம் என்று கூறி பக்கீர்கள் இயக்கத்தைப் பற்றி தகவல்கள் அனைத்தையும் ஒன்று திரட்டித் தந்திருக்கின்றார்கள்.

பேராசிரியர் சின்னையன் எழுதிய The First Struggle for Freedom என்ற நூலில் ஃபக்கீர்கள் இயக்கம் பற்றி தன்னுடைய வேலூர் சிப்பாய் களின் போர் *1806*. (The Vellore Mutiny 1806.) என்ற நூலில் விளக்கமாகக் குறிப்பிட்டிருப்பதாக கூறி இருந்தார்கள்.

முதல் நிலை தகவலை எனக்குத் தந்த வரலாற்று ஆர்வலர் செ.திவான் அவர்களிடம் இந்த இராண்டாவது நூலும் வேண்டும் எனக் கேட்டேன். ஆனால், இந்த இரண்டாவது நூல் தனக்கு எங்கேயும் கிடைக்கவில்லை என்றும், அது அதை எழுதிய பேராசிரியர் சின்னையன் அவர்களிடமே இல்லை என்றும் கூறினார்கள்.

சென்னை கன்னிமாரா நூல் நிலையம் கைகொடுத்தது. அங்கே நூல் இருந்தது. உண்மை நகலும் எடுக்க முடிந்தது.

ஆக ஃபக்கீர்கள் இயக்கம் பற்றி நாம் வெகு நாட்களாக திரட்டிட்ட தகவல்களுக்கு வலு சேர்ப்பதாகவும் பல அரிய தகவல்களைத் தருபவைகளா கவும் இந்த நூல்கள் அமைந்தன. இந்த இரண்டு நூல்களும் இன்னும் நாம் ஆங்காங்கே திரட்டிய

தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த அட்டைப் படக்கட்டுரையை வடிவமைக் கின்றேன். இதில் அகழ்ந்தெடுத் திட வேண்டிய பகுதிகள் ஏராளம்! ஏராளம்! இனிவரும் தலைமுறையினர் இதைச் செய்யலாம்.

(இன்ஷா அல்லாஹ்)

## பக்கீர்கள் என்றால் யார்?

பக்கீர்கள், மிக எளிதான, எளிமையான வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொள்பவர்கள். எந்த இடத்திலும் தரித்தும் இருக்கமாட்டார்கள். நாடோடிகளாய் நாடு சுற்றிக் கொண்டிருப் பார்கள்.

உலகின் எந்தப் பகுதிக்கும் இவர்கள் மிகவும் எளிதாகச் சென்று விடுவார்கள். வாழ்க்கை தேவைகளை ஒன்றாக கட்டி எடுத்துச் சென்றிட வேண்டும் என்ற தேவையே இல்லாதவர்கள். எடுத்துச் சென்றிட பெரும் பொக்கிஷங்களோ, ஏன் பெட்டி படுக்கைகளோ கூட இல்லாதவர்கள். சேர்த்து வைப்பதற்கும் பொருளில்லை. அப்படியே பொருள் சேர்ந்தாலும் சேர்த்து வைப்பதில்லை. இதனால் அவர்கள் ஏற்றுக் கொண்ட இலட்சியத்தில் உறுதியாக இருந்திடும் வாய்ப்பினை பெற்றவர்கள். இழப்பதற்கெதுவு மில்லாதவர்கள்.

உலக ஆசைகள் அவர்களின் இலட்சிய வேட்கையை தடுத்திம் பலமற்றவை.

எடுத்துக்கொண்ட இலட்சியத்தை உலகெங்கும் எடுத்துச் சொல்லிடும் வாய்ப்பு களும் வாய்க்கப் பெற்றவரகள்.

அகராதிகள் பக்கீர் என்ற சொல்லுக்கு நாடோடிகளாய் திரியும் உலக பற்றற்ற முஸ்லிம்கள் என பொருள் தருகின்றன. அரபி மொழியில் குறைந்தபட்ச உணவு தேவைகளை உடையவர். இஸ்லாமியக் கொள்கைகளின் அடிப் படையில் இறைவன் மட்டுமே தேவையற்றவன். மனிதர்கள் அனைவரும் தேவையுடையவர்கள். அந்த அடிப்படையில் ஃபக்கீர்களும் தேவையு டையவர்களே. இவர்கள், ஃபக்கீர்கள் தங்கள் தேவைகளைக் குறைத்துக் கொள்பவர்கள். பார்சி மொழியில் தர்வேஷீர்கள் என்றும் இவர்கள் அழைக்கப்படுவர்.

ஃபக்கீர்களில் மிகப்பெரிய சக்தி



என்னவெனில் அவர்களை எவ்வளவு சிக்கலான செய்தியையும் மக்களுக்கு மிக எளிதாக புரியும்படி சொல்லிவிடுவார்கள்.

அதேபோல் தாங்கள் சொல்லிடவந்த செய்தியை மக்கள் மனதில் பதியும் படியும் சொல்லி விடுவார்கள். நாடோடிகளைப் போல் நடமாடிக் கொண்டிருப்பதால் அவர்கள் மக்களை மிக எளிதாக சென்றடைந்து விடுவார்கள்.

இவர்கள் 'தப்ஸ்' என்றொரு ஓசைக் கருவியை பயன்படுத்தி தங்கள் வருகையை அறிவித்து விடுவார்கள். மக்கள் வந்து குழுமிவிடுவார்கள். நயம்பட தாங்கள் சொல்ல வந்த செய்தியைச் சொல்லி விடுவார்கள். கதை, கவிதை, நாட்டுப்புறப் பாடல்கள் இவையெல்லாம் இவர்களின் ஆயுதங்கள்.

அதேபோல் மக்கள் குழுமம் விழாக்களிலும் தவறாமல் தரிசனம் தந்து, அங்கேயும் மக்களின் கவனங்களைத் தங்கள் பக்கம் திருப்பிவிடுவார்கள். தாங்கள் சொல்லவந்ததை மக்கள் மனதில் பதிய வைத்துவிடுவார்கள்.

மக்களிடம் செய்தி மிக எளிதாகச் சென்றடைய உரிய வகையில் மிக ளிதாக, எளிமையான கவிதைகளை இயற்றுவதில் இவர்கள் வல்லவர்கள். நாசுக்காகப் பேசிய நெஞ்சை நெழிகச் செய்வார்கள்.

அந்தக் கவிதைகளை எதுகை மோனையோடு எளிய நடையில் எளிய நாட்டுச் சொற்களில் மக்களிடம் சேர்த்து விடுவார்கள். ஏறத்தாழ தமிழில் வரும் நாட்டுப்புறப் பாடல்கள் போல் அமையும். அதேபோல் ஓரங்க நாடகங்கள் (Puppet Show) என அறியப்படும் பொம்மை நாடகங்கள். இவற்றின் வழியாகவும் அவர்கள் பட்டணங்கள் முதல் பட்டித்தொட்டிவரை தங்கள் கருத்துக்களை கொண்டு சேர்த்து

விடுவார்கள். இவர்கள் இயல்பாகவே அறிவுக்கூர்மை வாய்க்கப் பெற்றவர்கள். நாடோடி வாழ்க்கை அவர்கள் கைவந்த கலை. விரும்பி ஏற்றுக் கொண்டவை.

இதனால் உலகின் ஏதோ ஓரிடத்தில் பிறந்து உலகின் ஏதோ ஓர் இடத்தில் இறந்து அடக்கப் பட்டிருப்பார்கள். விளம்பர கேட்கையற்ற இவர்களுக்கு அல்லாஹ்வே கூலி தர போதுமான வன். ஆனால் ஒர் சிறந்த இலட்சியத்தைச் சுமந்து சென்றிருப்பார்கள். அதில்பல வெற்றிகளையும் ஈட்டி இருப்பார்கள்.

இரட்டைப் பொருள்பட பேசுவதிலும் பாடுவதிலும் இவர்கள் வல்லவர்கள்.

இதனால் மிகவும் இரகசியமாகச் சொல்லிட வேண்டியவற்றையும் நயம்பட பாடி எல்லோ ருக்கும் புரியும்படி நடுத்தெருவில் நின்று சொல்லி விடுவார்கள். அவற்றிற்கு இரண்டு பொருள் இருப்பதால் இவர்களை யாரும் குற்றம் பிடிக்க இயலாது.

இப்படி தங்களுடைய கருத்துகளை வேடிக் கையாக பரப்பிவிட்டு அதற்கு விரும்பும் மக்கள் தரும் சன்மானத்தைப் பெற்று வாழ்ந்திடுவார்கள்.

ஆங்கிலேயர்கள் ஃபக்கீர்களிடம் அதிசய ஆற்றல்கள் உண்டு என்பதை நம்பினார்கள். ஏனெனில் ஃபக்கீர்களை Religious Mendicants அதிசய ஆன்மிக சக்தி உள்ளவர்கள் என்றுதான் அழைத்தார்கள். இஃதோர் மூட நம்பிக்கை. ஆனால் இந்த நம்பிக்கையை ஃபக்கீர்கள், ஆங்கிலேயர்களுக்கெதிராக தாராளமாகப் பயன்படுத்தினார்கள்.

இதனால் ஃபக்கீர்களை நேரடியாக தாக்கிட தயங்கினார்கள். இது ஃபக்கீர்களை ஆங்கி லேயர்களின் கெடுபிடிகளிலிருந்து பாதுகாத்தது.

இதனால் அவர்கள் ஆங்கிலேயர்களுக் கெதிரான பிரச்சாரத்தை தங்கு தடையின்றி செய்திருக்கின்றார்கள். இந்தப் பிரச்சாரம் சிரியதொரு உத்தியுடனே நடந்தது.

வெறும் பிரச்சாரத்தோடு நின்றுவிடவில்லை. ஃபக்கீர்கள் தேவைப்படும்போதெல்லம் அவர்கள் ஆயுதம் தாங்கி ஆங்கிலேயர்களை அழிக்கவும் செய்தார்கள். இது இந்திய விடுதலைப் போரின் முக்கியப் பகுதி. ஆனால் மறைந்துபோன ஒன்று.

ஆங்கிலேயர்களுக்கெதிராகப் போராடிட தொடங்கியபின் ஃபக்கீர் இயக்கத்தையும் ஆங்கிலேயர்கள் விட்டு வைக்கவில்லை.

பிளாசிப் போருக்குப் பின் ஃபக்கீர்கள் மிகப் பெரியதொரு போரை ஆங்கிலேயர்களுக் கெதிராக தொடுத்து வந்தார்கள். இவர்களை அழித்தொழிக்கும் எண்ணத்துடன் ஆங்கிலே யர்கள் இவர்கள் இருந்த இடங்களையெல்லாம் சூறையாடினார்கள். 1772-இல் இவர்கள் பெங்கால் என்ற வங்காளப் பகுதியிலிருந்து துரத்தப்பட்டார்கள். 1800-களில் ஃபக்கீர்கள் ஆங்கிலேயர்கள் மீது நடத்திவந்த திடீர்த் தாக்குதல்கள் ஓர் முடிவுக்கு வந்தன.

18-ம் நூற்றாண்டுகளில் ஃபக்கீர்கள் ஆங்கிலேயர்களுக்கெதரான இராணுவங்களில் இணைவது என்பது மிகவும் சர்வ சாதாரணமான செய்திகளாக இருந்தன.

ஜெய்ப்பூர் ராஜாவின் படையில் பெருவாரி யான ஃபக்கீர்கள் இருந்தார்கள். வங்காளத்தில் மீர் காசிமுடைய படையிலும் ஏராளமான ஃபக்கீர்கள் இருந்தார்கள். ஜெய்ப்பூரில் ஹோல்கர், சிந்தியா ஆகியோரின் படையிலும் ஃபக்கீர்கள் பெருவாரியாக பங்கெடுத்துக் கொண்டார்கள்.

18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கி லேயர்கள் எழுதிய கடிதங்களில் ஃபக்கீர்களைப் பற்றிய பீதியும் பயமும் தெளிவாகப் பளிச்சிடு கின்றன. அவர்கள் தங்கள் கடிதங்களில் (Nomadic Bodies Described as Sanyasi Fakeers) அவர்களை சன்னியாசி ஃபக்கீர் என வழங்கப்படும் நாடோடிகள் என சித்தரித்தார்கள்.

பல ஃபக்கீர்கள் 19-ம் நூற்றாண்டு வரை ஆங்காங்கே துப்பாக்கியேந்தி ஆங்கிலேயர் களோடு மோதி வந்தார்கள்.

ஃபக்கீர்களின் தலைவரை மேஹர் என்றழைப் பார்கள். இந்தியாவில் பல்வேறு புரட்சிப் பணிகளையும் செய்தவர்கள் இந்நாட்டில் உருவான ஃபக்கீர்கள் தாம். தென்னகத்தில் ஃபக்கீர்களின் இயக்கம் மைசூரை தலை நகராகக் கொண்டு இயங்கிற்று.

(The Vellore Mutiny 1806 by Dr.P.Chinnian)



# ஃபக்கீர்களின் விடுதலைப் போர் தொடக்கம்...

கிழக்கு இந்தியாவில் பிளாசி போர் நடந்தது. அதாவது அன்றைய கொல்கத்தா நகரிலிருந்து சுமார் 200 கிலோ மீட்டர் தூரத்தில் அமையப் பெற்ற இடமே பிளாசி.

இங்கே வைத்துத்தான் ஆங்கிலேயர்களும், சிராஜூத் தௌலாவுக்குமிடையே (ஜூன் 23,1751-இல்) போர் நடந்தது.

கீழறுப்பு வேலைகள் சூழ்ச்சி, சூதுமதி ஆகியவற்றால் சிராஜூத் தௌலா அவர்களை வென்றார்க்ள ஆங்கிலேயர்கள்.

இந்தப் போரில் கிடைத்த வெற்றி ஆங்கிலேயர்களுக்கு கிழக்கிந்தியாவில் ஓர் பிடிப்பை ஏற்படுத்திற்று.

ஆயுதம் தாங்கி ஆங்கிலேயர்களை எதிர்ப்பதிலும் இந்தப் போர் ஓர் திருப்புமனையாகவே இருந்தது.

அதன்பிறகு ஆயுதம் தாங்கி ஆங்கிலேயர்களை எதிர்க்கத் துணிந்தோர் மிகக்குறைவு. ஆனால் பிளாசி போர் முடிவுற்ற ஜூன்-23, 1757 அன்றே அதே பிளாசி களத்தில் ஓர் விவாதம். "இந்தியா இந்தியர்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமா அல்லது அந்நிய ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டுமா?" என்ற விவாதம் நடந்தது.

(The Vellore Mutiny Dr.P.Chinnian, Page-25)

அந்தக் களத்திலேயே ஃபக்கீர்கள் ஆங்கிலேயர்களுக்கெதிராக தங்கள் திட்டத்தைத் தீட்டி பிரச்சாரத்தைத் தொடங்கினார்கள்.

ஆங்கிலேயர்கள் பிளாசிப்போரில் கையாண்ட அதே சூழ்ச்சியைப் பயன்படுத்தி விடுதலைப் போரின் முன்னோடி திப்புசுல்தான் அவர்களை ஷஹீதாக்கினார்கள் 1799 மே நாலாம் நாள்.

அவ்வாறே 16 அக்டோபர் 1799-ல் கட்டபொம்முவைத் தூக்கிலே போட்டார்கள்.

1801-ம் ஆண்டுகளில் மானம் காத்த மருது பாண்டி உட்பட பலரை அழித்தார்கள்.

மைசூர் வேங்கை திப்பு சுல்தான் அவர்களை வெற்றிகொண்ட பின் இனி இந்தியா நமக்குத் தான் என்றார்கள் ஆங்கிலேயர்கள். காரணம்,

திப்புசுல்தான் அளவுக்கு ஆங்கிலேயர்களை எதிர்ப்பதில் உறுதியுடையவர்கள் எவருமிருக்க வில்லை.

200 ஆண்டுகள் அடிமையாய் வாழ்வதைவிட இரண்டே மணிநேரமதில் விடுதலை அடைந்த மனிதானக எதிரியை எதிர்த்து வாழ்வதிலே நிம்மதியைக் காண்கிறேன் என்றார் திப்பு.

## திப்புவின் குடும்பம் - ஃபக்கீர்கள்

திப்புசுல்தான் ஷஹீதாக்கப்பட்ட பின்னர் அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

குடும்பத்தவர்கள் அனைவரும் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவ்வாறு அவர்கள் வேலூர் சிறைக்குக் கொண்டுவரப் படும்போது 3000 பேர் உடன் வந்திருந்தார்கள். இவர்கள் வேலூரைச் சுற்றி குடியமர்ந்தார்கள்.

இப்படி இந்தக் குடும்பத்தோடு வந்தவர் களில் ஃபக்கீர்களும் அடங்குவர். ஃபக்கீர்கள் இந்தக் குடும்பத்தாருடன் வந்ததன் நோக்கம் விடுதலைப் போரின் இன்னொரு சகாப்தத்தை எழுதுவதுதான்.

இந்தப் ஃபக்கீர்கள், கோலார், மைசூர், பெங்களூர், மகாராஷ்ட்ரா ஆகிய இடங்களைச் சார்ந்தவர்கள்.

மராட்டிய மன்னர்களும், குறுநிலத்தை ஆண்ட மன்னர்களும் திப்புசுல்தான் ஷஹீத் அவர்களின் மரணச் செய்தி கேட்டு மனம் நொந்தனர்.

ஆங்கிலேயர்களுக்கு, இந்தியா வசப்படு வதை அவர்களும் விரும்பவில்லை. அதே நேரத்தில் திப்பு வாழ்ந்த வாழ்ந்த காலத்தில் அவரோடு நின்று ஆங்கிலேயர்களை எதிர்க்கவும் வரவில்லை. ஆகவே அவர்கள் தென்னத்து நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்து வந்தார்கள். அதேபோல் தஞ்சாவூரையும் இன்னும் சுற்றுப் புறங்களையும் ஆட்சி செய்த திப்புசுல்தானின் மனைவியர் வேலூரில் சிறையிலிருந்த வண்ணமே ஆங்கிலேயர்களை வீழ்த்துவதைப் பற்றி சிந்திக்கலாயினர்.

அவர்களுக்கு சூழ்நிலை மிகவும் சாதகமாகவே இருந்தது.



இந்தச் சூழ்நிலையில் ஃபக்கீர்கள் மிகப்பெரிய தூண் என்றால் அது மிகையாகாது. திப்புவின் குடும்பத்தவர்கள் கோட்டைக்குள் இருந்துகொண்டே நாடு முழுவதும் குறிப்பாக வட இந்தியா முழுவதுமுள்ள மக்களையும், மன்னர்களையும் தொடர்பு கொண்டார்கள். அதற்காக கடிதங்களை கொண்டு செல்லவும், பதில் கடிதங்களைக் கோட்டைக்குள் கொண்டு சென்றிடவும் ஃபக்கீர்கள் பக்குவமாய்ப் பயன்பட்டார்கள்.

காடுமேடுகளையெல்லாம் நடந்தே கடந்து சென்று மக்களிடம் ஆங்கிலேயர்களை எதிர்த்தே ஆக வேண்டும். நாட்டை ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து மீட்டேயாக வேண்டும் என்ற செய்தியையும் பரப்பினார்கள்.

இப்படி ஃபக்கீர்கள் முழு அர்ப்பணிப்புடன் திப்புவின் குடும்பத்தைச் சுற்றி வந்தார்கள்.

அவர்களுக்கு வேண்டியதெல்லாம் இந்தக் குடும்பத்தவர்களை மீட்க வேண்டும்! ஆங்கிலேயர்களை ஒழிக்க வேண்டும்! இந்தியாவை மீட்க வேண்டும். ஆட்சி இழந்த இராஜாக்கள் (அவர்களின் பெரும்பாலோர் இந்துக்கள்) அனைவரும் மீண்டும் அரியணை ஏறிட வேண்டும் என்பதே.

திப்புவின் குடும்பத்தவர்களுக்கு திப்புவின் மனைவிமார்களுக்கிருந்த பிரிதொரு சாதகமான



சூழ்நிலை என்னவெனில், ஆங்கிலேயர்கள் தங்களது புதிய படையில் ஆயிரக்கணக்கான பழைய மைசூர் படை வீரர்களை இணைத்தி ருந்தார்கள். விடுதலைப் போர் முன்னோடி மரண மடைந்த பின் அவர்களின் படையிலிருந்த பெரும் பகுதியினரை ஆங்கிலேயர்கள், தங்கள் பக்கம் இணைத்திருந்தார்கள். காரணம், இதன் மூலம் இங்குள்ள மக்கள் ஆங்கிலேயர்களுக் கெதிராக கிளர்ந்து எழுந்திடுவது பற்றி ஆலோசிக்கப்பட்டார்கள். காலப் போக்கில் Natives என்ற இந்நாட்டு மக்கள் தங்களுக்கு விசுவாசமானவர்களாகவும் ஆகிவிடுவார்கள் என்று கணக்குப் போட்டார்கள்.

ஆனால் யதார்த்தங்கள் வேறு விதமாக இருந்தன.

வேறுவழியின்றி ஆங்கிலேயர்களின் படையில் சேர்ந்த இந்தியர்கள் பெரும் ஏக்கத் துடனேயே இருந்தார்கள். திப்பு சுல்தானின் மரணம் அந்நிய ஆதிக்க சக்திகளின், கைகளில் தாயகத்தை தருவதற்கா? என்ற எண்ணம் மேலோங்கி நின்றது.

ஆகவே அவர்கள் ஆங்கிலேயர்களை விட்டுப் பிரிந்திட தருணம் கிடைத்தால் அதனைப் பயன்படுத்திட தயாராகவே இருந்தார்கள்.

இஃதோர் மிகப்பெரிய பலமாக இருந்தது. ஆங்கிலப் படைகளில் இணைந்த இந்திய வீரர்களிடம் விடுதலை வேட்கை தணிந்திடாமல் பார்த்துக் கொள்ளும் பணியை ஃபக்கீர்கள் பாங்காகச் செய்தார்கள்.

ஆங்கிலேயப் படையில் தங்களை இணைத் துக் கொண்டிருந்த பழைய மைசூர் படையினர் இந்தியர்களை ஒருங்கிணைக்கவும், அவர்களை இரகசியமாக ஆங்கிலேயர்களுக்கெதிராக திருப்பிடவும் ஃபக்கீர்கள் இடைவிடாமல் பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தார்கள்.

இதில் ஏழைகள், எளிமையானவர்கள், ஏதுமற்றவர்கள் என்ற ஃபக்கீர்களின் நிலை மிகவும் நன்றாகவே பயன்பட்டது. அவர்களைக் கண்டுகொள்வார் யாருமில்லை.

## ஆங்கிலேயர்களின் இராணுவ முகாம்களில் ஃபக்கீர்கள்

அவர்களால் ஆங்கிலேய இராணுவ முகாம் களில் வேடிக்கை காட்டுபவர்கள் என்ற பெயரில் நுழைந்து வேடிக்கைக் காட்டி செய்திகைளச் சொல்லிட முடிந்தது. இந்திய வீரர்களின் மன நிலைகளை அறிந்துவந்து மகாராணியிடம், திப்புவின் மனைவிமார்களிடம் சொல்லிடவும் முடிந்தது.

இராணுவத்தைச் சார்ந்த குடும்பத்தைச் சார்ந்தவர்கள் வாழும் குடியிருப்புகளுக்குள் அவர்களால் புகுந்திட முடிந்தது. அங்கு அவர்கள்

இரப்பவர்கள் போல் சென்று பிரவேசித்து தேவைப்படுவோரின் இல்லங்களைத் தட்டி செய்திகளைச் சொல்லிட முடிந்தது. சிக்கிக் கொண்டால் மரணம்தான் என்பதை அறிந்தும், தைரியமாக இதைச் செய்தார்கள்.

ஃபக்கீர்கள் வேறொரு பணியையும் பாங் காகச் செய்தார்கள். அது ஆங்கிலப் படைகளி லிருந்து வெளியேறிட விரும்பியச் சிப்பாய்களை ஃபக்கீர்களைப் போல் வேஷம் போடச் சொல்லி, வெளியே அழைத்து வந்திடவும் செய்தார்கள். பின்னர் அவர்களின் குடும்பங்களையும் இடம் பெயரச் செய்து அவர்களோடு இணைத்து விடு வார்கள். பல நேரங்களில் ஆங்கிலப் படைகளிட மிருந்து விடுபட விரும்பும் விரர்களின் குடும்பங் களை முதலிலேயே மாற்றியும் இருக்கின்றார்கள்.

இப்படி ஃபக்கீர்கள் தந்த பலம் எதையும் செய்யும் என்ற எண்ணத்தை திப்புவின் இராணிகளிடம் ஏற்படுத்தியது.

## திப்புவின் மனைவியின் திட்டம்

ஆகவே, அவர்கள் ஒரு சீரிய திட்டத்தைத் தீட்டினார்கள். அந்தத் திட்டம் வட இந்தியா வில் இருக்கும் ஐரோப்பிய இராணுவ தளபதி களையும், அவர்களுக்குப் பக்க துணையாக வந்தால் ஆங்கிலேயப் படைகளையும் கொன்றொழித்து விட்டு இந்தியாவை இந்திய ஆட்சியர்களிடம் ஒப்படைப்பது என்பதாகும்.

இந்தத் திட்டத்திற்கு வேண்டிய அடிப் படைத் தகவல்களை ஃபக்கீர்களே சேகரித்து தந்தார்கள்.

இத்திட்டத்தை முதலில் வேலூரில் செயல்படுத்துவது என்றும் பின்னர் ஒவ்வோர் இடமாகக் கொண்டு செல்வது என்றும் அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

ஆகவே வேலூரில் இருக்கும் ஐரோப்பிய அலுவலர்கள் ஆங்கிலப்படையிலிருக்கும் இந்திய வீரர்கள். இவர்களின் எண்ணிக்கையை கணக்கெடுத்தார்கள்.

மிகக்குறைவான ஆங்கிலப் படைகளே அங்கே இருந்தன. ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் பல மடங்கு விஞ்சிடும் அளவில் இந்தியப் வீரர்கள் இருந்தார்கள்.

இதுதான் ஆங்கிலேயர்களின் நிலையெனில் அவர்களைக் கொன்றொழிப்பது மிகவும் எளிது எனக் கண்டார்கள் திப்புவின் குடும்பத்தினர்.

ஜூலை 4-ம் நாள் 1806 அன்று வேலூர் கோட்டையின் உள்ளிருக்கும் ஆங்கிலேயர் களை முற்றாகக் கொன்றொழித்துவிட்டு கோட்டையைக் கைப்பற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதற்குள் கோட்டையிலிருக்கும் இந்தியப் வீரர்களை நம்வயப்படுத்த வேண்டும். அவர் களைக் கொண்டே இந்த விடுதலைப் புரட்சி யைச் செய்திட வேண்டும் என்றும் முடிவானது. இதற்கான பொறுப்பு ஃபக்கீர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பணியைப் ஃபக்கீர்கள் மிகவும் இரகசியமாக செய்து முடித்தார்கள்.

இந்த இரகசியம் எங்கேயும் கசிந்திடாமல் இருக்க, இரகசியம் காத்திடும் உறுதிமொழியை யும் எடுத்துக் கொண்டார்கள் ஃபக்கீர்கள்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது அதாவது வேலூர் கோட்டைக்குள் ஆங்கில ஐரோப்பியர்களைக் கொன்றொழித்துவிட்டு அங்கு ஆட்சியைப் பிடிப்பதும், அதன் பின் விளைவாக என்னென்ன நடக்கும் என்பதையும் ஆலோசித்தனர்.

ஒருவேளை திட்டத்தை ஆங்கிலேயர்களால் முறியடிக்க இயலும் என்றால், உடனேயே ஆங்கிலேயர்களுக்கெதிராகச் செயல்படும் இந்திய சிப்பாய்களின் குடும்பங்களைக் குறி வைப்பார்கள்.

இதனால் இந்தக் குடும்பங்களை எங்கெங்கே மாற்றிட வேண்டும் என்ற திட்டங்களைத் தயார் செய்தார்கள்.

அதனை அந்த குடும்பங்களிடம் சொல்லிட வேண்டும். ஆனால், இதில் எந்தச் சலசலப்பும் கூடாது. செய்தி கசிந்து ஆங்கிலேயர்களின் காது களுக்குப் போய்விடக் கூடாது என்பதிலும் மிகவும் கவனமாக இருந்தார்கள்.

இந்த வேலூர் திட்டம் வெற்றி பெற்றால் அந்தத் திட்டத்தை உடனேயே நாட்டின் இதர பாகங்களுக்கும் கொண்டு சென்றிட வேண்டும்.

ஒரு வெற்றியை மக்கள் பார்த்துவிட்டால் உற்சாகத்தோடு இதர இடங்களிலும் அதனை

செயல்படுத்திட முன் வருவார்கள். இதனால் இதர இடங்களிலும் சாதகமானதொரு சூழ் நிலையை உருவாக்கிட திட்டங்கள் தீட்டப் பட்டன. இந்தப் பொறுப்பும் ஃபக்கீர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.



இப்படி இதர இடங்கள் எனக் குறிப்பிடப் பட்டவையின் பட்டியல் இதோ:

வாலாஜாபத், ஹைதராபாத், நந்தியா துர்க், பெங்களூர், பாளையம்கோட்டை, கொல்லம் பெல்லாரி, சங்கரி துர்க் ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்வதாக இருந்தது.

இதற்காக இந்தப் பகுதியிலுள்ள பொது மக்களையும் ஆங்கிலேயர்களுக்கெதிராகத் திருப்பிட வேண்டிய பணியும் இருந்தது. பொதுமக்கள் ஓர் இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தினால்தான் நிலைமை கட்டுக்கடங் காமல் போனால் மக்கள் களத்தில் குதிப்பார்கள்.

இதற்கான ஏற்பாடுகளிலும் ஃபக்கீர்கள் அதிகமான பங்காற்றினார்கள்.

## ஃபக்கீர்களின் உத்தி!

ஃபக்கீர்கள் என்னென்ன உத்திகளைக் கையாள்வார்கள் என்பதை ஏற்கெனவே தெரிவித்தோம்.

அவர்கள் நாடு முழுவதும் நடத்திய வேடிக்கைகளில், ஒரு ஆங்கில நாட்டைப் பிரதிபலிக்கும் அளவில் ஒரு பொம்மை. அந்த பொம்மையை பிரான்ஸ் நாட்டு பொம்மை ஒன்று வீழ்த்தும். இதன்மூலம் ஆங்கிலேய நாட்டு ஏகாதிபத்தியம் பிரான்ஸ் நாட்டு உதவியுடன் வீழ்த்தப்படும் என்பதையும்,

உலகெங்கிலும் பிரான்சின் கைகளில் ஆங்கிலேயர்கள் அடிவாங்கிக் கொண்டிருக் கின்றார்கள் என்பதையும், எடுத்துக்காட்டி ஆங்கி லேயர்கள் ஒன்றும் வெல்ல முடியாதவர்கள் அல்ல என்ற கருத்தைப் பரப்பினார்கள்.

இப்படி இந்தியாவில் வலுவடைந்து வந்த ஆங்கிலேயர்களைப் பற்றிய அச்சத்தை அகற்றி னார்கள். அவர்களை மலிவாகக் காட்டினார்கள் மக்கள் மன்றத்தில்

பிரான்ஸ் நாடு அன்றைய காலங்களில் ஆங்கிலேய நாட்டின் முதல் எதிரி, மட்டுமல் லாமல், திப்புசுல்தான் பிரான்ஸ் நாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்தார். அவர் ஆங்கிலேயே எதிர்ப்பின் ஒரு பகுதியாகவே பிரான்சைப் பார்த்தார். ஆங்கிலேயர்களை எதிர்ப்பதற்கென்று அமைத்த ஆலோசனைக் குழுவில் பிரான்ஸ் நாட்டைச் சார்ந்தவர்களும் இருந்தார்கள்.


திப்புவின் மகாராணிகள் வேலூரிலிருந்து கொண்டு வீழ்த்திட திட்டமிட்ட நிலையிலும், பிரான்ஸ் நாட்டைச் சார்ந்தவர்கள் 'இஸ்ல்' என்ற தீவில் இந்தியர்களுக்கு பயிற்சிகளை தந்துகொண்டிருந்தார்கள்.

ஆக நமக்கோர் ஆதரவும் உதவியும் உண்டென்பதை ஃபக்கீர்கள் மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்தார்கள் தங்கள் தெருக்குகூத்து வழி.

ஆங்கிலேயர்கள்மீது மக்களின் வெறுப்பும், கோபமும் வளரும் வகையில் இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஆங்கிலேயர்களின் மதத்திற்கு மதமாற்றுவதை மக்களிடம் எடுத்துச் சொன்னார்கள்.

வேலூர் சிப்பாய் கலகம் அல்லது புரட்சி நடந்து முடிந்த பின் நடந்த விசாரணையில் இந்த மதமாற்றம் பற்றிய தகவல்களும் வந்தன. அப்போதிருந்த ஆங்கில அரசு இந்தக் காரணத்தை, அதாவது மதமாற்றத்தை உண்மைதான் என ஒத்துக் கொண்டது.

இதனால் லார்டு வில்லியம் பென்டிக் பிரபுவும், Sir John Cradock என்பவரும் லண்ட



னுக்கு அழைக்கப்பட்டார்கள். அவர்கள் இந்தியாவில் வகித்துவந்தப் பதவிகள் பறிக்கப்பட்டன. (The Vellore Mutiny 1806 by Dr. P. Chinnian)

ஃபக்கீர்கள் திப்புசுல்தானின் வாழ்க்கை வரலாற்றைப் பாடல்களாக இயற்றினார்கள்.

இந்தப் பாடலில் சிலவற்றை மைசூரில் உள்ள பள்ளி ஆசிரியர்கள் எழுதினார்கள்.

இந்தப் பாடல்களின் தொகுப்பு 'முஹப்பத்' 'அன்பு செலுத்துதல்' எனப் பெயர் சூட்டப் பட்டது.

பாடல்கள் திப்புசுல்தானின் வீர சாகசங்களை விரித்துரைப்பனவாக இருந்தன. திப்புவின் முக்கியத் தளபதிகளில் ஒருவரான பூர்னையாவின் துரோகத்தையும் மிர்சாதிக்கின் துரோகத்தையும் தோலுரித்துக் காட்டின.

அத்தோடு திப்புவின் வீரமரணத்தோடு இந்த மாபெரும் போர் முடிந்துவிடவில்லை. அது தொடரும். அதில் ஆங்கிலேயர்கள் வீழ்வார்கள் என்ற சூளுரைகளும் மக்கள் மன்றத்தில் வீசப்பட்டன.

ஃபக்கீர்கள் கையாண்ட இன்னொரு முறை ஆங்கிலப் படைகளுக்குள் சூழப்பங்களையும் கொந்தளிப்புகளையும் ஏற்படுத்துவது.

ஒரு ஃபக்கீர் ஒருவர் புலித்தோல் ஒன்றில் அமர்ந்துகொண்டு, இனி ஒரு காலம் வருகின்றது. அது அதிவிரைவில் வருகிறது. அதில், ஆங்கிலேயர்கள் தங்களுக்குள் அடித்துக்கொண்டு இறப்பார்கள் என்றார்கள். இதற்கு வெள்ளை சிப்பாய் கலகம் எனப்பெயரும் சூட்டினார்.

லண்டனிலிருந்த ஆங்கிலேய அரசு இதற்கான ஆணை ஒன்றை பிறப்பித்து விட்டது என்றும் கூறினார்கள். இந்த ஆணை ஒன்றையும் புழக்கத்தில் விட்டார்கள். இந்த ஆணை சில இடங்களில் அத்துமீறி நடந்த ஆங்கிலப்படைகளை ஆங்கிலேயர்கள் தூக்கிவிட வேண்டும் எனக் கூறியது. இந்த ஆணை ஃபக்கீர்களின் கைவண்ணம்.

இந்த ஆணை எங்கிருந்து வந்தது என்பதை ஆங்கிலேயர்களால் கடைசிவரை கண்டுபிடிக்க இயலவில்லை.

இதை இடைவிடாமல் ஃபக்கீர்கள் பிரச்சாரம் செய்தார்கள். எந்த அளவுக்கு என்றால் ஆங்கிலேயர்கள் தங்கள் சொந்தப்படைகளைக் கண்டே அஞ்சினார்கள். ஃபக்கீர்கள் இதற்கு பக்க பலமாய் தூபம் போட்டுக் கொண்டே இருந்தார்கள்.

ஃபக்கீர்கள் பிரிதோர் செய்தியையும் மக்களிடையே பரப்பினார்கள். அது, மராட்டிய படைகளும் பிரான்ஸ் நாட்டுப் படைகளும் ஒன்று திரண்டுவிட்டன. அவர்கள் திடீரென தாக்கி மொத்த ஆங்கிலப் படைகளையும் அழிக்கப்போகின்றார்கள் என்பதே அது.

இந்தச் செய்திகளை இரகசியமாகவும், வெளிப்படையாகவும், ஆங்கிலேயர்களின் படைகளின் காதுகளில் போட்டு வைத்தார்கள்.

ஆங்கிலேயப் படைகள் பீதி வயப்பட்டன. ஆங்கிலேயப் படையில் அங்கம் வகித்த இந்திய வீரர்கள், மரணத்தை எதிர்கொள்ள தயாராக இருக்கவில்லை. அவர்கள் அத்தகையதொரு சூழ்நிலை வந்தால் தாங்கள் பிரான்ஸ் நாட்டுப் படைகள், மராட்டியப் படைகள் இவற்றோடு சேர்த்து ஆங்கிலேயர்களை தாக்குவது என்றே முடிவு செய்தார்கள்.

இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு காலந்தாழ்த்தாமல் ஒரு தாக்குதலை நடத்துவது என்ற கருத்து ஆங்கிலப் படையில் இடம்பெற்ற இந்தியர்களுக்கு மிகவும் ஏற்புடையதாக இருந்தது.

பிரான்ஸ் நாட்டவர்கள் இந்தியாவின் மீது, படையெடுத்து ஆங்கிலேயர்களை அழிப்பார்கள் என்ற செய்தி நெப்போலியன் வைத்திருந்த ஒரு திட்டத்தின் அடிப்படையில் பரப்பப் பட்டதுதான்.

அந்தத் திட்டம் ஜூன் *6, 1806*-ல் இந்தியாவுக்குள் புகுந்த ஆங்கிலேயர்களுடன் ஒரு பெரும் போர் நடத்த வேண்டும் என திட்டமிட்டிருந்தார். அத்தோடு ஆசியாவில் தனது வெற்றிகளை ஊர்ஜிதம் செய்திட ஒரு கூட்டணிக்கும் ஏற்பாடு செய்திருந்தார் நெப்போலியன்.

அதில் பாரசீகம், துருக்கி ஆகிய நாடுகளை இணைத்துக் கொள்வது என்றும் திட்டம் வைத்திருந்தார். நெப்போலியனால் இந்தத் திட்டங்களை நிறைவேற்றிட இயலவில்லை. காரணம் ஐரோப்பியாவில் அவருக்கு பயங்கர நெருக்கடி.

பின்னர் இந்தத் திட்டங்கள் *1807, 1808*-க்கு மாற்றப்பட்டது. ஆனால் எப்போதுமே நிறை வேறாமல் போய்விட்டது. உண்மையில் *1803*-களிலேயே பிரான்ஸ் நாட்டு இராணுவ அதிகாரி (BINOT) பினோட் என்பவர் இந்திய வீரர்களை ஆங்கிலேயர்களுக்கெதிராய் சீண்டி விட்டுக் கொண்டிருந்தார். அவர் அன்று ஆரம்பித்து வைத்திருந்த உளவுத்துறை அவருடைய இரகசிய ஏஜெண்ட் முல்லர் வழியாக நீண்ட நெடும் காலமாக இந்தியாவில் செயல்பட்டு ஆங்கிலேயர்களைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தது.

ஆக ஃபக்கீர்கள் தங்களுக்குக் கிடைத்த தகவல்களையெல்லாம் ஒன்றாய் திரட்டி மக்கள் மன்றத்தில் பரப்பினார்கள்.

இதனால் வட இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்கள் விழப்போகின்றார்கள் என்ற செய்தி பரவிற்று. ஆங்கிலேயர்கள் மீது வெறுப்பு வளர்ந்தது. வாய்ப்புக் கிடைத்தால் மக்களே அவர்கள் மீது பாய்வார்கள் என்ற நிலை உருவானது.

வேலூர் கோட்டை சிப்பாய்களிலிருந்து இதர கோட்டை சிப்பாய்களும், அதாவது இந்தியர்கள் ஒரு முழு சிப்பாய் கலகத்திற்கு தயாராக இருந்தார்கள்.

## லிங்காயத் - ஃபக்கீர்கள்


மைசூர், பெல்லாரி, பெங்களூர் ஆகிய பகுதிகளில் கலவரத்தைத் தூண்ட இந்துத் துறவிகளைப் ஃபக்கீர்கள் பக்குவமாய் முடுக்கி விட்டார்கள். இவர்கள் லிங்கம் செக்ட் என்ற லிங்காயத் என்றப் பிரிவைச் சார்ந்தவர்கள். இவர்கள் ஆங்கிலேயர்களை அழித்துவிட்டு லிங்காயத் இனத்தை சார்ந்த மன்னர் ஒருவர் ஆட்சிக்கு வரப்போகின்றார் எனப் பிரச்சாரம் செய்தார்கள். (The Vellore Mutiny 1806)

## தலைப்பாகை ஆணை

இப்படிக் கனன்று கொண்டிருந்த சூழ்நிலை யில்தான் தலைப்பாகை ஆணை (Turbon Order) ஒன்று ஆங்கிலேயர்களிடமிருந்து வந்தது. இந்த ஆணை *1806* ஏப்ரல்-மே மாதத்தில் பிறப்பிக் கப்பட்டது. ஜூன் மாதம் செயலில் வந்தது.

அது ஆங்கிலேயர்களின் கலாச்சாரம் ஒன்றை பிரதிபலிக்கும் குழல்போன்ற தொப்பி, இது கிழக்கிந்திய பாண்டு என்ற இசை கருவி களை இயக்குவோர் அணியும் தொப்பியை ஒத்திருந்தது. இதனால் ஆங்கிலப் படைகளுட னிருந்த, இந்து வீரர்களும் முஸ்லிம் வீரர்களும் இத்தொப்பியை அணிய மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்.

இந்திய வீரர்கள் இந்தத் தொப்பிகளை அணியமாட்டோம் என்று மறுத்த செய்தி ஆங்கிலேய மேல் அதிகாரிகளுக்குத் தெரியவே, அவர்கள் அதைக் கட்டாயமாகத் திணிக்கும் விதத்தில் தண்டனைகளையும் திணித்தார்கள்.



முஸ்லிம் சிப்பாய் ஒருவருக்கு 900 சாட்டையடிகள் கொடுக்கப்பட்டன. அதேபோல் இந்து தோழர் ஒருவருக்கும் 900 சாட்டையடிகள் கொடுக்கப்பட்டன. இந்தத் தண்டனை படிப்படியாக எல்லோர் மீதும் விழும் என்ற நிலை உருவானது. மொத்தத்தில் 19 பேர் தண்டிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு தலா 500 சாட்டையடிகள் வழங்கப்பட்டன.

இந்தச் செய்தி காட்டுத் தீ போல் பரவிற்று.

ஃபக்கீர்கள் இந்தச் செய்தியை எத்துணை வேகமாக இயலுமோ அத்துணை வேகமாக மக்களிடம் எடுத்துச் சென்றார்கள்.

இதனால் ஏற்கெனவே கனன்றுக் கொண்டிருந்த நெருப்பு எரி மலையாய் வெடிக்கத் தொடங்கிற்று.

விடுதலைப் போரின் முன்னோடி திப்பு சுல்தான் ஷஹீத் அவர்களின் குடும்பத்தவர்கள் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி, ஜூலை 4 அன்று நடக்க வேண்டும் என திட்டமிட்டிருந்த போர் தள்ளி வைக்கப்பட்டது.

ஜூலை 9ம் நாள் என மீண்டும் தேதி குறிக்கப்பட்டது.

இரண்டு முறை தள்ளி வைக்கப்பட்ட பின்னரும், இரசகசியம் மிகவும் கவனமாக பாதுகாக்கப்பட்டது.

ஜூலை 10-ம் நாள் காலை இரண்டு மணியளவில் தென்னகத்து சிப்பாய் கலகம் வெடித்து, ஆங்கிலேய தளபதி திடுதிப்பென தாக்கப்பட்டார்கள். செய்வதறியாது திணறி னார்கள். அதுபோது வேலூர் கோட்டையில் விடுதலை வீரர்களின் கொடி பறந்தது. இந்த கொடி திப்பு சுல்தானின் கொடியாகவே இருந்தது. சிவப்பு துணியில் பச்சைக் கோடுகள் போட்டு கதிரவன் தொனிந்தக் கொடி அது.

அதற்குள் 191 பேர் கொல்லப்பட்டார்கள். 69 பேர் காயம்பட்டார்கள்.

ஏறத்தாழ 8 மணிநேரம் கோட்டை திப்புவின் இராணிகளின் கைகளிலிருந்தது. ஆங்கிலப் படைகளில் சுபேதார் பொறுப்பு வகித்த இரண்டு முஸ்லிம்கள், ஷேஹ் ஆதம், ஷேஹ் காசிம் ஆகிய இரண்டு பேர்தான். வேலூர் கோட்டைப் புரட்சியை முன்னின்று செய்தார்கள்.

வேலூர் கோட்டையில் நடந்த கலகம் ஆற்காட்டிற்கு பறந்தது. அங்கிருந்து ஆங்கி லேயர்களுக்குக் கிடைத்த உதவியால் வேலூர் கோட்டை முற்றுகையிடப்பட்டது. மீண்டும் வேலூர் கோட்டை ஆங்கிலேயர்களின் கைக்குச் சென்றது.

வேலூர் புரட்சி வெற்றி பெற்றால் இந்தப் புரட்சியை எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்வது என்றும், ஏக காலத்தில் புரட்சிகளை செய்வது என்றும் ஏற்கெனவே போடப்பட்டி ருந்த திட்டங்கள் கைவிடப்பட்டன.

ஜூலை 14ம் நாள் இதர இடங்களில் வேலூர் புரட்சி ஆங்கிலேயர்களின்

கண்களைத் திறந்தன. அவர்கள் இந்திய வீரர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்துக் கொண்டனர். உடனேயே எச்சரிக்கை செய்திகள் எல்லா இடங்களுக்கும் பறத்தன.

முஸ்லிம் சிப்பாய்கள் அனைவரும் கைது செய்யப்பட் டனர். விசாரணை முடியும் வரை சிறையில் வைக்கப்பட்டார்கள்.

இந்து சிப்பாய்களைப் பொறுத்த வரை தெளிவாகக் கலவரத்தில் கலந்து கொண்ட வர்கள் என அறியப்பட்டவர்கள் சிறை வைக்கப்பட்டனர். தங்களுக்கு விசுவாச மாய் இருப்பார் என நம்பப்பட்டவர்களிடம் மட்டும் ஆயுதங்களைக் கொடுத்து வைத்தார்கள்.

வேலூர் புரட்சி முழுமையாக வெற்றி யடையவில்லை என்றாலும் ஃபக்கீர்கள் மனந் தளர்ந்திடவில்லை.


அவர்கள் இதேபோல் புரட்சியை இதர இடங்களுக்கும் எடுத்துச் சென்றிட துணிந் தார்கள். ஜூலை 23ம் நாள் ஹைதராபாத்தில் இதுபோன்றதொரு புரட்சிக்கு ஏற்பாடு செய்தார்கள். இது தொடர்பாக எழுதப்பட்ட இரகசிய கடிதம் ஒன்று ஆங்கிலேயர்களிடம் சிக்கிக் கொண்டதால் இந்தப் புரட்சி வெற்றி பெறவில்லை.

வேலூரிலிருந்து பாளையம்கோட்டைக்கு வந்த ஃபக்கீர்களில் பலர் அங்கே ஓர் புரட்சிக்கு ஏற்பாடு செய்தார்கள்.

அங்கே இருந்த இந்திய வீரர்களை ஒன்று திரட்டி பத்து நாட்களுக்குள் ஆங்கிலேயர்கள் அனைவரையும் கொன்றுவிட வேண்டும் என திட்டம் தீட்டினார்கள். இது தொடர்பாக அவர்கள் பல இரகசிய கூட்டங்களை நடத்தினார்கள்.

சுபேதார் ஹைதர் சாகிப் என்பவரை இதற்குப் பொறுப்பாக நியமித்தார்கள்.

பல முஸ்லிம் வீரர்களை வெள்ளையர்கள் பீரங்கியின் வாயில் வைத்துச் சுட்டார்கள். வேலூர் புரட்சியின் பின் விளைவாய்.



மேஜர் வேல்ஸ்

இப்படிக் கொலை செய் யப்பட்ட முஸ்லிம் வீரர்களின் ஆவி பாளையங்கோட்டையைச் சுற்றி வந்து கொண்டிருப்பதாகக் கதை கட்டி விட்டார்கள் ஃபக்கீர்கள்.

இந்தக் கதைகள் ஆங்கிலே யர்கள் மத்தியில் பீதியைக் கிளப் பிற்று.

இந்தப் பீதியை இன்னும் அதிகரிக்கும் வண்ணம் இன்னொ நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது, கோட்டைக்குள்ளி ருந்த கிறிஸ்தவ ஆலயத்தின் வாயிலில் இரத்தம் சிதறிக் கிடந்தது. இந்த இரத்தம் ஓர் பாட்டை போல் நடந்து கல்லறைகள் நெருக்கமாக அமைக்கப் பெற்றிருந்த இடம் வரை சென்றது.

இந்த இரத்தக்கறைகளைக் கண்ட வெள்ளை யர்கள் வெருண்டார்கள். இந்த இரத்தக்கறைகள் அபாயத்தின் அறிகுறி என்பதையும் அனைவருக்கும் அறிவித்தார்கள்.

இந்தப் பிரச்சாரத்தின் உச்சகட்டத்தில் கொடி யொன்றை பள்ளிவாசலில் பறக்கவிட்டார்கள்.

இதற்கிடையில் திருவிதாங்கூர் அரசரும், இராமலிங்க முதலியாரும், பாளையங்கோட்டை புரட்சிக்கு உதவ எழுதப்பட்ட கடிதம் ஒன்று வெள்ளைக் கம்பெனியர்களிடம் சிக்கிக் கொண்டது. இதனால் வெள்ளையர்கள் விழித்துக் கொண்டார்கள்.

ஃபக்கீர்களை நினைக்கும் போதெல்லாம் பதை பதைத்தார்கள். அவர்கள் எந்தளவுக்கு பதைபதைத்தார்கள் என்பதை மேஜர் வேல்ஸ் இப்படிக் குறிப்பிட்டார் :


"பாளையங்கோட்டை இராணுவ குடியிருப்புப் பகுதியில் மிகுந்த தோரணையுடன் ஃபக்கீர்கள் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பது எனக்கு மிகுந்த எரிச்சலை ஊட்டுகிறது."

(செ.திவான் கட்டுரை சதக்கத்துல்லா அப்பா கல்லூரி விழா மலர்)

பதைத்துக் கொண்டிருந்த வெள்ளையர்கள் உயிருக்குப் பயந்து விழித்துக் கொண்டிருந்

# இப்பி ஃபக்கீர்

இவர் பெஷாவர் பகுதியில் பல நூறு ஃபக்கீர்களைக் கொண்ட ஒரு படையைக் கொண்டு, ஆங்கிலேயர்களுடன் நீண்டதொரு போரை நடத்தினார். இவரது எதிர்ப்பு ஆப்கானிஸ்தான் வரை இருந்தது. இவர் செயல்பட்ட இடங்களில் ஆங்கிலேயர்களால் அறவே ஆதிக்கம் செலுத்திட இயலவில்லை. இவரது வரலாறு ஒன்றை காலஞ்சென்ற அல்ஹாஜ் கி.வி. யூசுப் அவர்கள் எழுதியுள்ளார்கள்.




ஆங்கிலேயர்களுக்கெதிராக வேலூரில் சிப்பாய்க் கலகம் அல்லது புரட்சியைத் தொடர்ந்து பின்வரும் இடங்களிலும் சிப்பாய் கலகங்கள் நடந்தன.

**மதுரையில் 1804, ஜூன் 19.**

**சித்தூரில் 1805 ஜனவரி, பிப்ரவரி.**

**திருவாங்கூரில் 1804 நவம்பர் 16.**

**மலபார் பகுதிகளில் 1803 டிசம்பர்.**

**கொல்லத்தில் 20, நவம்பர் 1806**

**பெங்களூரில் 1806**

**நந்தி துர்க், சங்கரி துர்க் நவம்பர் 1806.**

இப்படி தென்னகத்தில் ஆங்கிலேயர்கள் பாசறை இறக்கி இருந்த எல்லா இடங்களிலும் புரட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

*தார்கள். நவம்பர் 18ம் நாள் இந்திய வீரர்கள் தங்களிடமிருந்த ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள்.*

*ஹைதராபாத், வாலாஜாபத், பெங்களூர், திருச்சி ஆகிய இடங்களிலும் ஃபக்கீர்கள் இதுபோன்ற கிளர்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் விழித்துக் கொண்டார்கள்.*

*வேலூர் கிளர்ச்சி பற்றிய முழு அளவு விசாரணை ஒன்றை நடத்தியபோது தென்னகம் முழுவதும் இப்படியொரு ஏற்பாடு நடந்திருக்கின்றது என்பதைக் கண்டு கொண்டார்கள்.*

*இதற்கு* (Southern Conspiracy) *தென்னக சதி எனப் பெயரிட்டார்கள். விசாரணையில் ஃபக்கீர்களின் பணிகளை நன்றாக அறிந்து கொண்ட அவர்கள் ஃபக்கீர்கள் விவகாரத்தில் மிகவும் கவனமாக இருக்கத் தொடங்கினர்.*

*இதற்காக சிறப்பு புலனாய்வுத் துறைகளை நியமித்தார்கள்.*

*எனினும் ஃபக்கீர்கள் தங்கள் பிரச்சாரத்தையும், வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் புரட்சியையும் செய்தே வந்தார்கள்.*

*ஆங்கிலேயர்களுக்கு தாங்க முடியாத இழப்புகளையும் பீதியையும், நிம்மதியின்மையையும் அவர்களால் ஏற்படுத்திட இயன்றது.*

*இந்த சிப்பாய் கலகங்கள் 1857-ல் சிப்பாய் கலகத்திற்கு வித்திட்டன என்பதே ஆராய்ச்சியாளர்கள் முடிவு!*

## வரலாற்றுக் குறிப்புகள்

*1757-க்கும் 1857-க்கும் இடையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், குழப்பங்களும் கொந் தளிப்புகளும் நடந்து கொண்டுதான் இருந்தன. 1857-ல் நடந்த முதல் சிப்பாய் கலவரத்தில்தான் ஆங்கிலேயர்களின் ஆட்சி ஆபத்துக்குள் அகப்பட்டது என்றொரு எண்ணம் பரவலாக இருந்து வருகிறது. அதற்கு முன்னால் நடந்த பல முயற்சிகள் தாம் இந்தப் பெரும் கிளர்ச்சிக்கு தேவையான தளங்களை அமைத்துத் தந்தன. குறிப்பாக தென்னிந்தியாவில் 1800 முதல் 1812 வரை நடந்த சிப்பாய் கலகங்கள்தாம் 1857-ல் நடந்த கலவரத்திற்கு முன்மாதிரியாய் அமைந்தன.*

(The First Struggle for Freedom of South India in 1806)

*இந்த முதல் முயற்சியில் ஃபக்கீர்கள் ஆற்றிய பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது.*

- MGM



# விடுதலைப் போரில் வீரமிகு இஸ்லாமிய தாய்மார்கள்

இந்திய சுதந்திரப் போரில் வீரமிகு முஸ்லிம் தாய்மார்களின் பங்களிப்பு மிக அதிகம். வரலாற்றில் மறைந்து கிடக்கின்ற அந்த மாதரசிகளின் தியாகசரிதக் குறிப்புகள் இதோ,

## பேசும் ஹஸ்ரத் மகால்

*அயோத்தி அஜ்ஜத் அலீ ஷாஹ்வின் குமாரர் வாஜித் அலீ ஷாஹ். இவர் கி.பி. 1847 பிப்ரவரி 13ல் தனது 25வது வயதில் அயோத்தி அரசில் அமர்ந்தார். கி.பி. 1856 ஜனவரி 31-ல் ஆங்கிலேயக் கும்பெனியார் இவரை ஆட்சிப் பொறுப்பி லிருந்து அகற்றுவதாக அறிவித்தனர். எவ்வளவோ போராடியும் முயன்று இறுதியில் கல்கத்தாவிற்கு நாடு கடத்தப்பட்டார். (இக்கால கட்டத்தில் 1857-ல் புரட்சி வெடித்தது) இவரது துணைவியார் ஜனாபெ ஆலியா ராஜ்மாதா தநவாப் ஹஸ்ரத் மகால், இஃப்தி காருன்னிஸா தனது 14வது மகன் பர்ஜிஸ் கத்ரை அயோத்தி அரசராகப் பிரகடனம் செய்தார். ஆங்கிலேயரை எதிர்த்தார். கூட்டங் கூட்டமாய் மக்கள் அணி திரண்டனர். சுற்று வட்டாரத்திலுள்ள ஜமீன்தார்கள், ராஜாக்களுக்கு கடிதங்கள் எழுதி படை திரட்டினார்.*

## ஸர் லாரன்ஸ்

*லக்னோவின் சீப்கமிஷனர் ஸர் லாரன்ஸ் நமது ஆட்சி அதிகாரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் கை நழுவிப் போய்விட்டது. சிரமங்கள் எல்லாம் ஹஸ்ரத் பேகம் மஹாலில் வீரர்களால் கைப்பற்றப்பட்டுவிட்டன. என்று அப்போது மேலிடத்திடம் அலறினார்.*

## போர்க்களத்தில்

போர்க்களத்தில் ஹஸ்ரத் மஹால் தம் படைகளுடன் தாமே நேரில் வந்தார். (One day the begam herself came on the field with all the army) போர்க் களத்தில் பிரிட்டிஷ் கமாண்டர் லாரன்ஸ் வெட்டி வீழ்த்தப்பட்டார். கமாண்டர் 'இன் சீஃப் ஜெனரல் நெய்ல்' குதிரையிலிருந்த நிலையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். எதிரி களால் களத்தில் சுற்றிவளைக்கப்படும் நிலையில் பேகம் மஹால் அங்கிருந்து தப்பினார்.

## பிரகடனம்

*1858 நவம்பரில் இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணியாரின் பிரகடனம் இந்தியாவில் வெளியானபோது, ஹஸ்ரத் மஹாலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை எதிர்த்து போர்ப் பிரகடனம் செய்தார். 1859 வரை நீடித்தது போர். இறுதியில் நேபாளம் நோக்கி தப்பிச் சென்று அங்கு கி.பி. 1879-ல் மறைந்தார். இமாம் பாரா நகருக்கு அருகில் மலைக் குன்றில் இந்திய மஸ்ஜித் என்று அழைக்கப்படும் பேகம் மஜ்ஜிதில் பள்ளி வாசலின் முற்றத்தில் அவர் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.*

## வீராங்கனை அஸீஸான்

முகலாய மன்னர் பஹதுர்ஷா ஜாஃபர்மீது நடைபெற்ற வழக்கில் ஆல்ட்வெல் (Aldvell)

ஆங்கிலப் பெண் சாட்சியமளிக்கின்றபோது,

ஆங்கிலேயர்களைப் பூண்டோடு அழித்து விட வேண்டுமென்றால் ஆண்டவனைத் தொழும்படி முஸ்லிம் தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளிடம் கூறியதை நான் நேரில் கேட்டேன் என்றார்.

## கான்பூர் யுத்த களத்தில்


அழகு பொருந்திய அஸீஸான் எனும் வீரமங்கை புரட்சி வீரர்களிடம் தொடர்பு கொண்டிருந்தாள். சந்தையில் காதலை விற்றுப் பணம் சம்பாதித்திடும் பெண் அல்ல அவள். சுதந்திர வேள்வியில் தேச சேவைக்கு தன்னை முழுமையாக ஈடுபடுத்தி போர் வீரனைப் போல் இராணுவ உடையணிந்து போராடினாள். ஆயுதங்களுடன் குதிரை மீது ஏறிவந்து போரிட்டாள். கான்பூர் பீரங்கிப் படையினரை, கும்பினியாரை எதிர்த்துக் களம் கண்டாள். மின்னலைப்போல் தோன்றி அபார சாதனை புரிந்த அந்த வீரமங்களையின் வரலாற்றினை *1857*-ன் புரட்சியை மறந்துவிடத்தான் முடியுமா?


## வீரத்தாய்

விடுதலைவீராங்கனை, உப்புச்சத்தியாகிரகப் போரில் வேதாரண்யத்தில் வீரப்போர் புரிந்து வேலூர் சிறையில் வாடிய ருக்மணி லட்சுமிபதி சென்னை சைனா பஜாரில் (இன்றைய என்,எஸ்,ஸி, போஸ் சாலையில்) அந்நியத்துணி பகிஷ் கரிப்பு போரில் வீரு உரை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்.

*1932*-ல் இதனைக் கேட்ட ஒரு முஸ்லிம் வீரத்தாய் தனது ஐந்து வயது பெண் குழந்தை யின் வெளிநாட்டு கவுனை கழற்றி கீழே ஏறிந்து காலில் போட்டு மிதித்தார். உடனே ருக்மணி லட்சுபதி தனது சேலையின் ஒரு பாகத்தை கிழித்து அக்குழந்தைக்கு அணிவிக்க முயன்ற போது, கடைக்காரர் ஒருவர் ஓடி வந்து வேறு சுதேசி துணி தந்தார். அரசி, ஆட்டக்காரி, குடும்பத்தரசி என்று அனைவரும் இந்திய விடுதலைக்குப் பாடுபட்டதை எண்ணி அவர் தியாகம் போற்றுவோமாகா!

வரலாற்றாய்வாளர் செ.திவான்



# இஸ்லாத்தின் அழைப்பாளராக இருந்த பெரியார் - சொல்வதை கேளுங்கள்



# பெரியாரும் இஸ்லாமும்

பெரியார் ஒவ்வொரு முறையும் தமிழகத்தில் அவமானத்திற்கு உள்ளாக்கப் படும் போது அதற்கான எதிர்ப்பின் முதல் குரல் முஸ்லிம்களிடம் இருந்து தான் உருவாகும். முஸ்லிம்களுக்கும் பெரியாருக்குமான உறவு அத்தகையது.

பெரியார், முஸ்லிம்களுக்கு ஒரு பிரச்சனை என்று மட்டுமல்ல இஸ்லாத்தின் பால் ஒரு சச்சரவு ஏற்பட்டால் கூட முதன் மனிதராக ஆதரவுக்கரம் நீட்டுபவராக இருந்தார்.

பெரியார் எனும் கடவுள் மறுப்பாளர் ஏன் முஸ்லிம்களுக்கும், இஸ்லாத்திற்கும் ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும் என்று நாம் கண்டிப்பாக சிந்திக்க வேண்டும்.

பெரியார் என்றுமே கடவுள் தத்துவத்திற்கு நேரடியான எதிரியாக இல்லை. ஆனால் அதற்கு மாறாக கடவுள் பேரைக் கொண்டு ஒருவர் ஏமாற்றப்படும் போதும், துன்புறத்துதலிற்கு ஆளாக்கப்படும் போதும் அதனை கடுமையாக எதிர்த்தார். அதற்கு அவர் பொதுவாக பயன் படுத்திக்கொண்ட பெயர் மட்டுமே "கடவுள் மறுப்பு."

கடவுள் மறுப்பை ஏற்றுக்கொண்டதாக கூறப்படும் பெரியார் தான், தமிழக மக்களை இஸ்லாத்திற்கு செல்லுங்கள் என்று கூறினார். அதனை பல ஆண்டுகாலமாக பொதுமேடை களில் பேசினார்.

இன்று பெரியாரும் இஸ்லாமும் நெருக்கமாக இருந்த வரலாறு பெருமளவு மறைந்து போய் இருக்கிறது. அதனை யாரும் வெளிப்படுத்த முன்வருவதில்லை அல்லது மறைக்கிறார்கள். அதனால், அதனை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் முஸ்லிம்களுக்கு இருக்கிறது.

## இஸ்லாத்தை பற்றி பெரியாரின் பார்வை

பொதுவாகவே மதங்களுக்கு எதிரான பார்வை கொண்டிருந்த பெரியார் இஸ்லாம் மார்க்கத்தை அப்படி அணுகவில்லை. இஸ்லாத்தையும் விமர்சனக் கண்ணோட்டத்தில் அணுகிய பெரியார் இஸ்லாத்தை பற்றி இப்படிக் கூறுகிறார்,

"இஸ்லாம் என்றால் முகமது நபிகள் மதம் என்றோ, இங்கு லுங்கி கட்டிக்கொண்டு அளந்து

தாடி வைத்துக் கொண்டு இருக்கும் சாயுபு, ராவுத்தர், மரைக்காயர், மாப்பிள்ளை என்கின்ற வர்கள் மதம் என்றோ கருதி விடாதீர்கள்.

திராவிடர்கள் மதம் முகம்மது நபிக்கு முன்பு, கிருஸ்து நாதருக்கு முன்பு, புத்த மகானுக்கு முன்பு, ஆரியர்களுக்கு " கிருஷ்ணன்" "ராமன்" "சிவன்" "விஷ்னு"க்களுக்கு முன்பு திராவிடர்களுக்கு இருந்த மதமாகும்.

இஸ்லாம் என்பது சாந்தி , பணிவு , பக்தி என்ற பொருள்படும் அரபுச்சொல். இஸ்லாம் என்பது சகோதரத்தன்மை என்பது இவ்வளவு தான்! 200 வருசத்துக்கு முற்பட்ட அகராதிகளை பாருங்கள். அரபு வார்த்தைகளில் சொல்லாமல் தமிழில் ஒரு கடவுள், பரஸ்பர பணிவு, பக்தி, உடன்பிறப்பு என்ற தன்மைகள் கொண்ட மதம் என்றால் போதும், கடவுள் என்பது திராவிட மொழி, காட் (GOD) என்பது ஆங்கில மொழி, அல்லாஹ் என்பது அரபு மொழி என்பதல்லாமல் திராவிடர்களுக்கு மாறுபட்ட கடவுள் அல்ல. கொள்கை அல்ல என்பேன்.

(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 16-17)

மேலும் பெரியார் இஸ்லாத்திற்கு ஆதரவாக பேசுகிறார் எனும் குரல் வரும் போது பெரியார் சொல்கிறார், " நான் இஸ்லாத்திற்கு வக்காலத்து வாங்கவில்லை. இது உண்மை! உண்மை!"

(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 19)

அது சண்டாளர்களையும் ரட்சிக்கும் மதம்; வீரத்தையும் ஆண்மையையும் (ஒடுக்கப்பட்ட மக்களுக்கு) அளிக்கும் மதம்

('குடிஅரசு' ஆக.25, 1929)

"ஒரு மனிதன் தான் மாலை 5 மணிக்கு இஸ்லாம் கொள்கையை ஏற்றுக்கொண்டதாய்ச் சொல்லி, 5,30 மணிக்குத் 'தீண்டாதவன் என்கின்ற இழிவிலிருந்து மீண்டு, தெருவில் நடக்க உரிமை பெற்று" மனிதனாக முடியும்

('குடிஅரசு', ஆக.2, 1931)

உலகில் மதமே இருக்கக்கூடாது அதனால் எப்போதும் அழிவு தான் என்று கூறிய பெரியார் இஸ்லாத்தை பற்றி மட்டும் கூறும் போது

"மதங்கள் ஒழிந்த பிறகுதான் உலக சமாதானமும், ஒற்றுமையும், சாந்தியும் ஏற்பட முடியும், என்பது அநேக அறிஞர்களது அபிப்ராய மானாலும் அதற்கு விரோதமாக ஏதாவது ஒரு மதம் இருக்கும்போதே 'உலக சமாதானம் ஏற்பட்டுவிட்டது.' சாந்தி ஏற்பட்டு விட்டது என்று சொல்லப்படுமானால் அது இஸ்லாம் கொள்கைகளாகத் தான் இருக்கக்கூடும் என்று கருதுகின்றேன். ஏனெனில் அத சமூக ஒற்றுமை, சமூக சமத்துவம் ஆகிய காரியங்களில் மற்றெல் லோரைக் காட்டிலும் அதிகமான கவலை எடுத்து வருகின்றது" (குடிஅரசு, ஆக.23,1931)

## இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் - பெரியார் சொல்கிறார்.

1947ம் தேதி இந்தியா சுதந்திரம் பெற்று இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு பெரியார் ரயில்வே ஊழியர்களுக்கிடையே உரை நிகழ்த்து கிறார். அந்த நிகழ்ச்சியில் 5000 பேர் கலந்து கொள்கிறார்கள். அந்த உரையில் முழு நீளமாக இஸ்லாத்திற்கு செல்லுங்கள் அதுவொன்றே சமூக நீதிக்கு தீர்வு என பெரியார் பேசுகிறார்.

அதனை புத்தகமாகவும் "இன ஒழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து" என்று 1947ல் புத்தக மாகவும் கொண்டு வந்தார் பெரியார். 1993ல் கூட மறுபதிப்பு செய்யப்பட்டு புத்தகம் வெளியிடப்பட்டது.

பெரியார் அடுத்தவர்களின் மனதுக்கு ஏற்றவாறு பேசி நல்ல பெயரை பெற்றிட வேண்டும் என்று நினைப்பவர் அல்ல. அதனால் எத்துனை பெரிய கூட்டத்திலும் தன் மனதில் உண்மை என்று எண்ணியதை அப்படியே பேசுவார்.

அதனால் தான் 5000 பேர் கலந்து கொண்ட கூட்டத்திலும், 20,000 பேர் கலந்து கொண்ட கூட்டத்திலும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள் ளுங்கள். அதுதான் இன இழிவு ஒழிய ஒரே தீர்வு என்று பேசினார். (ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 14)

பெரியார் கூறுகிறார்...

"தோழர்களே, நமது வியாதி - நோய் (சூத்திரர்கள், வேசி மகன் என்ற நோய்) பெரிது; மிக மிகப் பெரிது. இது (cancer) புத்துத் தொழு நோய் போன்றது. வெகு நாளைய நோய். இதற்கு ஒரே ஒரு மருந்து தான். அது இஸ்லாம் தான்!.

இதைத்தவிர வேறு மருந்து இல்லை. இது இல்லாவிட்டால் வேதனைப்பட வேண்டியது தான். தூக்க மருந்தும், போதை மருந்தும் கொண்டு நோய் இம்சை தெரியாமல் நாறும் பிணம்போல் கிடக்க வேண்டியது தான் நோய் தீர்ந்து எழுந்து நடக்க இன்றைய நிலையில் இஸ்லாம்(இந்து மதம் விடுவது என்னும்) மருந்து தான் .அதுதான் நாடு கொடுக்கும். நிமிர்ந்து நடக்கச் செய்யும், வீரம் கொடுக்கும் மருந்து ஆகும்!" **(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 16)**



இஸ்லாத்தை ஏற்கப்போவதாக *1930*ல் அம்பேத்கர் அறிவித்த போது பெரியார் அம்பேத் கருக்கு இப்படியொரு கடிதம் எழுதினார்,

"எவ்வளவோ பெரிய பெரிய ஆட்களெல் லாம் அதை கண்டித்தார்கள். மாளவியா, விஜய ராகவாச்சாரியார் போன்றவர்களெல்லாம், 'அம்பேத்கர் அவர்களே உங்களுடைய முடிவை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள்' என்பதாகத் தந்தி கொடுத்தார்கள் அப்போது தோழர் அம்பேத்கர் அவர்களுக்கு நானும் ஒரு தந்தி கொடுத்தேன். என்னவென்றால், நீங்கள் ஒண்டியாகப் போகக்கூடாது. குறைந்தது ஒரு லட்சம் பேரோடு மதம் மாற வேண்டும். அப்போது தான் முஸ்லிம் மதிப்பான். ஒரு லட்சம் பேரோடு தாங்கள் அங்கு போகும் போது நானும் ஒரு பத்து இருபதாயிரும் பேர்கள் தருகிறேன் என்பதாகத் தந்தி கொடுத்தேன்."

**(ஆனைமுத்து தொகுப்பு, பக். 1033)**

இஸ்லாத்தை தவிர மற்ற மதங்களை ஏற்றுக்கொண்டால் உருவாகும் நிலை என்ன என்பது பற்றியும் பெரியார் கூறுகிறார்,

"கிருஸ்துவ மதத்தை தழுவும் இந்து எவனும் இங்கு இந்து ஜாதிக் கொள்கையை தழுவ அனுமதிக்கப்படுகிறான். சீக்கியனும் அநேகமாய் இந்து மதக் கொள்கையைப் படித்தான் கடவுளை வணங்குகிறான். ஆனால் உருவக் கடவுள்களுக்கு பதிலாகப் புஸ்தகத்தை கடவுள் உருவமாய் வைத்து இந்து பிரார்த்தனை முறையில் வணங்குகிறான். சீக்கியனும் இந்து போலவே (அவ்வளவு இல்லாவிட்டாலும்) ஒரு அளவுக்கு ஜாதிப்பாகுபாடு அனுசகிரிக்கிறான். சீக்கியரில் தீண்டப்படாத கீழ் ஜாதி மக்கள் என்று ஒரு கூட்டம் இருக்கச் செய்யப்பட்டு இருந்து வருகிறது.

ஆரியர்கள் சீக்கியர்கள், சீக்கியம் ஆன மதங் களுடன் நேசமாக இருக்கிறார்கள். பௌத்தம், சமணம் முதலியவையும் நடப்பில் இஸ்லாத்தை வெறுப்பதால் இந்துவுடன் வேஷத்தில் உறவாடு வதால் அவைகளிடம் ஆரியருக்கு அவ்வளவு வெறுப்பு இல்லை" **(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 24-25)**

அம்பேத்கர் பௌத்த மதத்தில் சேர்வதை கூட பெரியார் விரும்பவில்லை. அதனை பெரியாரே கூறுகிறார்,

"அம்பேத்கர் பௌத்தத்தில் சேருகிறேன் என்று சொன்னவுடன் எப்போதும் போல பலர் எதிர்த்தார்கள். ஆனாலும் இஸ்லாம் ஆவது என்றால் பயப்படுகிற அளவுக்கு பௌத்தர் ஆகிவிடுவது என்று சொல்லுவதற்கு இந்து மதத்தார்கள் (பார்ப்பனர்கள்) பயப்படமாட் டார்கள். ஏனென்றால் பௌத்தத்தை இந்து மதத் தோடு ஏறக்குறைய கலர வைத்து விட்டார்கள்." (சென்னை சொற்பொழிவு *13.5.1952*)

## முகம்மது நபிகள் பற்றி பெரியார்

நபிகள் நாயகத்திற்கு விழா எடுத்த ஒரே முஸ்லிம் அல்லாத இந்திய அரசியல் தலைவர் பெரியார் மட்டும் தான்.

பெரியார் கூறுகிறார்...

"இன்றைய வரையிலே அவருக்குப்பின்னால் இந்தத் துறைகளில் அவர் சொன்ன கொள்கை கருத்துக்களை விட மேலானதாகச் சொல்லு வதற்கு எவரும் தோன்றவில்லை" (சென்னை சொற்பொழிவு, **20.12.1953**).

"திரு. முகம்மது நபியைப் பற்றி யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் நான் அவரை ஒரு மனிதர் என்றும், மனிதரைப் போலவே தாயும் தகப்பனும் கூடி கருத்தரித்து பிறந்தவர் என்றும் கருதித்தான் அவரால் செய்யப்பட்டதாகச் சொல்லும் விஷயங்களில் அனேகத்தை நான் புகழ்கிறேன். அதற்காகவே அவரையும் நான் பாராட்டுகிறேன். அப்படிச் சொல்லப் படுபவை களே அந்த மார்க்கத்திற்கு ஒரு பெருமை என்றும் நினைக்கிறேன்.

ஆனால் மற்ற மதத்துக்காரர்களோ தங்கள் மதத் தலைவரை ஒரு மனிதர் என்றாலே கோபித்துக் கொள்கிறார்கள். கழுதை, நாய், குதிரை இவற்றினுடைய வயிற்றிலிருந்து பிறந்தவர் என்றாலும் ஏற்றுக் கொள்கிறார்கள்"

**(சாத்தான்குளம், 28.7.1931)**

## இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்ற பெரியாரின் கருத்துக்கு எதிர்விளைவுகள்

பெரியார் இஸ்லாத்திற்கு மாறுங்கள் என்று கூறியதால் அவருக்கு வந்த எதிர்கருத்துகளுக்கு பதிலளித்த பெரியார் இப்படிக் கூறினார்,

"ஆதி திராவிடர்களை நான் இஸ்லாம் கொள்கையை தழுவுங்கள் என்று சொன்ன தற்காக அநேகம் பேர் என் மீது கோபித்துக் கொண்டார்கள். அவர்களை பற்றி நான் கோபித் துக் கொள்ளவில்லை. அவர்களுக்கு சொந்த அறிவுமில்லை. சொல்வதை கிரகிக்க சக்தியு மில்லை. சிலருக்கு தங்கள் மேன்மை போய் விடுமே, தங்களுக்கு அடிமைகள் இல்லாமல் போய்விடுமே என்கின்ற சுயநல எண்ணம் என்றே நான் கருதிவிட்டேன்."

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று பெரியார் தொடர்ச்சியாக கூறி வந்ததால் சில திராவிட கழகத்தாரே பெரியாரின் கருத்துக்கு எதிராக பல கடிதங்கள் எழுதுகிறார்கள். அதற்கும் பெரியார் உங்கள் சிந்தனையில் இஸ்லாமிய வெறுப்பு மட்டுமே அதிகம் இருக்கிறது, உண்மை இல்லையென்று கூறி பதில் தருகிறார்.

"சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் இஸ்லாம் ஒரு கடவுள், ஒரு ஜாதி அதாவது ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அடிப்படையைக் கொண்டது. இந்த அடிப்படை திராவிடனு டையது, திராவிடனுக்கு வேண்டியது என்றும் சொல்லலாம்." **(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 23)**

"இஸ்லாம் மதத்தை எல்லா மக்களும் அனுசரித்தால் பிராமணர் என்ற ஜாதியோ, சமுதாயமோ இரா, பல கடவுள்களும், விக்கிரக (உருவ)க் கடவுள்களும் இருக்க மாட்டா. இந்த விக்கிரக கடவுள்களுக்கு படைக்கும் பொருள் வருவாயும் நின்று போகும். இதனாலேயே இஸ்லாம் ஆரியரால் வெறுக்கபடுகிறது, வெகு காலமாய் வெறுக்கப்பட்டு இஸ்லாமியர்கள் மீது பல பழிகள் சுமத்தி மக்களுக்குள் வெறுப்புணர்ச்சி ஊட்டப்பட்டும் வருகிறது,"

**(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 23 - 24)**

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்ற பெரியாரின் தொடர்ச்சியான பிரச்சாரத்திற்கு வசவு பாடி ஒரு கட்டுரை வெளிவந்தது, அதற்கும் பதிலளித்த பெரியார்,

"நான் இஸ்லாத்தில் சேரும் படி யாரைச் சொல்லுகிறேன்? சூத்திர பட்டத்தை வெறுக் கிறவர்களையும், சூத்திரப்பட்டத்தால் இழி நிலையில் பிற்பட்ட தன்மையில் இருக்கிறவர் களையும், திராவிட சமுதாயத்திற்குமான உணர்ச்சி, மனிதத்தன்மை உணர்ச்சி வேண்டும் என்பவர்களையும் தான் இந்து மதத்தை விட்டு நம் விருப்பத்திற்கு ஏற்ற இஸ்லாத்தை அல்லது அதுபோன்ற மார்க்கத்தை தழுவச் சொல்கிறேன். ஆதலால் மற்றவர்கள் பதற வேண்டியதில்லை." **(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 29-30)**

ஒரு கட்டத்தில் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்தீர்கள் என்றால் கொல்வோம், தூற்றுவோம் என்று கடிதங்கள் பெரியாருக்கு வரத்தொடங்கு கிறது, அதற்கும் பதில் தருகிறார் பெரியார்,

"இதனால் (இஸ்லாமாகும் படி சொல்வதால்)

இளைஞர் மனம் என்மீது வெறுப்புக் கொண்டு விட்டது என்று மிரட்டி எனக்குக் கடிதம் எழுதுகிறீர்கள். இந்தக் காலத்து இளைஞர்கள் மனம் என்மீது (வெறுப்புக் கொள்ளாது) வெறுப்புக் கொண்டு விடுமானாலும் கூட நான் அதற்கு அஞ்சவில்லை. இனி வருங்கால இளைஞர் பாராட்டுவார்கள். பாராட்டாவிட்டாலும் இன்று நான் சொன்னதை பின்பற்றி வீரத்தோடு மான வாழ்வு வாழும் வழியில் இருப்பார்கள். சரியாகவோ, தப்பாகவோ நான் அதில் உறுதிக் கொண்டு இருப்பதால் எனக்கு எக்கேடு வருவ தானாலும், சாவு வருவதானாலும் மனக்குறை யின்றி நிறைமனதுடன் அனுபவிப்பேன் - சாவேன் என்பதை உண்மையாக வெளியிடு கிறேன்."


(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 31-32)

## பெரியார் மேடையில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நபர்கள்

பெரியாரின் இஸ்லாத்தை ஏற்றுக் கொள் ளுங்கள் என்ற பிரச்சாரத்தின் பலனாக பல ஆயிரம் பேர் தென்னிந்தியாவில் இஸ்லாத்தை ஏற்றார்கள். பெரியாரின் மேடையிலேயே பலர் இஸ்லாத்தை தழுவிக்கொண்ட நிகழ்வும் நடந்தது. அதனையும் பெரியாரே கூறுகிறார்,

"சமீப காலம் வரை தீண்டாமை விலக் வேண்டும், தீண்டத்தகாதாவர்கள் என்கின்ற தன்மை மாற வேண்டும் என்று ஆசைப்படு கிறவர்கள் உடனே இஸ்லாமாக ஆக வேண்டும் என்று சொல்லி 20 வருட காலம் பிரச்சாரம் செய்து அந்த சமுதாயத்தவரையும் ஒப்புக் கொள்ள செய்திருக்கிறேன்.

மலையாலத்திலும் 1924 முதல் 34 வரை பிரச்சாரம் செய்து மலையாள ஈழவர்களையும் மற்றும் தீண்டப்படாத மக்கள் என்பவர்களை யும் ஒப்புக்கொள்ளச் செய்தேன். இவர்கள் ஒப்புக்கொண்டு தங்கள் மாநாட்டில் தீர்மா னங்கள் செய்து சுமார் மொத்தத்தில் இங்கு 2000,3000 பேரும் மலையாளத்தில் சுமார் 600,700 பேர்களும் இஸ்லாத்தை தழுவியதுடன் அவர்கள் இழிவுகள் சிறிது சிறிதாக நீக்கப்பட்டு தீர வேண்டிய அளவுக்கு வெற்றி ஏற்பட்டு விட்டது"




(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 35-36)

## இஸ்லாம் திராவிடர் மதம் - சொல்வது பெரியார்

பெரியார் இஸ்லாம் தான் நம் பூர்வகுடி மதம் என்று எடுத்துரைத்தார். திராவிடரான நமக்கு பழங்காலத்தில் சாதிகள் இல்லை. ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் என்று வாழ்ந்து வந்தோம். அதனையே இஸ்லாமும் கூறுகிறது என்று கூறினார் பெரியார்.

"இஸ்லாம் ஒரு கடவுள், ஒரு ஜாதி அதாவது ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அடிப் படையைக் கொண்டது. இந்த அடிப்படை திராவிடனுடையது, திராவிடனுக்கு வேண்டியது என்றும் சொல்லலாம்."

(ஆதாரம் : இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து - பக். 23)

பெரியார் "தமிழ் மக்களுக்கு இஸ்லாம் மதமே பொருத்தமானது " என்று தலைப்பிட்டு 24.02.1935 குடி அரசில் கட்டுரை கூட வெளியிட்டார்.

அதில் பெரியார் கூறுகிறார்,

"ஆரியர்கள் இந்நாட்டுக்கு வந்து குடியேறு வதற்கு முன் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையை பற்றியும் அவர்களது மதம், தெய்வ வழிபாடு என்பவைகளின் மாதிரியை பற்றியும் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காணப்படு கின்றபடி பார்ப்போமானால் தமிழ் மக்களின் அப்போதிருந்த வாழ்க்கையும், மதமும், கடவுள் வழிபாடும் ஆகியவை பெரிதும் இஸ்லாம் மதத்தையும் ஒரு சில கிறிஸ்துவ மதத்தையும் ஒத்து இருக்கின்றன என்று சொல்லலாம். "

"சுயமரியாதைக்காரர்கள் கோரும் மாற்றமும் திருத்தமும் அதிலும் பெரிதும் இல்லையானா லும் கூட இன்று ஆரியர்களை வெறுக்கும் தமிழ் மக்களுக்கு தாராளமாய் இடமிருக்கின்றது."

(குடி அரசு 24.02.1935)

## முஸ்லிம்களுக்கு பக்கபலாக எப்போதும் துணை நின்ற பெரியார்

### ஜின்னாவுடன் பெரியார்

1926ல் காங்கிரஸில் இந்துத்துவா சக்திகள் ஆதிக்கம் செலுத்தி வந்தததையும், முஸ்லிம்களை மிரட்டி வந்த நிகழ்வையும் கண்டித்த ஜின்னா, "நாங்கள் முஸ்லிம்கள், இந்துக்களுடன் எப்போதும் நேசமாகியிருப்பதையே விரும்பு கிறோம். ஆனால், முஸ்லிம்களுடன் எதிர்த்து சண்டையிட துணிந்தால் அவர்களை எதிர்ப்ப தற்கும் தயங்க மாட்டோம். எங்கள் நபியவர் களின் படை இதை வரலாற்றில் சாதித்து காட்டி யிருக்கிறார்கள்" என்று பேசினார்.

இதையொட்டி இந்தியா முழுக்க ஜின்னாவின் பேச்சுக்கு அனைத்து தலைவர்களும் எதிராக குரல் எழுப்பினார்கள். ஆனால் ஒற்றை ஆளாக பெரியார் ஜின்னாவின் இந்த பேச்சு நியாயமானது என்று குரல் எழுப்பினார். ஜின்னாவுக்கு ஆதரவாக 1926ம் ஆண்டு மே மாதம் குடியரசில் எழுதினார் பெரியார்.

## மாட்டுக்கறி விசயத்தில் பெரியார்

இப்போது மட்டுமல்ல பெரியாரின் காலக்கட்டத்திலும் மாட்டுக்கறி பெயரில் முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கு பெரியார் கொடுத்த பதில்,

"பசுக் கொலையை பற்றி இந்துக்கள் முஸ்லீம் களை உபத்திரவிப்பது அனாவசியமென்றே கருதுகிறோம், முஸ்லீம்கள் பசுக்கொலை செய்வதால் இந்துகளுக்கு எந்த விதக் கஷ்டமோ நஷ்டமோ இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்துக்களுக்கு எப்படி ஒரு ஆட்டையோ, கோழியையோ, பன்றியையோ விலை போட்டு வாங்கி வளர்த்து கொன்று தின்பதற்கு பாத்தியமுண்டோ அதேபோல் முஸ்லிம்களுக்கும் பசுவையோ, ஆட்டையோ, கோழியையோ விலை போட்டு வாங்கி கொன்று தின்னப் பாத்தியமுண்டு.

இப்படி இருக்க, முஸ்லீம்களுக்கு மாத்திரம் ஒரு ஜெந்து விசயத்தில் நிர்பந்தம் ஏற்படுத்து வதின் பொருள் என்ன?..

மாடு சாப்பிடுவதும் மாட்டை கொல்வதும் நமது தேசத்தில் முஸ்லிம்கள் மாத்திரம் செய்ய வில்லை. நமது நாட்டில் பஞ்சமர் என்று சொல்வோரில் கோடிக்கணக்கான பேர்கள் அப்படியே செய்கிறார்கள். நாம் இப்போது எந்த அரசாங்கத்தின் கீழ் இருக்கிறோமோ அந்த அரசாங்கமே மாடு தின்கிற வகுப்பை சேர்ந்தவர்கள்.

பஞ்சமர்களும், முஸ்லிம்களும் ஏழைகளாக இருப்பதால் வயதான மாடுகளையும், செத்த மாடுகளையும் உபயோகிக்கிறார்கள். நம்மை ஆளும் ஜாதியாரோ நல்ல வாலிபமுள்ளதாய் - காளைத்தரமாய் - உழைக்கக் கூடியதாய் - அழகுள்ளதாய் பார்த்து வாங்கி கொன்று சாப்பிடுகிறார்கள்." (11.07.1926 குடி அரசு)

## இஸ்லாத்தை விட்டு வெளியேறாதீர்கள்- சொல்வது பெரியார்

ஒரு கட்டத்தில் பெரியாரிடம் ஒரு முஸ்லிம் பெரியவர், உங்கள் கொள்கைகள் எங்கள் இஸ்லாமிய இளைஞர்கள் பலரிடமும் கூட பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இஸ்லாத்திலும் மூட நம்பிக்கைகள் கலந்திருக் கிறது. சில இளைஞர்கள் தங்கள் மார்க்கத்தை விட்டு வெளியேறி உங்களுடன் இணைய விருப்பப்படுகிறார்கள் என்று சொல்கிறார்.

உண்மையில் கடவுள் மறுப்பாளராக அறியப் படும் பெரியார் என்ன செய்திருக்க வேண்டும்?.. உடனே அவர்களை அந்த மார்க்கத்திலிருந்து

வெளியேறி நாத்திகனாக வழி செய்யுங்கள் என்று கூறியிருக்க வேண்டும் அல்லவா?.. ஆனால் அப்படி சொல்லவில்லை பெரியார்.

பெரியார் சொல்கிறார்...

"அப்படிப்பட்ட வாலிபர்களாலும், மௌலவிகளாலும் தங்கள் சமூகத்திலுள்ள சில பழக்க வழக்கங்கள் மார்க்கத்தின் பெயராலும், புரோகிதர்களாலும் இந்துக்கள் சாவகாசத்தி னாலும் அவை மனித இயற்கைக்கும் தர்மத்திற் கும் விரோதமாய் இருந்தால் அக்கொள்கைகளை அதிலிருந்து கொண்டே திருத்த முயற்சிப்பது தான் பயனளிக்குமேயொழிய மார்க்கத்தை விட்டு திடீரென்று வெளியேறி விட வேண்டிய தில்லை என்பதே எனது அபிப்ராயம்"

(குடி அரசு 15.02.1931)

## இஸ்லாத்தின் உட்கூறுகளையும் ஆதரித்த பெரியார்

பெரியார் எதையும் விமர்சனக் கண்ணோட் டதுடன் அணுகுபவர். எதையும் கேள்வி கேட்பவர் பெரியார். அப்படி பெரியார் இஸ்லாத்தின் நடைமுறைகளை ஒவ்வொரு முறையும் கேள்வி கேட்டு விளக்கம் பெற்றார். சில நேரங்களில் விமர்சனமும் செய்திருக்கிறார்.

## இஸ்லாத்தில் பெண்களுக்கு உரிமை - சொல்வது பெரியார்


இஸ்லாமிய மதத்தில் பெரிதும் குற்றச்சாட்டு ளுக்கு உள்ளாக்கப்படுவது பெண்களுக்கு எந்த உரிமையும் கொடுக்கவில்லை என்பது தான். ஆனால், அதனையும் பெரியார் மறுக்கிறார்,

பெரியார் கூறுகிறார்,

"முகமதிய மதத்தில் பெண்களுக்கு உரிமை இருக்கின்றது. அதாவது, பெண்களுக்கு சொத்துரிமை உண்டு. விதவா விவாகம் உண்டு. கணவனும் மனைவியும் ஒத்துக்கொள்ளா விட்டால் விலகிக் கொள்ளச் சுதந்திரம் உண்டு. படிக்க சுதந்திரம் உண்டு. ஆனால் கோஷா முறையை பற்றி குற்றம் சொல்லலாம். ஆனாலும் வர வர அதுவும் விலக்கப்படுகின்றது."

(25.08.1929 குடி அரசு)

## ஹஜ் வழக்கம் பகுத்தறிவு சார்ந்தது - சொல்வது பெரியார்



இஸ்லாத்தில் ஜகாத் முறையை பெருமையாக பேசிய பெரியார் ஹஜ் முறையில் தனக்கு பெரிய ஐயமிருக்கிறது. இந்துக்கள் புனித யாத்திரை செல்வது போலத்தானே என்று ஐயம் எழுப்பினார். அதற்கும் பதில் கிடைத்தவுடன் பெரியார் கூறுகிறார்,

"முஸ்லிம்கள் மக்காவுக்குப் போவதில் செல்வத்திலும், சரீரத்திலும் தகுதியுள்ளவர்கள் தான் போக வேண்டுமென்று இருக்கின்றதே தவிர எல்லோரும் போய்த்தீர வேண்டுமென்று இல்லையென்றும் அந்த இடம் முகம்மது நபி அவர்கள் உண்மையில் பிரத்தியட்சத்தில் பிறந்த இடம் என்பதற்காக அங்கு போவது என்பது தானே தவிர வேறு அற்புதமில்லை என்று அறிவு வளர்ச்சிக்கும் மற்ற மக்கள் நடை, உடை, நாகரிகம் பார்த்து வரவும் பயன்படும் படியான ஒரு யாத்திரை என்றும் கொலை களவு கொள்ளை நடத்தின பாபம் தீர்ந்து விடும் என்று சொல்வது தப்பு என்றும் அந்த மாதிரி எண்ணத்துடன் யாரும் போவதில்லை" என்றும் ஐயத்தை முடித்து வைத்தார்கள் என்றார்.

(குடி அரசு 09.08.1931)

## சமதர்ம ஆட்சி வேண்டுமா முஸ்லிமாக மாறுங்கள் - சொல்வது பெரியார்

**1936**ம் ஆண்டு ஜனவரி மாத குடி அரசு கட்டுரையில் உலக முஸ்லிம்களின் ஜனத் தொகை என்ற விவரத்தை கொடுத்து விட்டு பெரியார் இப்படி சொல்கிறார்,

"தீண்டப்படாத மக்களே, தாழ்த்தப்பட்ட மக்களே நீங்கள் உங்கள் தீண்டாமை ஒழிவதற்கு இல்லாவிட்டாலும் இந்திய மக்கள் அரசியல் சமூக மரியாதைக்கு என்றாவது உடனே எல்லோரும் முஸ்லீம் ஆகுங்கள். இந்தியாவின் 16 கோடி முஸ்லீம்கள் இந்தியாவின் 48 கோடி இந்துக்களுக்கு சமமானவர்கள், 16 கோடி முஸ்லிம்கள் ஆகிவிட்டால் இந்தியாவில் 8 நாளில் சமதர்ம ஆட்சியை ஏற்படுத்தி விடலாம். " (குடி அரசு 12.01.1936)

## இஸ்லாத்தில் தர்மம்

இஸ்லாத்தின் ஜகாத் முறையையும் வரவேற்று ஆதரித்து பேசியிருக்கிறார் பெரியார்,

"முகம்மதிய மதம் தர்ம விசயத்தில் மிக்க பிரயோஜனமான காரியத்தை செய்விக்கிறது. அதாவது ஒரு முஸ்லிம் தனது சொத்தில், அல்லது தனது வரும்படியில் இன்ன பாகம் தர்மத்திற்கு கொடுக்க வேண்டும் என்று இருப்பது அமுலில் இல்லாவிட்டாலும் கொடுக்கும் பணத்தை ஏழைகளுக்கும், கஷ்டப்பட்டு சம்பாதித்து சாப்பிட முடியாதவர்களுக்கும் அநாதைப் பிள்ளைகளை காப்பாற்றி கல்வி, தொழில் கற்று கொடுப்பதற்கும் உபயோகப் படுத்தகின்றதே ஒழிய தர்மத்தின் பெயரால் சோம்பேறிகளை உருவாக்குவதில்லை" (25.08.1929 குடி அரசு)

## முஸ்லிம்களே மதத்தை முற்படுத்துங்கள்-சொன்னது பெரியார்

கடவுள் மறுப்பாளராக மட்டும் காட்சிப் படுத்தப்படும் பெரியார் முஸ்லிம்களின் வளர்ச் சிக்கு அவர்களின் மதம் மட்டுமே காரணம். அதனால் எப்போதும் அதனை முற்படுத்துங்கள். மதத்தை கடந்து தேசியம் என்று வெவ்வேறு காரணங்கள் சொல்லி விலகுபவர்கள் கண்டிப் பாக சமூக நன்மைக்கு வித்திட மாட்டார்கள் என்று கூறினார்.

பெரியார் கூறுகிறார்....

"அவர்கள் (முஸ்லிம்கள்) சமூகம் முன்னேறி வருவதற்கும் அவர்கள் மதம் தலை சிறந்து விளங்குவதற்கும் அதுதான் காரணம். அப்படிப் பட்டவர்கள் இன்று இந்தியாவில் ஜன சமூகத்தில் சுருங்கின எண்ணிக்கை உள்ளவர் களாய் இருந்தும் எப்படிப்பட்ட நெருக்கடி யிலும் சமூகத்தை விட்டுக் கொடுக்காததாலேயே அவர்கள் தலை நிமிர்ந்து நடக்கிறார்கள். சமபங்கு - சில விஷயங்களில் இரட்டைப்பங்கு கூட அடைந்து வருகிறார்கள். இது நமக்கு மகிழ்ச்சியை கொடுக்ககூடியதும் மற்ற சமூகத் துக்கு படிப்பினைக்கு பயன்படுத்தக் கூடியது மான விஷயமுமாகும்." குடி அரசு 14.03.1937

## அரசியல் விஷயத்திலும் முஸ்லிம்கள் ஆதரவு தேவை - சொல்பவர் பெரியார்

பெரியார் கூறுகிறார்,...

"அரசியல் விசயத்திலும் நான் பெரிதும் முஸ்லிம்களுடைய ஆதரவை எதிர்பார்த்த வனாய் இருக்கிறேன்.

ஏனெனில் கல்வியிலும், சமூகத்துறையிலும் பொருளாதாரத்திலும் அரசியலிலும் பிற்படுத் தப்பட்டு, தாழ்த்தப்பட்டு கிடந்த மக்கள் முன்னேற்றமடைய முயற்சிக்க வழி காட்டிய வர்கள் முதல் முதல் முஸ்லிம்களேயாகும். எனது தோழர் கலீபுல்லா சாயுபு அவர்கள் சுய மரியாதை இயக்கத்துக்கு 1500 வருசத்துக்கு முன்பே வழிகாட்டியது இஸ்லாம் என்றார். ஆனால், நான் ஜஸ்டிஸ் இயக்கத்துக்கு கூட 35 வருசத்துக்கு முன்னமேயே வகுப்புவாரி பிரதி நிதித்துவத்திற்கு வழிகாட்டியவர்கள் முஸ்லிம் களேயாகும் அதாவது முஸ்லிம் லீக்கேயாகும் என்று சொல்வேன்" (குடி அரசு 05.12.1937)

## இஸ்லாத்தில் சீர்திருத்தம் சாத்தியம்

இஸ்லாத்தில் சீர்திருத்தம் வேண்டும் என்றும் சீர்திருத்தம் சாத்தியம் என்றும் கூறியவர் பெரியார்,

எப்போதும் இஸ்லாத்தின் மீதான விமர்சனங் களோடு இஸ்லாத்தின் மேன்மையும் எடுத்து கூறி வந்தார் பெரியார்.

"இவற்றையும் மார்க்கக் கொள்கைகளோடு சேர்த்துக் கொண்டிருக்கிறவர்களையும் சேர்த்து வைத்துக் கொண்டு இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்கம் என்று எப்படி சொல்ல இயலும்? கோபிப்பதில் பயனில்லை. மற்ற மதங்களை விட இஸ்லாம் மதம் மேலானது என்பது என் அபிப்ராயம். ஆனால் அதில் இனிச் சிறிது கூடச் சீர்திருத்தம் வேண்டியதில்லை என்பவர்களுடன் நான் முரண்பட்டவன்"

(களக்காடு, 23.12.1950).

பெரியார் ஒருமுறை மிலாடி நபி மாநாட்டில் பேசுகையில், அல்லாசாமி, கூண்டு வழிபாடு (தர்கா வழிபாடு) போன்று இந்துமதத்தில் இருக்கும் சில மூட - பழக்க வழக்கங்களையும் இஸ்லாத்தில் வைத்திருக்கிறீர்கள். இதனை வைத்துக்கொண்டு எப்படி உங்களை பகுத்தறிவு வாதிகள் என்கிறீர்கள் என்றார். அதே இடத்தில் அடுத்த வருடம் பெரியார் மிலாடி நபி மாநாட்டில் பேசிய போது அல்லாசாமி பண்டிகை நடத்தப்படவில்லை. அதை குறிப்பிட்டு பேசிய பெரியார், சென்ற வருடம் நான் அல்லா சாமி உட்பட சில மூடப்பழக்க வழங்கங்கள் இஸ்லாத்திலும் இருப்பது பற்றி சொன்னதால் சிலர் வருத்தப்பட்டார்கள். ஆனால், இந்த வருடம் அல்லா சாமி பண்டிகை நடத்தப்படவில்லை. நான் சொன்னதால் தானே நடந்தது என்று கூறினார்.

அதனால் தான் இஸ்லாத்தை பற்றி கூறுகையில் பெரியார்,

“இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்க மென்றும், பகுத்தறிவின் பரீட்சைக்கு விட்டு அதன்படி நடக்கத் தயார் என்றும் முஸ்லிம்கள் இன்று தைரியமாய்ச் சொல்லுகின்றார்கள். அந்தப்படிச் சொல்ல மற்ற மதக்காரரர்களுக்கு ஏன் தைரியமில்லை? ஏனெனில், திரு. முகம்மது நபி கொள்கைகள் ஆனதனாலும், அநேக விஷயங்களில் அது பகுத்தறிவுக்கு நிற்கத்தக்க யோக்கியதையுடையதாய் இருக்கின்றது”

(‘குடி அரசு’ ஆக. 23, 1931).

## பெரியார் ஏன் இஸ்லாத்திற்கு மாற வில்லை?

இவ்வளவு தூரம் இஸ்லாத்தின் பால் அக்கறையோடு இருக்கும் பெரியார் ஏன் மதம் மாறவில்லை எனக்கேள்வி எழுவது இயற்கை.

அம்பேத்கரிடம் இதற்கான பதிலைப் பெரியார் கூறியுள்ளார்.

“அம்பேத்கர் அவர்கள் என்னைப் பார்த்து என்ன இராமசாமி நாம் இப்படி பேசிக் கொண்டே இருந்தால் என்ன பலன் ஏற்பட முடியும்? வாருங்கள். நாம் இரண்டு பேரும் புத்த மதத்தில் சேர்ந்துவிடுவோம் என்றார். நான் சொன்னேன். 'ரொம்ப சரி, இப்போது முதலில் நீங்கள் சேருங்கள், நான் இப்போது சேருவது என்பது அவ்வளவு ஏற்றதல்ல. ஏனென்றால் தமிழ்நாட்டில் நான் இப்போது சாதி ஒழிப்பைப் பற்றித் தீர்மானமாகப் பிரச்சாரம் செய்து வருகிறேன்.

இந்தியக் கடவுள்கள் எனப்படும் விநாயகர், இராமர் சிலைகளை உடைத்தும், படங்களை எரித்தும் இந்து மதத்திலுள்ள பல விஷயங்களைப் பற்றியும் மக்களிடம் எடுத்துச் சொல்லி இப்போது பிரச்சாரம் செய்வதுபோல் அப்புறம் நான் செய்ய முடியாது.

ஒரு இந்துவாக இருந்து கொண்டு இப்படிப் பேசுவதனால் என்னை யாரும் நீ அதைச் சொல்லக் கூடாது' என்று தடுக்க உரிமை கிடையாது. ஆனால் நான், இன்னொரு மதக் காரனாக இருந்தால் அப்படிப்பட்ட வசதி எனக்கு இருக்க முடியாது”

(டெல்லி பகார் கஞ்ச், 15.12.1959).

**பெரியாரின் இத்தகைய குறிப்புகளை எல்லாம் வைத்துக்கொண்டு தான் இஸ்லாத்திற்கு மாறிய பெரியார்தாசன் ”பெரியார் இஸ்லாம் மதத்திற்கு மாறிவிட்டார்” என்று புத்தகம் எழுதினார். பெரியார் தனிப்பட்ட வாழ்க்கை யில் இஸ்லாத்திற்கு மாறினாரா இல்லையா என்று நமக்கு தெரியாது. அது அவருக்கு இறைவனுக்கும் இடைப்பட்ட நிலைப்பாடு.**

**ஆனால், பெரியார் கடவுளை கண்மூடித் தனமாக எங்குமே எதிர்க்கவில்லை. இஸ்லாத்தின் பால் அதிக காதல் கொண்டிருந்தார் என்பது மட்டும் மறுக்க முடியாதது.**

- அபூ சித்திக்.



# புதிய கல்விக்கொள்கை

## நல்லது எது..? சர்ச்சைகளுக்கான பதில்

இந்தியாவில் கடந்த 34 வருடங்களாக ஒரே கல்விக்கொள்கை தான் பின்பற்றப்பட்டு வருகிறது. அதனை தற்போது பாஜக அரசு மாற்றி அமைத்திருக்கிறது. இதனை தேசியவாத கொள்கை பேசுபவர்கள் ஆதரித்தும், மாநில உரிமைகளை பேசுவோர் கடுமையாக எதிர்த்தும் வருகிறார்கள்.

உண்மையில் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள புதிய கல்விக்கொள்கையில் என்னவெல்லாம் ஆபத்து இருக்கிறது, நன்மை இருக்கிறது என்று விரிவாக ஆராய்வோம்.

### 2020 புதிய கல்விக்கொள்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அம்சங்கள்

இதுவரை 10+2 என்று 12 வருடமாக இருந்த பள்ளிபருவ படிப்பு தற்போது 5+3+3+4 என 15 வருடங்களாக மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது, இதுவரை 6 வயதில் தான் குழந்தையை பள்ளியில் சேர்க்கும் நிலை இருந்தது.

ஆனால், தற்போது 3 வயதின் தொடக்கத்திலேயே பள்ளியில் சேர்க்கலாம்.

ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழிக்கல்வி. தனியார் மற்றும் அரசு பள்ளிகளிலும் இது நடைமுறைப்படுத்தப்படும்.

மும்மொழிக்கொள்கை - மூன்றில் இரண்டு இந்திய மொழிகள் இருத்தல் நல்லது. தான் கற்கும் மொழியை மாற்றிக்கொள்ள நினைத்தால் 6 அல்லது 7ம் வகுப்பில் மாற்றலாம். ஆனால், மேல்நிலைக்கல்வியை முடிக்கும் முன் மூன்று மொழிகளிலும் அடிப்படை செயல்முறையில் தேர்ச்சி பெறுவது அவசியம். (New Education Policy 4.13)

சமஸ்கிருதம் ஏனைய மொழிகளை விட உயர்வானது, அதனால் எல்லா நிலைகளிலும் விருப்ப பாடமாக இருக்கும். புதிய கல்விக் கொள்கையில் 23 இடங்களில் சமஸ்கிருதம் என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டிருக்கிறது. (New Education Policy 4.17)

6 முதல் 8 ம் வகுப்பு மாணவர்களுக்கு தச்சு வேலை, மின்வேலை, உலோக வேலை, தோட்ட வேலை, மட்பாண்ட வேலை, கைவினை கலைகள் போன்றவை கற்றுத்தரப்படும். (4.26)

இந்தியாவை பற்றிய அறிவு பண்டைய இந்தியாவை பற்றிய அறிவாகும். நவீன இந்தியாவிற்கு பண்டைய இந்தியா அளித்த பங்களிப்புகள் குறித்தும் விழிப்புணர்வு/ஆவணப்

படம் மாணவர்களுக்கு காட்டப்படும். அதை பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்படும். (4.27)

3,5,8ம் வகுப்புக்கு பொதுத்தேர்வு நடத்தப் படும். 3ம் வகுப்புக்கு அடிப்படை கல்வியறிவு கொண்ட கேள்விகள் தான் தேர்வில் கேட்கப் படும். (4.40)

பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு நாடு முழுக்க பொதுவான நுழைவுத்தேர்வு நடத்தப் படும்.

இந்தியாவில் 2035 க்குள் GER (பொதுச் சேர்க்கை அளவீட்டை) 50% ஆக மாற்றுவோம்.

## 10+2 லிருந்து 5+3+3+4 க்கு மாற்றம்

இதுவரை இந்தியாவில் பள்ளிச்சேர்க்கை வயது 6 வயதுக்கு மேல் இருக்க வேண்டும். அதனை தற்போது மூன்றாக மாற்றியிருக் கிறார்கள்.

ஏற்கனவே, குறைந்த வயதிலேயே குழந்தை களை பள்ளிகளில் சேர்ப்பதன் மூலம் குழந்தைகள் மழலை விளையாட்டுத் தன்மையை இழந்து இயந்திரமயமாக்கலுக்குள் சென்று விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. இந்நிலையில் மூன்று வயதில் குழந்தைகளை சேர்ப்பதானால் வீட்டில் கிடைக்கும் அன்பு, வீட்டில் கிடைக்கும் சுதந்திரமான சூழல் போன்றவற்றை குழந்தைகள் இழக்க நேரிடும்.

ஏற்கனவே தமிழகத்தில் 6 வயதுக்கு உட் பட்ட குழந்தைகளின் திறன் வளர்க்க அங்கன் வாடி, பால்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் அடிப்படை நோக்கமே குழந்தைகளுக்கான உணவு தேவையை பூர்த்தி செய்வது தான்.

அதாவது 6 வயதுக்கு முன்னதாகவே குழந்தைகளுக்கு அடிப்படை கல்வியை தரும் செயல்முறை தமிழகத்தில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால், கட்டாயப்படுத்தப் படவில்லை. தற்போது புதிய கல்விக் கொள்கை யின் மூலம் கட்டாயப்படுத்துவதினால் குழந்தை களின் சுதந்திரம் தான் பாதிக்கபடுமே ஒழிய எந்தவொரு பெரிய மாற்றத்தையும் உருவாக்க போவதில்லை.

## ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழிக்கல்வி கட்டாயம்

புதிய கல்விக்கொள்கையின் மிகச்சிறந்த அம்சம் என்று இந்த திட்டத்தை தான் அதிகம் அனைவரும் கொண்டாடுகிறார்கள். ஆனால் இதிலும் ஒரு பெரும் சிக்கல் இருப்பதை யாரும் கவனிக்கவில்லை.

தாய்மொழி கட்டாயம் படிக்க வேண்டும் என கூறுவதற்கும் தாய்மொழிக்கல்வியில் பயில்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

எதையும் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை மறுத்து விட்டு அங்கே கட்டாயத்தை புகுத்துவது பெரும் ஆபத்தானது.

உதாரணத்திற்கு தாய்மொழிக்கல்வி 5ம் வகுப்பு வரை கட்டாயமாக்கப்படும் எனும் போது தமிழகத்தில் மொழிப்பாடத்தை தவிர அறிவியல், கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களை தமிழில் தான் படிக்க வேண்டும். 5ம் வகுப்புக்கு பிறகு தாய்மொழிக்கல்வியில் இருந்து மாறிக்கொள்ளலாம் என்ற சூழலில் 6 ம் வகுப்பில் ஆங்கிலத்தில் அறிவியல், கணிதம், சமூக அறிவியல் பாடங்களை படிக்கும் போது மிகுந்த சிரமத்திற்கு ஆளாக நேரிடும்.

நான் 5ம் வகுப்பு வரை மெட்ரிகுலேசன் பள்ளியில் ஆங்கில வழியில் படித்தேன். பிறகு 6ம் வகுப்பில் தமிழ்வழிக்கல்வியில் அரசு பள்ளியில் சேரும் போது எனது படிப்பின் புரிதல் மொத்தமாக உடைந்து போனது. அதுவரை ஆங்கிலத்தில் படித்து வந்த எனக்கு தமிழில் புதிதாக படிக்க எனது ஒரு வருட கால படிப்பு பெரும் சிரமத்திற்கு உள்ளானது.

இது போலத்தான தமிழில் படித்து ஆங்கிலத்திற்கு மாறுவோர் நிலையும் இருக்கும். இன்று அறிவியலில் ஆங்கிலப்பெயர்களே பரவ லாக பயன்பாட்டில் இருக்கும் போது தமிழில் அதனை படிப்பதென்பது எந்த அளவிற்கு ஆரோக்கியமானதாக இருக்கும்?..

தற்போது அரசு பள்ளிகளிலேயே ஆங்கில வழி கொண்டு வந்து மாணவர்களிடம் தரத்தை உயர்த்தும் சூழலில் கட்டாயம் அனைவரும் தமிழில் தான் அனைத்து பாடங்களையும் படிக்க வேண்டும் என்பது நம்மை முன்னேற்றத்திலிருந்து

பின்னுக்கு தள்ளுவதாகவே அமையும்.

தமிழகத்திற்குள் இருந்து கொண்டு தமிழை கட்டாய மொழிப்பாடமாக அனைவரும் எடுத்து படிக்க வேண்டும் என்பதே அனைவரின் குரலாக இருந்ததே ஒழிய அனைத்து பாடத்தையும் தமிழில் படிக்க வேண்டும் என்று இருக்கவில்லை. ஆனால், இதனைத்தான் புதியகல்விக்கொள்கை பரிந்துரைக்கிறது.

## மும்மொழிக்கொள்கை

3 வயதில் இருந்தே மூன்று மொழிகளை படிக்கும் நிலைக்கு மாற்ற வேண்டும் என்கிறது புதிய கல்விக்கொள்கை.

3 மொழிகளை கற்றுத்தரும் நடைமுறை அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் தற்போதும் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால், மூன்றாவது மொழி கட்டாய தேர்ச்சி பாடமாக இல்லை. அதனை வெறும் துணைப்பாடமாக வைத்திருக்கிறார்கள். அதனால் அதற்கு பெரிய முக்கியத்துவம் இல்லை.

அதாவது பொதுத்தேர்வு என்று வரும் போது மூன்றாவது மொழியில் தேர்ச்சி பெற்றால் தான் மேல் வகுப்புக்கு செல்ல முடியும் என்ற கட்டாயம் இல்லை.

உதாரணத்திற்கு, நான் மெட்ரிகுலேசன் பள்ளியில் படிக்கும் போது மூன்றாவது பாடமாக இந்தி இருக்கும். வகுப்பில் 50 பேர் என்றால் 40 பேர் இந்தியில் தோல்வியடைவார்கள். இதுவே நான் 6ம் வகுப்பில் அரசு பள்ளியில் சேர்ந்த பின் இரண்டு மொழிகள் தான் என்றாலும் அதிகமான தோல்வி ஆங்கிலத்தில் தான் இருக்கும்.

இனி மும்மொழிக்கொள்கை அரசு பள்ளி களுக்கு வருமானால் தோல்வி விகிதம் ஆங்கி லத்தை விட மூன்றாவது மொழியில் அதிகமாக இருக்கும் என்பதற்கு மாற்றுக்கருத்தில்லை.

10ம் வகுப்பில் அரசு பள்ளிகளில் தோல்வி யடையும் மாணவர்களுக்கு அதிக காரணமாக இருப்பது ஆங்கிலம் தான். இதன் காரணமா கவே தன் பள்ளிப்படிப்பை நிறுத்தி விட்டு வேலைக்கு சென்று விடுவார்கள்.

மும்மொழிக்கொள்கை ஒன்று வருமானால் தற்போது இருப்பதை விட அதிகமான தோல்வி விகிதம் உருவாகும். இது மாணவர்கள் பள்ளியில் இருந்து இடைநிற்றல் எண்ணிக்கையை பெரிதளவில் அதிகமாக்கும்.

## 3,5,8-ம் வகுப்புக்கு பொதுத்தேர்வு

தமிழகத்தில் தற்போது 10ம் வகுப்புக்கு பிறகே பொதுத்தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில் தமிழக அரசு 5 மற்றும் 8ம் வகுப்பு பொதுத்தேர்வு என்று அறிவித்தவுடன் தமிழகம் முழுக்க ஏற்பட்ட கொந்தளிப்பின் காரணமாக அந்த திட்டத்தை பின்வாங்கியது தமிழக அரசு. மீண்டும் அதனை மத்திய அரசு புதியகல்விக்கொள்கை மூலம் கொண்டு வந்திருக்கிறது.

தமிழகத்தில் 8ம் வகுப்பு வரை அனைவருக் கும் கட்டாயம் தேர்ச்சி பெறச் செய்யப்படு வார்கள் என்பது தான் தமிழக அரசின் கல்வி நிலைப்பாடாக இருக்கிறது. அதனால் தான் தமிழக கிராமங்கள் உட்பட மாணவர்கள் கல்விபெறும் விகிதம் தமிழகத்தில் அதிகமாக இருக்கிறது.




5 அல்லது 8ம் வகுப்பில் பொதுத்தேர்வு என்று வரும் சூழலில் அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களின் இடைநிற்றல் அதிகரித்து பெரும் பின்னடைவை தமிழகம் சந்திக்க வேண்டி வரும்.

அதிலும் 5 மற்றும் 8 வகுப்புகளில் இரண் டுக்கு பதிலாக மூன்று மொழிப்பாடங்களை வைத்து மூன்றிலும் தேர்ச்சி பெற்றால் தான் அடுத்த வகுப்பு என சொல்கிறது புதிய கல்விக் கொள்கை. அப்படியானால் இடைநிற்றல் எந்தளவுக்கு அதிகரிக்கும்!..

## சமஸ்கிருதம்

மத்திய அரசு அறிவித்திருக்கும் புதியகல்வி கொள்கையில் அனைத்து மொழிக்கும் சமத்துவம் கொடுக்கப்படவில்லை என்று கொள்கை வரைவே தெளிவாக காட்டுகிறது.

புதிய கல்விக்கொள்கையில் மொத்தம் 23 இடங்களில் சமஸ்கிருதம் என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சமஸ்கிருதம் பண்டைய காலத்து அறிவியல் மொழி, அதிகமான இலக்கியங்கள் கொண்ட மொழி என்று புதிய கல்விக்கொள்கையில் சிலாகித்து கூறப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ், தெலுங்கு,கன்னடம் போன்ற இந்தியாவின் மற்ற மொழிகள் ஒரே இடத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

புதிய கல்விக்கொள்கையில் மூன்று மொழிகள் படிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக் கிறது. தமிழகத்தில் இயல்பாக தமிழ், ஆங்கிலம் மற்றும் மூன்றாவதாக ஒரு மொழி எடுப்பார்கள்.

இந்த மூன்றாவது மொழி எந்த இந்திய மொழியாக வேண்டுமானாலும் இருக்கலாம் என்று தான் கல்விக்கொள்கை கூறுகிறது, ஆனால், யதார்த்தத்தில் அனைத்து இந்திய மொழிகளை கற்ற ஆசிரியர்களையும் ஒரு பள்ளியில் வேலைக்கு அமர்த்த முடியாது. அதனால் கல்விக்கொள்கையில் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும் சமஸ்கிருத ஆசிரியரையும், மக்கள் பொதுவாக அதிகமாக எடுக்கும் இந்தி மொழிக்கான ஆசிரி யரை மட்டுமே வேலைக்கு அமர்த்துவார்கள். அதனால் இயல்பிலேயே நீங்கள் மூன்றாவது மொழி எடுக்க வேண்டி இருந்தால் சமஸ்கிருதம் அல்லது இந்தி என இரண்டில் ஒன்றைத் தான் தேர்ந்தெடுத்தாக வேண்டும்.

இதனை நேரடியாக இந்தி/ சமஸ்கிருத திணிப்பு என்று கூற முடியாது. ஆனால், இது திணிப்பு தான்.

## 6-ம் வகுப்பிலிருந்து தொழிற்கல்வி

புதிய கல்விக்கொள்கையில் 6ம் வகுப்பி லிருந்து மாணவர்களுக்கு தொழிற்கல்வி பயிற்சி வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, இது மாணவர்களை படிப்பிலிருந்து வெளி யேற்றி தொழில்களின் பக்கம் கொண்டு போகும் என்றே பார்க்கப்படுகிறது.

இதனை ஆதரிப்பவர்கள் அனைவரும் அமெரிக்காவில், சீனாவில் எல்லாம் இப்படி யான தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகிறது. அதனால் இந்தியாவிலும் வழங்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

ஆனால், இவர்கள் ஒன்றை கவனிக்க மறுக்கிறார்கள். அமெரிக்காவிலும், சீனாவிலும் சாதி இல்லை. இந்தியாவில் இருக்கிறது.

இந்திய சூழல் அமைப்பில் சாதிய படிநிலை வேரூன்றி இருக்கிறது. அதனால் தான் தாழ்த் தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள் இன்னும் சுய மரியாதையுடன் வெளியே வர முடிவதில்லை.

ஒரு குப்பை அள்ளும் தொழிலாளியின் மகன், முடி வெட்டும் தொழிலாளியின் மகன் அதே தொழிலை கற்று மீண்டும் அதற்குள் சென்று விடக்கூடாதென்றே இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படுகிறது. இந்தியாவை பொறுத்தவரை தொழிற்கல்வி கற்றுத் தருவதே அவன் படிப்பை விட்டு நிற்பதற்கான வாய்ப்பாக அமைந்து விடும் என்று எதிர்க்கப்படுகிறது.

தொழிற்கல்வி கற்றதும் நான் தொழிலையே செய்கிறேன் என மாணவன் முடிவெடுக்கும் போது அதை தடுக்கும் நிலை கொண்ட உயர்சாதி இந்துக்களாகிய பெற்றோர்கள் மட்டுமே இந்தியாவில் இல்லை. அவர்கள் வெறும் 3% தான். மற்ற பிற்படுத்தப்பட்ட சாதி முழுக்கவும் உள்ள பெற்றோர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழாகவும், நடுத்தர வாழ்வாதாரத்தையுமே கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதனால் மீண்டும் தொழிற்கல்வி என்ற பெயரில் குலக்கல்வி நிலைத்து விடும் என்று தான் இந்த திட்டமும் எதிர்க்கப்படுகிறது.

## நவீன இந்தியாவின் அறிவு பண்டைய இந்தியாவின் அறிவாகும்

தற்போது அறிவியல் வளர்ச்சியில் இந்தியா அடைந்திருக்கும் வளர்ச்சியெல்லாம் பண்டைய இந்தியாவின் வளர்ச்சியே. இதனை மாணவர் களிடம் எடுத்துக் கொண்டு போய் சேர்ப்போம் என்று குறிப்பிடுகிறது புதிய கல்விக்கொள்கை.

மத்திய அரசாக இருந்து வரும் பாஜகவில்

உள்ள பிரதமர் மோடி உட்பட பாஜக தலைவர்கள் அறிவியலுக்கு எதிராக கருத்து தெரிவித்து வருவது நமக்கு தெரியும்.

அந்த காலத்திலேயே புஷ்பக விமானம் இருந்தது, அந்த காலத்திலேயே பிள்ளையாருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி நடந்தது எல்லாம் வேத காலத்திலேயே நடந்துவிட்டது என்று கற்பனைக்கதைகளை அறிவியலுடன் புனைந்து மேடைகளில் பேசினார்கள். அதனை எல்லாம் தற்போது கல்விக்கொள்கையில் கொண்டு வந்து மாணவர்களுக்கு சொல்லிக் கொடுப்போம் என்கிறார்கள்.

## இந்தியாவின் GER மதிப்பு 2035-க்குள் 50% ஆக உயர்த்துவோம்

2018ம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவின் GER 26.3% அதை புதியகல்விகொள்கையை அறிமுகம் செய்வதன் மூலம் 50% ஆக உயர்த்த வேண்டும் என்று புதிய கல்விக்கொள்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பள்ளி கல்வியிலருந்து உயர் கல்விக்கு போகும் GER (மொத்த சேர்க்கை விகிதம்) தமிழகத்தில் 49% இருக்கிறது. இதைத்தான் மத்திய அரசு இந்தியா முழுக்க 2035க்குள் 50%ஆக உயர்த்திட வேண்டும் என்று கல்விக் கொள்கையின்மூலம்கூறுகிறது. ஆனால்தமிழகம் 2020ல் மத்திய அரசு குறிப்பிட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பே இந்த வளர்ச்சியை பெற்றிருக்கிறது.

இதிலும்தமிழகத்திற்குவழிகாட்டுவதுபோல புதிய கல்விக்கொள்கை ஏமாற்றுவதால் தான் தமிழகத்தில் எதிர்ப்பு அதிகமாக இருக்கிறது,

இதுபோக பொதுவான நுழைவுத்தேர்வு போன்ற இன்னும் ஆபத்தான அம்சங்கள் புதிய கல்விக்கொள்கையில் இருக்கிறது.

## தமிழகத்தை இந்தியா பின்தொடரட்டும்

இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட தனித்து செயல்பட்டு பல்வேறு துறைகளில் மற்ற மாநிலங்களை விட முன்னின்று கொண்டிருக்கிற மாநிலம் தமிழகம். கல்வியில் முன்னின்று வருவதற்கு காரணம் மற்ற மாநிலங்களிலிருந்து தனிப்பட்டு இயங்கும் தமிழகத்தின் கல்விக் கொள்கை.

உண்மையில் இந்தியாவை கல்வியில் மேம்படுத்த மத்திய அரசு விரும்பினால் தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வரும் கல்விக்கொள்கையை ஆராய்ந்து இந்தியா முழுக்க நடைமுறைப் படுத்தட்டும்.

பள்ளிக் கல்வியிலிருந்து உயர்கல்விக்கு மாண வர்கள் செல்லும் விகிதம் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விட தமிழகம் தான் முதலிடம்.

மருத்துவத் துறையில் தமிழகம் அடைந்திருக்கும் வளர்ச்சி,

உலகத்தரத்தில் WHO விதி, 1000 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும் என சொல்கிறது. ஆனால், தமிழகம், கேரளா, கர்நாடகம், டெல்லி போன்ற மாநிலங்களில் இதை விட அதிகமான மருத்துவர்கள் இருக்கிறார்கள். இன்று மருத்துவதுறையின் உச்சியை தொட்டிருப்பதாக சொல்லப்படும் மேலை நாடுகளுக்கு நிகராகவும், மேலாகவும் தமிழகத்தின் வளர்ச்சி இருக்கிறது.

1000 பேருக்கு 4 மருத்துவர்கள் என்பது தமிழகத்தின் நிலை, இது நார்வே (4.3), ஸ்வீடன் (4.2) போன்ற மருத்துவதுறையின் உச்சியில் இருக்கும் நாடுகளுக்கு இணையான வளர்ச்சியாகும். இதுவே டெல்லியில் 1000:3, UK, அமெரிக்கா, கனடா நாடுகளுக்கு இணையான வளர்ச்சி. கேரளா மற்றும் கர்நாடகாவில் 1000:1.5 எனவும் பஞ்சாப் மற்றும் கோவா 1000:1.3 என்ற அளவிலான வளர்ச்சியையும் பெற்றிருக்கின்றது. (- TOI 02-09-18)

## மத்திய அரசின் புரட்சி திட்டங்கள் தமிழகத்திற்கு ஏன் ஆபத்து?

தமிழகத்தின் கல்வித்துறையில் சில தேக்க நிலைகள் இருக்கிறது என்பது மறுப்பதிற்கில்லை. ஆனால், அதே நேரத்தில் இந்தியாவின் மற்ற மாநிலங்களை போல கீழ் நிலையில் இல்லை. அவர்களை விட வெகுவாக முன்னேறி இருக்கிறது தமிழகம்.

மத்திய அரசு கொண்டு வரும் திட்டம் தமிழகத்தின் தேக்க நிலையை சரி செய்யப் போவது இல்லை. தமிழகத்தின் வளர்ச்சியை பறிக்கும் வகையில் அமைந்திருக்கிறது.




உதாரணத்திற்கு நீட்டை எடுத்து கொள்வோம். புதிய கல்விக்கொள்கையை போல் தரத்தை உயர்த்துவோம் என்ற குரலோடு தமிழகத்திற்குள் ஊடுருவியது நீட். அதனால் தமிழகம் இழந்ததை கவனியுங்கள்.

தமிழகத்தில் மட்டும் தான், இந்தியாவிலேயே அதிகப்படியான மருத்துவத்துறையின் சிறப்பு சிகிச்சைகளுக்கான உயர்மேற்படிப்பில் 195 சீட்டுகள் இருக்கிறது. இந்தியாவில் உள்ள 10 மாநிலங்களில் ஒரு சீட் கூட இல்லாத நிலையும், 10 மாநிலங்களில் பத்துக்கும் குறைவான சீட்டு களே இருக்கின்றன. இந்த நிலையில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட NEET-SS நுழைவுத் தேர்வில் வெறும் 19 பேர் தான் தமிழகத்தை சார்ந்தவர்கள். தேர்வான மற்றவர்கள் எல்லாம் வெளி மாநிலங்களை சேர்ந்தவர்கள். இது தொடர்ந்தால் மருத்துவத்துறையிலும், சிறப்பு சிகிச்சை முறையிலும் பேர் பெற்றிருக்கும் தமிழ்நாடு அந்த நிலையை இழக்க நேரிடும் என்கிறார்கள் தமிழக மருத்துவர்கள்.

MBBS சேர்வதற்கு நடத்தப்படும் நீட் தேர்விலும் இதே நிலை தான். கடந்த ஆண்டு நீட் தேர்வில் 720 மதிப்பெண்ணிற்கு 420 க்கு அதிகமாக மதிப்பெண் எடுத்தவர்கள் தமிழ் நாட்டில் வெறும் 470 பேர் மட்டும் தான். ஆனால் அதுவே கேரளாவில் 4000 மாண வர்கள், உத்தரபிரதேசத்தில் 11900 மாணவர்கள், டெல்லியில் 9000 மாணவர்கள் 400 க்கு மேல் வாங்கியிருக்கிறார்கள். (07-08-17) TOI,mdu.)

தமிழ்நாட்டில் மொத்தம் 22 அரசு மருத்துவ கல்லூரியில் 2447 MBBS சீட்கள் இருக்கிறது. ஆனால் கடந்த ஆண்டில் அரசு பள்ளியிலிருந்து நீட் தேர்வின் மூலம் வெறும் 4 பேருக்கு மட்டும் தான் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதுவே 2017ல் 2 பேர் என்ற அளவில் தான் இருந்தது.

ஆனால், 2016ம் ஆண்டில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு அடிப்படையில் நடந்த மருத்துவ சேர்க்கையில் அரசு பள்ளியில் இருந்து 30 மாணவர்கள் தேர்வாகியிருந்தார்கள். இந்த எண்ணிக்கையே போதாது எனும் நிலையில் கூட, முன்னேறி கொண்டிருந்த வளர்ச்சியையும் அழித்து தமிழகத்தை படுபாதாளத்தில் தள்ளி யிருக்கிறது மத்திய அரசு கொண்டு வந்த ‘நீட்’ நுழைவுத் தேர்வு. - (TOI 21-08-18.)

தமிழகத்தை எந்தளவுக்கு கீழே தள்ளியிருக் கிறது நீட் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதே நிலை தான் நாளை புதிய கல்விக்கொள்கையை அனுமதிக்கும் போதும் தமிழகத்திற்கு உருவாகும்.

## RSS கொடுத்த கல்விக்கொள்கை

புதிய கல்விக்கொள்கை என்று வரைவு வரும் போதே ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலையீடு இருந்ததை பலர் எதிர்த்தார்கள். ஆனால் அது பொருட்படுத்தப்படவில்லை.

புதிய கல்விக்கொள்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் என நாடு முழுக்க RSS 40 பெரும் கூட்டங்களை 6000 கல்வியாளர் களுடன் நடத்தியது, அதில் குறிப்பிடப்பட்ட அம்சங்கள் தாராளமாக புதியக் கல்விக் கொள்கையில் இருப்பதால் இது கல்விப்புரட்சி என மார்தட்டுகிறது RSS.

தாய்மொழிக்கல்வி, மும்மொழிக்கல்வி, தொழிற்கல்வி, சமஸ்கிருதத்திற்கு முன்னுரிமை அளித்தல் ஆகிய RSS கோட்பாட்டு தத்துவங்கள் அனைத்தும் புதியக்கல்விக்கொள்கையில் இடம் பெற்றிருக்கிறது,

-அபூ சித்திக்.

## சிலுவைப் போர்கள் 2.0

# நமது முதல் எதிரி



புகு முன்

அன்பார்ந்த வாசகர்களே!

முஸ்லிம்கள் இந்த உலகிலும் இந்தியாவிலும் எதிர்கொள்ள வேண்டிய முதல் எதிரி இஸ்லாத்திற்கெதிராகவும், முஸ்லிம்களுக்கெதிராகவும் இட்டுக்கட்டப்படும் பொய்கள், புனைந்துரைகள். அவற்றை அடிப்படையாகக் கொண்டு பிஞ்சிகளின் நெஞ்சங்களிலும், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் நெ சங்களிலும் வளர்க்கப்பட்டிருக்கும் வெறுப்பு. இடைவிமாமல், இந்த வெறுப்பு வளர்க்கப்படுகின்றது.

இந்த வெறுப்புக்கு எதிராக உண்மைகளை எடுத்துச்சொல்லி இஸ்லாத்தின் விழுமியங்களை அந்த மக்களின் மனதில் விதைத்திட வேண்டும். அவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றியும், முஸ்லிம்களைப் பற்றியும் சொல்லித் தரப்பட்டிருப்பவை அப்பட்டமான பொய்கள் என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும்.

மிகவும் பாரதூரமான பணி என்பதை நாமறிவோம். அதனை எளிதாக்குவதே இந்தத் தொடர்.

இஸ்லாம் போர் செய்வதையும், தலைகளை வெட்டுவதற்கும், வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்காகவுமே வந்த மார்க்கம் என்று பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இதற்கு சான்றாக இஸ்லாத்தின் வரலாற்றில் நடந்த சில போர்களின் பின்னணிகளை திரித்துக் காட்டுகின்றார்கள். உண்மையில் போர்களில் கூட முஸ்லிம்களுக்கென தனி நெறிமுறைகளும், இங்கிதங்களுமிருந்தன. இதனை ஜான் பெஃபர் அவர்கள் சற்று மேலெழுந்தவாரியாக தனது சிலுவைப் போர் 2.0-இல் நூலில் தனது தொட்டுக்காட்டுகின்றார். நாம் இங்கே கடந்த முன்று தொடர்களில் இஸ்லாம் போர்களின் போது கடைப்பிடித்த இங்கிதங்களை, அதிகத் தகவல்களுடன் வரிசைப்படுத்தி வருகின்றோம்.

இதன்வழி வாசகர்கள், சமூக ஊடங்களில், அச்சு, காட்சி ஊடகங்களிலும், இஸ்லாத்தின் மீது இட்டுக்கட்டப்படும் வெறுப்பை எதிர்கொள்ளலாம். மக்களின் மங்களிலிருந்து அந்த வெறுப்பை வெளியேற்றலாம்.

**இஸ்லாத்தின் மேல் ஈர்ப்பைக் கொண்டு வரலாம். அல்லாஹ் விரும்பினால் அவர்கள் நேர்வழி பெறலாம். இன்ஷா அல்லாஹ்.**

**இனி போர்களின் போது இஸ்லாம் கடைப்பிடித்த இங்கிதங்களைத் தொடர்ந்து பார்க்கலாம்...**

**போர்களின் போது இஸ்லாம் கடைப்பிடித்த இங்கிதங்கள்**

*- சென்ற இதழின் தொடர்ச்சி...*

## அல்லாமா இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் யூதர்கள், கிறிஸ்தவர்களுக்காக நடத்திய விடுதலைப் போராட்டம்

*தார்த்தாரிகள் சிரியாவைத் திடீரென தாக்கினார்கள். முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோரைச் சிறைப் பிடித்துச் சென்றார்கள். அல்லாமா இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் தார்தாரிகளின் தலைவரிடம் கைதிகளை வெளியிடச் சொல்லிப் பேசினார்கள்.*

*தார்த்தாரியர்களின் தலைவர் முஸ்லிம்களை விடுதலை செய்வதாக மட்டுமே ஒத்துக்கொண்டார். ஆனால் யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் விட மாட்டேன் என அடம்பிடித்தார். ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா அவர்கள் இதற்கு ஒத்துக்கொள்ள வில்லை. யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் இணைத்தே விடுவிக்க வேண்டும் எனப் பேசினார்கள். ஏனெனில் இவர்களும் இஸ்லாமிய அரசின்கீழ் பாதுகாப்பு வரியைச் செலுத்தி வாழ்ந்தவர்கள். அவர்களையும் சேர்த்தே விடுதலை செய்ய வேண்டும் என்றார்கள். தங்களிடம் வரி செலுத்தி வாழ்ந்த ஒரு குடிமகனைக் கூட சிறையில் விட்டுச் செல்ல முடியாது. அது தங்கள் சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக (முஸ்லிம்களாக) இருந்தாலும் சரி, அவர்களல்லாத சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி எனக் கூறினார்கள்.*

## கிறிஸ்தவர்களின் காட்டுமிராண்டித்தனம்!

*உலக வரலாற்றில் அனைவரும் கண்ணிமைக் கொட்டாமல் கேட்கும் வரலாறு சிலுவைப் போர்களின் வரலாறு.*

*இந்தச் சிலுவைப் போர்களில் முஸ்லிம்கள் வெற்றி பெற்ற போதெல்லாம், தாங்கள் தந்த வாக்குறுதிகளைக் காப்பாற்றினார்கள். எப்போதும் வெற்றி கொள்ளப்பட்ட மனிதர்களின் மேல் அநியாயங்களைக் கட்டவிழ்த்து விட்டதில்லை. தவறுதலாகக்கூட அப்படியொரு தவறு நடைபெற்றதில்லை.*

*ஒவ்வொரு முறையும் அவர்கள் (கிறிஸ்தவர்கள்) செய்த நயவஞ்சகத்தையும், இழைத்த துரோகத்தையும் முஸ்லிம்கள் மன்னிக்கவே செய்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் எத்துணைதான் நேர்மையாகவும் பெருந்தன்மையாகவும், நடந்து கொண்டாலும் கிறிஸ்தவர்கள் பழிவாங்கும் காட்டுமிராண்டிகளாகவே நடந்து கொண்டார்கள்.*

*முஸ்லிம்கள் வெற்றி பெற்ற போதெல்லாம், மனித உயிர்களின் சேதத்தைக் குறைத்திட என்னவெல்லாம் செய்திட இயலுமோ அவற்றையெல்லாம் செய்தார்கள். ஆனால், கிறிஸ்தவர்கள் வென்ற போதெல்லாம் அவர்கள் முழங்கால் ஆழம் வரை ரத்தத்தை ஓட்டியே நடந்தார்கள். இரக்கமற்ற அந்த ஜென்மங்கள் தாங்கள் செய்த காட்டு தர்பார் கொலை பாதகச் செயல்களைச் சொல்லிக் காட்டி குதூகலித்துக் கிடந்தார்கள்.*

*வன்நெஞ்சம் கொண்ட இந்தச் சிலுவைப் போர் சிப்பாய்கள் மஃரஹ் அல் நுஹ்மா என்ற இடத்தில் நுழைந்த போது, அங்கே இருந்தவர்களையெல்லாம் ஆயுதங்களை கீழே போடும்படி கட்டாயப்படுத்தினார்கள். ஆனால் அந்த மக்கள் ஆயுதங்களைக் கிழே போட வில்லை. அவ்வாறு அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்றால் அவர்களை எதுவும் செய்ய மாட்டோம் என இந்தச சிலுவைப்போர் சிப்பாய்களின் தலைவர்கள் உறுதியளிக்க வேண்டும் என்றொரு நிபந்தனையை விதித்தார்கள். ஒத்துக்கொண்டார்கள் சிப்பாய்களை வழிநடத்தி வந்தோர். அவர்கள் ஆயுதங்களை கீழே போட்டார்கள். அடுத்தகணமே அவர்களின் ரத்தங்கள் ஓட்டப்பட்டன. அவர்களின் பிணங்களின் மேல் பயணம் செய்தார்கள் இந்த மாதோன்மத்தர்கள்!*

*கொடுத்த வாக்குறுதியை மீறினர் அந்த மிருகங்கள். வெட்கித் தலைகுனிந்திட வேண்டிய இந்தச் செயலைச் சொல்லிச் சிலாகித்துச்*

சிரித்தனராம் பின்னாளில் என்னே வெட்கக் கேடு!

இந்தக் குள்ளநரிகளின் குறுவாளுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை பத்தாயிரம். இதில் பெண்களும், குழந்தைகளும், வயோதிகர் களும் உண்டு.

இந்தக் கோரச் செயலுக்குப் பின்னர் இவர்கள் பைத்துல் முகத்தஸை நோக்கிப் பாய்ந்தனர். அங்கே நிராயுதபாணிகளாக நின்ற மக்களை வளைத்துப் பிடித்தனர். அந்த மக்கள் 'தான்கார்ட்' என்ற தளபதியிடம் ஓர் உறுதிமொழியைக் கேட்டார்கள். அதில் தங்களது உயிர்களும் உடைமைகளும் காப்பாற்றப்பட வேண்டும் எனக் கோரினார்கள்.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் முகமாக, அந்தத் தளபதி அந்த மக்களின் கைகளில் ஒரு வெள்ளைக் கொடியைத் தந்தான். அதை அக்ஸா பள்ளிவாசலில் ஏற்றிடும்படி பணித்தான். தங்களது உயிர், உடைமை ஆகிய வற்றைப் பாதுகாக்கும் முகமாக அக்ஸா பள்ளி வாசலின் உள்ளே சென்றுவிடும்படி கூறினான்.

இதை அந்த மக்கள் செய்த பின்னர் தன் குறுமதியை வெளிக்காட்டினான். அத்தனை அப்பாவி மக்களையும் பிணங்களாக்கிப் பார்த்து மகிழ்ந்தான். பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள் எனத் தங்களைத் தற்காத்துக் கொள்ள முடியாதவர்கள் முதல் அனைவரையும் கொலை செய்தான்.

தங்களது முழங்கால் முங்கிட இரத்த ஆற்றை ஓட்டிய பின்னரே அவர்கள் அடங்கினார்கள். பொது வழிகளும், போக்குவரத்துச் சாலைகளும் இரத்தத்தால் நனைந்தன. மண்டையோடுகளும், மனித உடல்களும் காணுமிடமெல்லாம் காட்சி தந்தன.

அக்ஸா பள்ளிவாசலில் மட்டும் எழுபதாயிரம் பேர் பிணமாக்கப்பட்டார்கள். பெண்கள், குழந்தைகள் அல்லாமல் அறிஞர்களும், பக்திமிக்கவர்களும் ஏராளமாகக் கொலை செய்யப்பட்டார்கள். ஆங்கில வரலாற்றறிஞரும் இந்த உண்மைகளை மறுக்கவில்லை. இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவெனில், இந்த வெட்கங்கெட்ட கோழைத்தனத்தை பெருமையோடு பீற்றிக் கொள்கிறார்கள் இவர்கள் என்பதுதான்.

## ஸலாஹுத்தீன் அய்யூபியின் பெருந்தன்மை

தன்மானம் சற்றுமில்லாத இந்த ஈனச் செயல்கள் இடம்பெற்று 90 ஆண்டுகளுக் குப்பின், ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்கள் பைத்துல் முகத்தஸை வெற்றி கொண்டார்கள்.

அப்போது அங்கே ஒரு லட்சம் கிறிஸ்த வர்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்த மக்களைப் பார்த்து முதன் முதலில் அவர்கள் பிரகடனப் படுத்திய செய்தி :

"எல்லோருடைய உயிரும் உடமையும் பாதுகாக்கப்படும்"

அங்கே வாழ்ந்த இந்த மக்கள் (கிறிஸ்தவர்கள்) வெற்றி கொள்ளப்பட்டார்கள் என்பதற்கு அடை யாளமாக அவர்களிடமிருந்து - அதுவும் முடிந்த வர்களிடமிருந்து - ஒரு சிறு தொகையை வசூலித்து விட்டு அவர்கள் அந்தப் பட்டணத் திலிருந்து வெளியே வந்து வாழும்படி பணிக்கப் பட்டார்கள். இதற்கும் நாற்பது நாள் அவகாசம் அளிக்கப்பட்டது. இப்படி 84,000 பேர் தங்களது உற்றார், உறவினர்களின் இல்லங்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். இந்தப் பிணைத் தொகையிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் விடுவிக்கப்பட்டனர்.

ஸலாஹுத்தின் அய்யூபியின் உடன் பிறந்த சகோதரர் மாலிக் ஆதில் (ரஹ்) அவர்கள் தங்களது சொந்த பணத்திலிருந்து பிணைப்பணம் தந்து 2,000 கைதிகளை - கிறிஸ்தவர்களை - விடுவித்தார்கள்.

அங்கே பெண்களுக்குத் தரப்பட்ட கண்ணியம், வெற்றி பெற்றவர்களின் வரலாறு இன்று வரை சந்திக்காத ஓர் ஒப்பற்ற செய்தி யாகும்.

கிறிஸ்தவத் தலைமைப் பாதிரியார் தன்னையும் விட்டு விடும்படியும் வேண்டிக் கொண்டார். அனைத்துக் கண்ணியங்களுடனும் அவர் அனுப்பி வைக்கப்பட்டார். இந்தப் பாதிரியார் மதவரி என்ற அடிப்படையிலும், இதர காணிக்கைகள் என்ற வகையிலும் எண்ணற்ற சொத்துக்களையும், மாணிக்கப் பரல்களையும், வைரங்களையும் பெரும்

செல்வமாகக் குவித்து வைத்திருந்தார். இவை அனைவரது கண்களையும் உறுத்தின. சிலர் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களிடம் அனைத்தையும் கைப்பற்றி விடும்படி ஆலோசனை வழங்கினார்கள். ஆனால், ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் தாங்கள் கொடுத்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்கிட இயலாது என்று கூறிவிட்டார்கள். சாதாரண சாமான்யன் என்ற அளவில் ஒருவரிடம் பிணைப் பணமாக என்ன வசூலிக்கப் பட்டதோ அதுவே இந்தத் தலைமைப் பாதிரியாரிடமிருந்தும் வசூலிக்கப்பட்டது.

இத்தோடு அளந்து நிறுத்திட முடியாத அளவுக்கு அளவுகளைக் கடந்து விரிந்து சென்றது ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் பெருந்தன்மை.

பைத்துல் முகத்தஸில் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் நுழைந்தார்கள். அங்கே இருந்த அநியாயக்காரர்களை வெளியேற்றினார்கள். அத்தனை பேரும் பாதுகாப்போடு வெளியேறும் முகத்து தன் இராணுவ வீரர்களைக் கொண்டு பாதுகாப்பு கொடுத்தார்கள். கிறிஸ்தவர்களை சவ்ர், சைய்தா ஆகிய இடங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனப் பொறுப்பும் சுமத்தினார்கள்.

இப்படிப் பெருந்தன்மைகள் பிரவாகமெடுத்து ஓடிக்கொண்டிருந்த போது கிறிஸ்தவ உலகம் ஒட்டுமொத்தமாக முஸ்லிம்களுக்கெதிராக உருவிய வாளோடு நின்று கொண்டிருந்த நிகழ்வைப் படிப்போர் நிச்சயம் நெகிழ்வார்கள் என அமைந்த இந்தப் பெருந்தன்மைக்கு ஈடு இணை உண்டோ? இந்த வினா இன்றளவும் விடை கிடைக்காமல் தனித்தே நிற்கின்றது.

அத்தோடு நின்றால் உலகத்திற்குப் படிப்பினைகள் கிடைக்காமல் போகும். இஸ்லாம் ஏன் வாளேந்தச் சொல்கின்றது என்பதை மானிடர்கள் புரிந்திடாமல் போய் விடுவார்கள் என அஞ்சினார் போலும் அய்யூபி அவர்கள். தொடர்ந்தன பெருந்தன்மைகள் அருள்மறையின் வழிகாட்டுதலின்கீழ்

வரலாற்றை இன்றுவரை வனப்போடு நிரப்பிக் கொண்டிருக்கும் வெற்றிக்குச் சொந்தக்காரராய் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள்.


சுல்தான் முஹம்மத் II (ரஹ்)

அன்றுவரை அவரை வெறுத்த பெண்மணிகள் எதிரே நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் பிணைத் தொகையும் செலுத்திவிட்டனர். எனினும் கண்ணீர் அவர்களின் கண்களில் கரை புரண்டோடியது. காரணம் கேட்டார்கள் அய்யூபி அவர்கள். அந்தப் பெண்கள், "எங்களைக் காத்திட வேண்டிய ஆண்கள் போரில் கொல்லப் பட்டு விட்டார்கள். எஞ்சியோர் கைதிகளாக உங்களிடம் சிக்கிக் கொண்டார்கள். இந்நிலையில் எங்களைக் காப்பாற்றுவோர் எவருமில்லை" என்றார்கள்.

கருணை நபி (ஸல்) அவர்களைத் தன் வாழ்க்கையை வழி நடத்தும் முன்மாதிரியாக ஆக்கிக் கொண்ட ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களால் தனது கண்களை உடைத்து வந்த கண்ணீரை அடக்கிக்கொள்ள இயலவில்லை.

அந்தப் பெண்களின் காப்பாளர்கள் யாரேனும் சிறை பிடிக்கப்பட்டிருந்தால் அவர்களை உடனேயே விடுதலை செய்திட வேண்டும் என ஆணை பிறப்பித்தார்கள். யாருடைய காப்பாளர்களெல்லாம் கொலை செய்யப்பட்டு விட்டார்களோ அவர்களெல்லாம்; மன நிறைவான இழப்பீட்டைப் பெறலாம் என அறிவித்தார்கள். இந்தப் பெண்கள் தாங்கள் குடியமர்ந்த இடங்களிலெல்லாம் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களை வானளாவப் புகழ்ந்தார்கள்.

சிறைப் பிடிக்கப்பட்ட கைதிகளை விட்டுவிடும் நாள் வந்தபோது அவர்கள் தங்களது மதங்களைச் சார்ந்தவர்கள் வாழும் இடத்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டார்கள்.

கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியினர், பைத்துல் முகத்தஸை விட்டு வெளியேறினார்கள். அவர்கள் "ஆன்றினோக்" என்ற கிறிஸ்தவர்களால் ஆளப் படும் பகுதிக்குச் சென்றார்கள். ஆனால் அந்தக் கிறிஸ்தவ ஆட்சியாளன் அவர்களை தனது எல்லைக்குள் அனுமதிக்க மறுத்துவிட்டான்.

தங்கள் மதத்தைச் சார்ந்த மன்னனே கைவிட்டுவிட்ட நிலையில், அவர்கள் தட்ட ழிந்தனர். ஆதரிப்பார், அரவணைப்பார் எவரு மில்லை. கடைசியில் முஸ்லிம்களே அவர்களை ஆதரித்து அரவணைத்து புகழிடம் தந்தார்கள்.

இன்னொரு கூட்டத்தார் திரிபோலிக்குச் சென்றார்கள். அவர்கள் தங்களுடன் முஸ்லிம்கள் தந்த தங்களது பொருட்களையும் எடுத்துச் சென்றார்கள். அப்போது திரிபோலி லத்தின் மொழி பேசுபவர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் இந்த மக்களை விரட்டியடித்தார்கள். அத்தோடு அவர்களின் உடைமைகள் அனைத் தையும் பிடுங்கிக் கொண்டார்கள். (இந்தப் பொருட்கள், முஸ்லிம்கள் அந்த மக்கள் உயிர் வாழ வாழ்வதற்காகக் கொடுத்தனுப்பியவை)

இஸ்லாம் ஈன்றெடுத்த வீரப்புதல்வன் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள், வெளிக் காட்டிய அத்தனை பெருந்தன்மைகளையும் மறைக்கத்தான் பேனாவைப் பயன்படுத்தி னார்கள் மேலைநாட்டு எழுத்தாளர்கள். அவர்களின் எழுத்துக்களே ஒரு உண்மையை ஊரெல்லாம் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

அந்த உண்மை

போர் முழு வேகத்தில் நடந்து கொண்டிருக் கின்றது. கிறிஸ்தவப் படைகளும் முஸ்லிம் படைகளும் வாழ்வா, சாவா என்ற பெரும் போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவப் படைத் தளபதி ரிச்சர்டு என்பாருக்கு நோய். இந்த ரிச்சர்டு கிறிஸ்தவர்களிளொரு தூய்மையான வீரன். இந்த வீரனின் உடல் நலம் குன்றிப்போன செய்தி இஸ்லாத்தின் வீர விழுது ஸலாஹுத்தீன் அய்யூபியின் காதுகளில் எட்டியது. ரிச்சர்டைப் பார்த்து வைத்தியம் செய்திட தன்னுடைய சொந்த வைத்தியரையே அனுப்பி வைத்தார்கள் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள். அத்தோடு நிற்கவில்லை. ரிச்சர்டு நோய்வாய்ப்பட்டிருந்த பகுதியில் கிடைக்காத மருந்துகளையும் பழ வகைகளையும் உடன் அனுப்பி வைத்தார்கள்.

மேலைநாட்டு எழுத்தாளர்கள் சிலர் தங்கள் சிந்தனையைச் சிறைவைத்துக் கொண்டு, மனசாட்சியை மண் தோண்டிப் புதைத்து விட்டுத் தங்கள் பேனாக்களை எடுத்துக் கொண்டு தெரு முனைக்கு வந்து இஸ்லாத்தை வசை பாடுகின்றார்கள். இந்தச் சந்துமுனை சிந்துபாடிகள் கூட ஒரு சம்பவத்தை மறைக்க முடிவதில்லை. இந்த இஸ்லாமிய உண்மை வீரன் ஸலாஹுத்தீன் அய்யூபியின் வாழ்க்கையில் நடந்த அந்தச் சம்பவம் இதோ :

போர் நடந்துகொண்டிருக்கும் போது, ஒரு பெண்மணி ஓடோடி வந்தாள் ஸலாஹுத்தீன் அய்யூபி பாசறை இறக்கியிருந்த இடத்திற்கு! கண்ணீரும் கம்பலையுமாக நின்ற அந்தப் பெண் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களிடம், தன் குழந்தையை அபிசீனியப் படை வீரர் ஒருவர் பிடுங்கிச் சென்று விட்டதாகக் கூறினாள். அந்தத் தாய் சேயைப் பிரிந்த சோகம் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் கண்களையும் பனிக்கச் செய்தது. தன்னுடைய படைத் தளபதிகளில் ஒருவரை அழைத்தார்கள். குழந்தையை மீட்டு வரப் பணித்தார்கள்.

அந்தத் தாயின் குழந்தையை மீட்டு வந்தார் தளபதி. தாயையும் சேயையும் அவர்களின் முகாமில் பாதுகாப்பாகக் கொண்டு சேர்க்கும் படி பணித்தார்கள் பண்பாளர் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள்.

இஸ்லாத்தின் வீர மைந்தர்கள் தங்கள் வாள்களைச் சுழற்றினார்கள் என்றால் அவர்கள் எத்தனை ஒழுக்கத்தோடு சுழற்றினார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் போர் முகத்தில் காட்டிய இங்கிதங்களும் ஒழுக்கங்களும்!

அந்த இறையடியார்களின் கைகளிலே நின்று சுழன்ற வாள்கள் எத்தனை நீதியோடும் நேர்மையோடும் சுழன்றன என்பதைச் சூழ்ந்து நின்ற படைகளினூடே ஸலாஹுத்தீன் அய்யூபி

அவர்கள் காட்டிய நேர்மை சொல்லும். அவர் சார்ந்து நின்ற இஸ்லாமிய நாகரிகத்தின் நேரடித் தாக்கம் அது!

எழுத்துக் குப்பைகளைக் கொட்டி இந்த மாணிக்க வரிகளையும் வரலாறுகளையும் மறைக்க முயன்ற அத்தனை மணல் வாரி எழுத் தாளர்களும் தங்கள் மடியில் கட்டிக்கொண்டது தோல்வி ஒன்றைத்தான்!

இந்த ஒளிமிக்க நாகரிகம் இஸ்லாத்திற்கு மட்டுமே சொந்தம்.

## சுல்தான் முஹம்மத் II (ரஹ்) அவர்கள் வெளிக்காட்டிய பெருந்தன்மை

சுல்தான் முஹம்மத் II (ரஹ்) அவர்கள் கான்ஸ்டான்டி நோபிளை வெற்றி கொண்டார்கள். கிறிஸ்தவர்கள் புனிதமாகக் கருதும் இடங்களைப் பார்வையிடச் சென்றார்கள். கிறிஸ்தவப் பாதிரிகள் ஏனைய தளபதிகளைப் போலவே முஸ்லிம் படைத் தலைவர்களையும் எண்ணியிருந்தனர். ஆகவே அடங்கி ஒடுங்கி புனித சோபியா ஆலயத்திற்குள் புதைந்து கிடந்தார்கள். ஏறத்தாழ எல்லா கிறிஸ்தவப் பாதிரிமார்களும் அங்கே மறைந் திருந்தார்கள்.

சுல்தான் முஹம்மத் அவர்கள் அந்த ஆலயத்திற்குள் குற்றுயிராய்ப் பதைத்துக் கொண்டிருந்த பாதிரிகளுக்கு இப்படியொரு இனிப்பான செய்தியை அனுப்பினார்கள் :

"அந்தப் பாதிரிகள், எந்த தயக்கமுமில்லாமல் வெளியே வரலாம். அவர்கள் தங்களது தேவை களை முன் வைக்கலாம். அவற்றில் நியாய மானவை அனைத்தும் அப்போதே நிறைவு செய்யப்படும். அச்சம் என்பது அவர்களுக்குத் தேவையில்லை. அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பலாம். அவர்கள் தங்கள் தனியார் சட்டங்களைத் தாராளமாகப் பின்பற்றலாம்."

இவற்றோடு, அவர்கள் தங்கள் தலைமைப் பாதிரிகளையும் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக் கலாம் என அனுமதித்தது. அதற்கான ஏற்பாடு களையும் செய்தார்கள். தலைமைப் பாதிரியார் தேர்வுக்குப் பின்னால் மிகவும் ஆடம்பரமான ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்தார்கள். அனைத்துச் சுதந்திரங்களோடும் அந்த விழா பீடுநடைப் போட்டது. சுல்தான் தன் பங்கிற்கு ஓர் அழகிய குதிரையை ஏற்பாடு செய்து தந்தார்கள்.

மதகுருக்கள் சுல்தான் அவர்களைக் காண வந்திடும் போதெல்லாம் இராஜ மரியாதை யோடு வந்தனர். சுல்தான் காட்டிய எளிமை அவர்களை நிலைநடுங்கச் செய்தது.

கிறிஸ்தவர்கள் பல பொருள்களைச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கருதினார்கள். அதேபோல் சில பொருள்களை அபூர்வப் பொருள்களாகக் கருதினார்கள். இவையெல்லாம் இப்போது போரில் கிடைத்தப் பொருள்களாக முஸ்லிம்களின் கைகளுக்குப் போய்விட்டன. என்ற ஏக்கம் அந்த மத குருக்களின் முகத்திலும், கிறிஸ்தவர்களின் மனங்களிலும்

சுல்தான் முஹம்மத் II (ரஹ்) அவர்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பொருள்களையும், அபூர்வப் பொருள்களையும் விலை தந்து வாங்கி மீண்டும் கிறிஸ்தவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

கிறிஸ்தவர்களிடம் முறையான ஒப்பந்தங் களைச் செய்திடும் முன்பே இத்தனையையும் செய்தார்கள் சுல்தான் முஹம்மத் II (ரஹ்) அவர்கள். நிச்சயமாக அவர்கள் இந்த ஒப்பந்தத்தை செய்த பின்னரே இப்படியெல்லாம் நடந்திட கடமையுடையவர்கள். ஆனால், அவர்கள் இப்படி நடந்துகொள்வதில்லை இஸ்லாம் குறுக்கே நிற்கவில்லை. மிகுப் பெருந் தன்மையுள்ள ஒரு நாகரிகத்தை மனித இனம் இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த நாகரிகத்திலும் கண்டதில்லை.

இதனால்தான் கிறிஸ்தவர்கள் நாங்கள் பைஸாந்தியர்களின் கீழ் வாழ்ந்ததை விட அதிக சுதந்திரத்தோடு இஸ்லாமியர்களின் ஆட்சியில் வாழ்ந்தோம் எனக் கூறுகின்றனர்.

## உதுமானியப் பேரரசர்களின் பெருந்தன்மை

மேலே குறிப்பிட்டதைப் போலவே உதுமானியப் பேரரசர்களும், தங்கள் ஆட்சியில் கிறிஸ்தவர்களை நடத்தினார்கள். கிறிஸ்தவர்கள் எந்த அளவுக்கு இந்த ஆட்சியின் கீழ் நிம்மதியாக வாழ்ந்தார்கள் என்பதை ஒரு சிறு நிகழ்ச்சியின் மூலம் குறிப்பிட்டுக் கூறிவிடலாம்.



கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ளாலேயே பல்வேறு பிரிவினராகப் பிரிந்து பிளவுண்டு கிடந்தார்கள். இதில் ஒரு பிரிவினர் ஆட்சி செய்திடும்போது இன்னொரு பிரிவினர் உரிமைகளை நசுக்கினார்கள். ஏன்? இன்னொரு பிரிவினர் உயிரோடு வாழ்வதையே அவர்களால் சகித்துக் கொள்ள இயலவில்லை.

இந்நிலையில் ஒருமுறை கிறிஸ்தவர்களின் ஒரு பிரிவினரிடையே, "நீங்கள் உங்களில் ஒரு பிரிவினராகிய கிறிஸ்தவர்களின் கீழ் வாழுகின் றீர்களா? அல்லது முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் வாழுகின்றீர்களா?" எனக் கேட்டபோது அவர்கள் சொன்ன பதில் :

"நாங்கள் முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ்தான் உரிமையோடு வாழ்ந்திட முடியும். ஆகவே நாங்கள் முஸ்லிம்களின்கீழ் வாழ்வதையே தேர்ந்தெடுக்கிறோம்" எனக் கூறினார்கள்.

உதுமானியப் பேரரசின்போது, பல்கேரியா போன்ற நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டன. அதுபோல் கிரேக்கத்தின் சில பகுதிகளும் இஸ்லாத்தின்கீழ் வந்தன. இந்த மக்களெல்லாம் இஸ்லாமிய ஆட்சியின்கீழ் மனமார்ந்த உரிமைகளோடு வாழ்ந்தார்கள். இந்த உரிமை களையோ சுதந்திரங்களையோ அவர்கள் ஐரோப்பாவில் தங்கள் மக்களிடம் கூட அனுபவிக்கவில்லை.

குறிப்பாக ஹங்கேரியில் வாழ்ந்த கிளிஃப்ன் என்ற கிறிஸ்தவர்கள் ஹாப்ஸ்பர்க் என்ற கிறிஸ்தவர்களின் ஆட்சி யின் கீழிருக்க வாய்ப்பளித்தபோது, "நாங்கள் ஹாப்ஸ்பர்க் கிறிஸ்தவர்களின் ஆட்சியில் கீழிருக்க மாட்டோம். நாங்கள் துருக்கி முஸ்லிம்களின் ஆட்சியின் கீழிருக்கவே விரும்புகின்றோம்" என்று கூறி முஸ்லிம்களின் ஆட்சியின்கீழ் வந்து விட்டார்கள்.

அதேபோல்தான் சிலிசியாவில் வாழ்ந்த புராட்டஸ்டாண்ட் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ ஆட்சியாளர்களிடமிருந்து வெருண்டோடி வந்து முஸ்லிம்களின் ஆட்சியில் தஞ்சம் புகுந்து முழுமையான மதச் சுதந்திரத்தை அனுபவித் தார்கள்.

## ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் தங்களோடு வாழ்ந்த சகோதர கிறிஸ்தவர்களை நடத்திய விதம்

துருக்கியை மையமாகக் கொண்டு நடந்த இஸ்லாமிய ஆட்சியின் கீழ் கிறிஸ்தவர்கள் எல்லா வளமும் பெற்று நிறைவாக வாழ்ந்தார்கள். அந்த நாள்களில் மத மாச்சரியங்கள் உலகெங் கினும் குரூரமாக வளர்ந்து நின்றன. மத மாச் சரியங்கள் தலைக்கேறியவர்கள் ஆட்சியாளர் களாய் அமர்ந்து தங்களுக்குப் பிடிக்காத மதத் தவர்களை வெட்டி வீழ்த்திக் கொண்டிருந் தார்கள்.

இதேபோல் பல்வேறு மதத்தினரும் தங்களுக்குள் மோதி மடிந்து கொண்டிருந் தார்கள். மனித இரத்தம் மடை வைத்துப் பாய்ந்தது. அந்நிலையில் யாருடைய வாழ்வுக் கும் எந்த உத்திரவாதமும் இல்லாமற் போய் விட்டது.

அங்கே வீழ்ந்த பிணங்களின் குன்றுகளைக் கண்ட ஒரு எழுத்தாளர் தனது அதிர்ச்சியை இப்படிப் பதித்திருக்கின்றார் :

குரூரம் வாய்ந்த கத்தோலிக்கக் கிறிஸ்த வர்கள், தங்களைப் போன்ற இன்னொரு கூட்டம் கிறிஸ்தவர்களைக் கொன்று குவித்த கோரம் எழுதி மாளாது! எழுபதாயிரம் பேர்களையாவது படுகொலை செய்வார்கள். இந்தப் பாவிகள்! எத்துணை கொடுமை மிக்க துரோகிகள் இவர்கள்! என்னே இரக்கமற்ற பாவிகள் இவர்கள்! இதயமே இல்லாத மனிதப் பிண்டங்களே இவர்கள்! அடப்பாவிகளே! ஒன்றுமறியாத பாதிரிப் பெண்களின் தலையை யும் கொய்தீர்களே!

தங்களை அர்ப்பணித்து மதத்தை மக்களிடையே பரப்ப வந்த கன்னியாஸ் திரீகளையும் உங்கள் கொடு வாளால் குத்திக்

குதறினீர்களே! உங்களை மனிதர்கள் என்று சொல்ல உங்களிடம் என்ன இருந்தது? கதறி அழுவதைத் தவிர வேறெதையும் அறியாத குழந்தைகளையும் உங்கள் வாட்கள் பிளந்து போட்டனவே! மானங்கெட்டவர்களும் வெட்கித் தலைகுனியும் செயல்களைச் செய்யும் நீங்கள் "இறைவனை நம்புகின்றோம்" எனக் கூப்பாடு போடவும் தயங்கவில்லையே!

"இப்படியெல்லாம் செய்வதன் மூலம் நீங்கள் உங்களைச்சாராத கிறிஸ்தவர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாகத் துடைத்தெறிந்து விடலாம் என எண்ணுகின்றீர்களா? முடியாது. ஏன் தெரியுமா? இறைவன் தன் அளவற்ற கருணையை வெளிக்காட்டி துருக்கியில் ஓர் ஆட்சியைத் (இஸ்லாமிய ஆட்சியை) தந்திருக்கின்றான். அது காலமெல்லாம் நிலைக்க வேண்டும். பாதுகாப்பு வரியை (ஜிஸ்யாவை) வசூலிக்கின்றார்கள். அத்தோடு முழுமையான பாதுகாப்பையும் வழங்குகின்றார்கள்."

"நாங்கள் இந்தப் பாதுகாப்பு வரியைச் செலுத்துவதால் பெண்களையும், குழந்தைகளையும் கொலை செய்யும் நீங்கள் எங்களை அண்ட முடியாது. நீங்கள் எங்களை ஒட்டுமொத்தமாக அழிக்கவும் முடியாது; அசைக்கவும் முடியாது. இந்த முஸ்லிம்களிடம் மத மாச்சரியமோ, மன மார்ச்சர்யமோ எள்ளளவுகூட இல்லையே! இவர்களின் கீழ் கிறிஸ்தவர்கள், யூதர்கள், சாமரிட்டான்கள் ஆகியோர் குடிமக்களாக வாழ்கின்றார்கள். அத்தனை பேரும் எந்தக் கவலையுமற்று நிறைவான நிம்மதியோடு வாழ்கின்றார்களே! இவர்களெல்லாம் போலந்து நாட்டில் வாழ்ந்த போது எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். அந்தப் போலந்து ஆட்சியாளர்களுக்கு கச்சைக் கட்டி ஏவல் செய்யக் காத்துக்கிடந்தார்கள்.

ஆனால் போலந்தின் ஆட்சியாளர்கள் கொஞ்சமும் மனசாட்சியற்ற பணிகளை அல்லவா செய்தார்கள்! அந்தக் கிறிஸ்தவர்களிடம் வரிகளை வசூலித்தார்கள். அத்தோடு அந்தக் கிறிஸ்தவர்களை (கர்ண கொடூரமான கொடுமைகளைத் தங்கள் நெஞ்சங்களிலே தேக்கி வைத்திருந்த) யூதர்களின் கைகளிலே ஒப்படைத்தார்கள். இந்த யூதர்கள் அந்தக் கிறிஸ்தவர்களை தங்கள் பிரார்த்தனைகளை நடத்திட ஒரு ஆலயத்தைக் கூட கட்டிட விடவில்லையே! அத்தோடு விட்டார்களா இந்த வன்நெஞ்சர்கள்! அவர்களின் மத குருக்கள் அனைவரையும் வெட்டிப் போட்டுவிட்டார்களே! அந்தக் கிறிஸ்தவர்கள் தங்களுக்கு மத போதனைகளை வழங்கிட ஒரு மதகுரு கூட இல்லாமல் தவித்தார்களே!"

மக்கோரியஸ் (ஆன்டிநோக், (Antinoch) தலைமைப் பாதிரி)

## கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் ஒன்றி வாழ்ந்த வரலாற்றிலிருந்து ஒரு துளி!

சுல்தான் முஹம்மத் II (ரஹ்) அவர்கள் கிறிஸ்தவர்களை எப்படி நடத்தினார்கள் என்பதை மேலே நாம் கோடிட்டுக் காட்டினோம். குறிப்பாக சுல்தான் முஹம்மத் II (ரஹ்) அவர்கள் கான்ஸ்டாண்டிநோபிளை வெற்றி கொண்டபோது கிறிஸ்தவர்களை எப்படி நடத்தினார்கள் என்பதை விளக்கமாகவே பார்த்தோம்.

இப்போது அதே கான்ஸ்டாண்டிநோபிளை கிறிஸ்தவர்கள் கி.பி. 1204-இல் வெற்றி கொண்டபோது, தங்களது சகோதர கிறிஸ்த



வர்களை எப்படி நடத்தினார்கள் என்பதைப் பார்ப்போம்!

இதை நாம் சொல்வதைவிட ஒரு கிறிஸ்தவர் சொல்லக் கேட்போம். இந்த சாட்சியத்தை வழங்குபவர் வேறு யாருமல்ல. போப் இன்னசென்ட் III (Pope Innocent III) என்ற கிறிஸ்தவர்களின் தலைமைப் பாதிரி. அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்...

"ஏசுவைப் - [ஈஸா (அலை)] பின்றுபற்றுபவர்கள் தங்கள் வாள்களை கிறிஸ்தவத்தின் மிகப்பெரிய எதிரிகளுக்கு (முஸ்லிம்களுக்கு) எதிராகத்தான் வீசிட வேண்டும். ஆனால், மிகவும் வேதனையான வகையில் அவர்கள் கிறிஸ்தவ சகோதரர்களுக்கெதிராகவே தங்கள் வாள்களைப் பெருமளவில் பயன்படுத்தினார்கள்.

தங்கள் சகோதர கிறிஸ்தவர்களுக்கெதிராக அவர்கள் தங்கள் வாள்களைப் பயன்படுத்தி இரத்தத்தை ஒட்டக் கூடாது என்று அவர்களுக்கு மதத்தால் தடை விதித்திருந்தது. அவர்கள் இந்தத் தடைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. இரத்தத்தை ஒட்டிக்கொண்டே இருந்தார்கள். அவர்கள் தங்கள் மதத்தைப் பற்றியோ அதன் தடைகளைப் பற்றியோ கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை.

தங்கள் மதத்தைச் சார்ந்த பெண்கள், குழந்தைகள் ஆகியோரைப் பற்றிக் கூட அவர்கள் கவலைப்படவில்லை. அவர்கள் தங்கள் மதத்தைச் சார்ந்த பெண்களையே பட்டப் பகலில் கற்பழித்தார்கள். கன்னியாஸ்திரீகள், குழந்தைகள், வயது முதிர்ந்த பெண்கள், இவர்களைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை கற்பழித்தார்கள். இந்த மனிதப் பிண்டங்கள் தங்கள் காம, வெறியைக் கரை கடந்து, தங்கள் மதத்தைச் சார்ந்த பெண்களிடையேயே காட்டினார்கள். கிறிஸ்தவத்தைச் சார்ந்தவர்கள் என்று முத்திரை குத்திக்கொண்ட இந்தக் கொள்ளையர்கள் மன்னர்களையும், வசதி படைத்தவர்களையும் கொள்ளையடித்தார்கள். அவர்களது வீடுகளையும் அவர்களது நிலபலன்களையும் பறித்துக் கொண்டார்கள். அத்தோடு நிற்கவில்லை. கிறிஸ்தவ ஆலயங்களையும், அந்த ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களையும் ஆக்கிரமித்துத் தமதாக்கிக் கொண்டார்கள். ஆலயங்களின் புனிதங்களைக் கலைத்தார்கள். ஆலயங்களின் உள்ளேயிருந்த சிலைகளையும், சிலுவைகளையும், இன்னும் புனிதமாகக் கருதப்பட்ட பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றார்கள்."

தலைமைப் பாதிரி ஒருவர் இப்படிச் சாட்சி சொன்னார் :

கிறிஸ்தவர்களின் காட்டுமிராண்டித்தனங்களுக்கு என்றால், வரலாற்றை வரைந்து காட்டுவதில் கீர்த்திமிக்கவர் எனப் போற்றப்படும் வரலாற்றாசிரியர் சார்ல் டேல் (Charl Dale) என்பவர் இப்படி எழுதுகின்றார் :

"அதிகார போதை தலைக்கேறிய இந்தப் படை செயின்ட் சோபியா ஆலய வளாகத்திற்குள் நுழைந்தது. அதன் உள்ளேயிருந்த புனித வேதத்தை - பைபிளை - கிழித்தெறிந்தது. கிறிஸ்தவர்களுக்காகத் தங்களை அர்ப்பணித்து, அதில் தங்கள் இன்னுயிரைத் தந்த தியாகிகளின் வரைப்படங்களைக் காலில் போட்டு மிதித்தது. ஒழுக்கத்தால் அழுகிப்போன பெண்ணொருத்தி புனிதமான பாதிரிகள் இருக்க வேண்டிய ஆசனத்தில் தன்னை இருத்திக் கொண்டு இப்படிப் பேசினாள் ; ஆடினாள் ; பாடினாள். "மத அறிவைத் தரும் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன. வெள்ளி, தங்கம் இவற்றாலான சிலைகளெல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. இந்த வெள்ளியும், தங்கமும் இனி நாணயங்கள் செய்யப் பயன்படுத்தப்படும்" என ஆணவமாகப் பேசிக் கிடந்தாள்.

## இவற்றையெல்லாம் கண்டு மனம் பொறுக்காமல் நின்றிருந்த பாதிரிகள் இப்படிப் பகர்ந்தார்கள் :

"முஹம்மத் அவர்களைப் பின்பற்றியவர்கள், நிச்சயமாக இப்படியெல்லாம் நடந்து கொள்ளத் தெரியாதவர்கள். கிறிஸ்தவர்களின் கைகளால் கிறிஸ்தவப் பாதிரிகளும், வேத நூல்களும் பட்ட அவமானத்தை எங்கே சொல்லி அழுவது?"

ஆமாம்! முஸ்லிம்கள் நடத்தியதைப் போல கண்ணியத்தோடு ஏனைய மதத்தவரை நடத்துவார் எவருமில்லை.

## அந்த லூசியாவில் (ஸ்பெயின்) நடந்த வாக்குமீறல்

முஸ்லிம்கள் ஸ்பெயினை வெற்றிகொண்டு உள்ளே புகுந்தபோது அங்கிருந்த குடிமக்களை எப்படியெல்லாம் நடத்தினார்கள் என்பதை உலகம் நன்றாக அறியும். நாமும் அதைச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

இதே ஸ்பெயினில் அவர்கள் (கிறிஸ்தவர்கள்) தலையெடுத்த போது என்ன செய்தார்கள்? அவர்கள் தந்த (வாக்குறுதிகள்) அனைத்தையும் மீறினார்கள். முஸ்லிம்களோடு அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் 60 நிபந்தனைகள் இருந்தன. இதில் எதையுமே அவர்கள் நிறை வேற்றவில்லை. மாறாக அப்பாவி மக்களையும், குழந்தைகளையும் கொலை செய்தார்கள். அவர் களின் உடைமைகளையெல்லாம் தங்களதாக ஆக்கிக் கொண்டார்கள். கிரனடா வீழ்ந்தவுடன் ஐரோப்பியர்கள் எல்லாப் பள்ளிவாசல்களையும் கிறிஸ்தவ ஆலயங்களாக மாற்றிட வேண்டும் என அறிவித்தார்கள். (இது 1534-இல் நடந்தது) இப்படிப் பள்ளிவாசல்களை ஆலயங்களாக மாற்றிய நான்காண்டுகளுக்குள் முஸ்லிம்கள் பூண்டோடு ஒழிக்கப்பட்டு விட்டார்கள். இப் படித்தான் கிறிஸ்தவர்கள் தங்கள் வாக்குறுதி களைக் "காப்பாற்றி" வந்திருக்கின்றார்கள்.

## கிறிஸ்தவர்களின் வன்னெஞ்சமும், முஸ்லிம்களின் தயாள குணமும்

கிரேக்கப் பகுதியிலிருந்து துருக்கியை நோக்கி வந்தார்கள் கிறிஸ்தவர்கள். முஸ்லிம்களை வெற்றி கொள்வதுதான் இந்தப் பயணத்தின் நோக்கம். முடியவில்லை! தலைதெறிக்க திரும்பி ஓடினார்கள். ஓடும்போது சில இங்கிதங்களைக் கையாண்டிருக்கலாம். குறைந்தபட்சம் தங்களோடு வந்த அனைவரையும் கையோடு அழைத்துச் சென்றிருக்கலாம். பாவிகள் இதைச் செய்தார்களில்லை. தங்களோடு வந்த போர் வீரர்களில் நோய் வாய்ப்பட்டவர்களை விட்டுவிட்டு ஓடினார்கள். அத்தோடு நின்றார் களா? இல்லை. அந்த நோய் வாய்ப்பட்டவர் களின் கைகளிலிருந்தவற்றையும் பிடுங்கிக் கொண்டு ஓடினார்கள்.

நோயால் பீடிக்கப்பட்ட இந்தப் போர் வீரர்கள் தங்களோடு வந்த சக கிறிஸ்தவர்கள் இழைத்த கொடுமை கண்டு மனம் சோர்ந்து போனார்கள். வாழவும் வழியின்றி சாகவும்



வழியின்றி தவித்தார்கள்.

இவர்களின் நிலை வெற்றி பெற்ற துருக்கி முஸ்லிம்களுக்குத் தெரிய வந்தது. இவர்களுக்கு மருத்துவ உதவிகளைச் செய்தார்கள். பயணம் செய்யும் அளவுக்கு அவர்களின் உடல் தேறிய பின்னர் அவர்களை அவர்களின் தாய்நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

இவர்களின் வழிச் செலவுக்கு பிரான்ஸ் நாட்டு நாணயங்களை விலை தந்து வாங்கி கையில் கொடுத்து அனுப்பி வைத்தார்கள் துருக்கிய முஸ்லிம்கள்.

இந்தப் பெருந்தன்மையில் நனைந்த அவர்களில் பலர் இஸ்லாத்தில் இணைத்தார்கள். எஞ்சியோர் எல்லா ஏற்பாடுகளுடனும் இல்லம் திரும்பினார்கள்.

இந்தப் பெருந்தன்மையை அதில் பலன டைந்த போர் வீரர்கள் சொல்லிடக் கேட்டு லூயிஸ் VII என்ற கிறிஸ்தவ ஆட்சியாளரின் அமைச்சரவையிலிருந்த பாதிரி பிரீஸ்ட் ஓடோட்வாலி (Priest Ododvally) இப்படி எழுதி வைத்தார் வரலாற்றில்.

"இந்த கிறிஸ்தவர்களின் (நோய்வாய்ப்பட்ட கிறிஸ்தவப் போர் வீரர்களின்) சகோதர போர் வீரர்களே அவர்களைக் கைவிட்டு விட்டார்கள். எங்கும் காணாத துரோகத்தைச் செய்தார்கள். ஆனால் அந்நியர்கள் (முஸ்லிம்கள்) அவர்களுக் குப் பாதுகாப்பளித்தார்கள் ; உறைவிடம் கொடுத்தார்கள் ; பண்போடு நடத்தினார்கள். இதனால் திரும்பி வந்திருக்க வேண்டிய போர்

*வீரர்களில் மூவாயிரம் பேர் துருக்கியர்களோடு (முஸ்லிம்களோடு) சேர்ந்தார்கள். அவர்கள் (முஸ் லிம்கள்) உணவளித்தார்கள். இந்தக் கிறிஸ்தவப் போர் வீரர்கள் அவர்கள் யாரையும் எங்கள் மதத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் எனக் கட்டாயப் படுத்தவில்லை. தங்கள் பணியை கிறிஸ்தவ வீரர்களுக்கு உதவி செய்வது என்ற அளவில் நிறுத்திக் கொண்டார்கள். இவர்கள் அவர்கள் மதத்தை ஏற்றுக் கொண்டார்கள்."*

*இன்றைக்கு அவர்களின் நிலை*

*இன்றைக்கும் கிறிஸ்தவர்கள் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை.*

*அன்றைய நாள்களில் இவர்கள் இப்படி யெல்லாம் நடந்தார்கள் என்பதை விளக்கிச் சொன்னால், சில கிறிஸ்தவர்கள் இப்படிப் பதில் சொல்லுகின்றார்கள்.*

*"அன்றைய நாள்களில், கிறிஸ்தவர்கள் அந்த அளவுக்குப் பண்பட்டிருக்கவில்லை ; நாகரிகம் அடைந்திருக்கவில்லை."*

*இன்றென்ன வாழுகின்றது?*

**இன்றைய நாள்களில் இவர்கள் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் ஆகிய வற்றிலெல்லாம் முன்னணியில் நிற்ப தாகக் காட்டிக் கொள்கின்றார்கள். இரண்டு உலகப் போர்களின் போதும் இவர்கள் எதை வெளிக் காட்டினார்கள்? அன்றைக்கிருந்தது போலவே இன்றைக் கும் நாங்கள் இருக்கின்றோம் என்பதை தத்தானே வெளிக்காட்டினார்கள்.**

**இவர்களின் விஞ்ஞான வளர்ச்சியும் அறிவுத்துறை ஆய்வுகளும் கீழை நாடுகளையும், இல்லாத ஏழை நாடு களையும் ஏமாற்றவும், சுரண்டவும்தானே பயன்படுத்தப்படுகின்றன!**

**இவர்கள் இன்றும் இஸ்லாமிய
நாகரிகத்தின் அரிச்சுவடிக்குப்
பக்கத்தில் கூட வந்து பாடம்
படித்ததாகத் தெரியவில்லை!**






# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்..?

## கனிமொழி (எ) ஜாஸ்மின் பாத்திமா

தொடர் - 21

**முன்னுரை**

இஸ்லாத்தை எப்படியாவது அழித்தொழித்து விட வேண்டும் என்ற எதிரிகளின் 24X7 திட்டங்களில் ஒன்று நபி (ஸல்) அவர்கள் மீது பொய்யான பாலியல் குற்றச்சாட்டுகளை சுமத்தி அவற்றை விவாதிப்பது, பரப்புவது. சமீபத்தில் கூட தமிழகத்தில் கார்டூனிஸ்ட் வர்மா என்பவர் நபி (ஸல்) அவர்களைக் குறித்து இந்த கண்ணோட்டத்தில் ஒரு கார்ட்டூன் வரைந்து முஸ்லிம் சமூகத்தின் கோபத்தையும், வெறுப் பையும் பெற்றுக் கொண்டார். (வைகறை வெளிச்சம் சட்டக் குழுமம் வழியாக எடுத்த நடவடிக்கையினால் அவரை போக்சோ சட்டத்தில் கைது செய்துள்ளனர்.)

அதிலும் குறிப்பாக நபி (ஸல்) அவர்களுக்கும், அன்னை ஆயிஷா (ரழி) அவர்களுக்கும் நடந்த திருமணம், வரலாறு முழுவதும் தவறாக புரிந்துக் கொள்ளப்பட்டு இஸ்லாத்திற்கு எதிரான களங்களில் விவாதப் பொருளாக உலாவந்துக் கொண்டிருக்கின்றது. இப்படி இஸ்லாத்திற்கு எதிரான பொய்யான குற்றச்சாட்டுகள் பற்றியும், அவைகளை எப்படி புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும், அப்படி புரிந்துக் கொள்ளும் போது என்ன நிகழும் என்பதற்கும் ஒரு சிறந்த உதாரணம் தான் சகோதரி கனிமொழி (எ) ஜாஸ்மின் பாத்திமா அவர்களின் இஸ்லாமிய ஏற்பு நிகழ்வு. இன்ஷா அல்லாஹ் படித்து பயன்பெறுவோம்...

### கனிமொழி (எ) ஜாஸ்மின் பாத்திமா

என்னுடைய பெயர் ஜாஸ்மின் பாத்திமா. என்னுடைய பழைய பெயர் கனிமொழி. தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் தான் என்னுடைய சொந்த ஊர். நான் இந்து மதத்தி லிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவள்.

எனது குடும்பம் இந்து மதத்தை தீவிரமாக வும், கட்டுக்கோப்பாகவும் பின்பற்றக்கூடிய குடும்பம். எனது தந்தை ஆட்டோ ஓட்டுநர். இந்து மதத்தின் மூடநம்பிக்கைகள் தவிர்த்து சில கொள்கைகளை தீவிரமாக பின்பற்றக்கூடியவர். என் தந்தையைப் போலவே நானும் இந்து மதத்தின் கொள்கைகளையும், சிலைகளையும் தீவிரமாக வழிபட்டு வந்தேன்.

சிறு வயதிலிருந்தே எதெற்கெடுத்தாலும் கேள்வி கேட்கும் பழக்கம் எனக்குண்டு. நான் இந்து மதத்தின் கடவுட்கொள்கை பற்றின பல்வேறு கேள்விகளை தொடுக்கும் போதெல்லாம் யாரிடத்திலும் சரியான பதில் இருக்காது. மேலும் என்னை "அதிகப்பிரசங்கி" என முத்திரைக் குத்தி விடுவார்கள். அதனால் ஒருக் கட்டத்தில் அத்தகைய கேள்விகளை தொடுப்பதை நிறுத்திவிட்டேன். நானும் என் தந்தையைப் போன்ற மனநிலையை ஏற்படுத்திக் கொண்டு இந்து மதத்தின் கடவுள் கொள்கை களை பின்பற்ற ஆரம்பித்து விட்டேன்.

இந்த நிலையில் என்னுடைய கல்லூரிப் படிப்பு முடிந்தது. அதன் பின் மேற்படிப்புக் காக சென்னையில் உள்ள Lady Willingdon அரசுக் கல்லூரியில் சேர்ந்தேன். என் வாழ்நாளிலேயே முதல் முறையாக சொந்த ஊரான புதுக்கோட் டையை விட்டு வெளி உலகிற்கு வருகிறேன். நான் இதுவரை பார்க்காத, சந்திக்காத பல பழக்க வழக்கங்கள், கலாச்சாரங்களை சென்னைவாசி களிடம் பார்க்க நேர்ந்தது. அவைகளை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பேச்சு வழக்கு முதல் உணவு, உடை என சென்னையின் எல்லா மும் என்னை வெறுக்கச் செய்தது. கல்லூரி விடுதி அறையினுள் எப்போதும் அழுதுக் கொண்டிருந்த அந்த நேரத்தில் எனக்கு ஒரு முஸ்லிம் தோழி அறிமுகமானாள்.

அந்தக் கல்லூரியில் அவள் தனித்துக் காணப் பட்டாள். எந்த வேலைப் பளுவாக இருந்தாலும் சரியாக நேரத்திற்கு தொழுதுவிடுவாள். அந்த தொழுகைக்காக எதையும் இழக்க அவள் அஞ் சியதில்லை. தயங்கியதில்லை. அவளுடனான என்னுடைய நட்பு அழகாக இருந்தது. நாங்கள் இருவரும் நிறைய பேசுவோம். சமூகத்தின் அவலங்கள், சாதிப் பிரச்சனைகள், அரசியல் நிகழ்வுகள், மதம் என நிறைய விவாதிப்போம்.

இந்த நிலையில் அவள் சில சிந்தனைக் கொண்டவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்லும் அழைப்பு பெரியாரிய பணியை செய்துக் கொண்டிருந்தாள். அவளுடன் நானும் செல்ல வேண்டியிருந்தது. அதற்காக பெரியாரின் சில நூல்கள், காணொளிகள் போன்றவற்றை காணவேண்டிய சூழல் வந்தது.

அதன் பின் இந்து மதத்தின் கடவுள் கொள்கைகள் பற்றியும், இஸ்லாத்தைப் பற்றியும் கேள்விக்கணைகளை தொடுத்தேன். என்னுடைய எல்லாக் கேள்விகளுக்கும் அவளிடம் பதில்கள் கிடைத்தது. சில விஷயங்களை அறிவியல் பூர்வமாக அணுகும் எனக்கு அறிவியல் ரீதியான ஆதாரங்களுடனும் விடைகள் கிடைத்தது. ஆனால் அவள் என்னிடம் இந்து மதம் குறித்த கேட்ட கேள்விகளுக்கு என்னிடம் எந்த பதிலும் இல்லை.

ஒரு கட்டத்தில் இந்து மதத்தின் கடவுள் கொள்கை அனைத்தும் வெறுப்பிற்கும், மனித வாழ்வியலுக்கும் எதிரானது என்ற சிந்தனை உண்டானது. அதேப்போல் பெரியாரைப் பற்றின பெரியார் சிந்தனைவாதிகளின் புரிதலில்லாத பதில்களும் திருப்தியளிக்கவில்லை. இஸ்லாம்தான் சரியான மனித குலத்திற்கான வாழ்வியல் கோட்பாடு என்பது அப்போதே எனக்கு புரியத் தொடங்கியது. ஆனால் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு பின்பற்றவில்லை.

இப்படியே ஒரு வருடம் கடந்தது. இந்த நிலையில் எனது வீட்டில் நிலைமை சரியில்லை என்ற தகவல் வந்தது. எனது தந்தை மது அருந்தும் பழக்கம் உடையவர். நான் ஊரில் அவருடன் இருக்கும் போது அவர் குடிக்காமல் பார்த்துக் கொள்வேன். மீறி மது அருந்தினால் கடுமையாக கண்டிப்பேன். என் பேச்சைக் கேட்டு ஒழுங்காக இருப்பார். ஆனால் அப்போது நான் சென்னையில் இருந்ததால் அவர் கட்டுப்பாடில்லாமல் அதிகமாக குடிக்க ஆரம்பித்து விட்டார்.

படிப்பில் துடிப்பாக இருக்கும் எனக்கு என் தந்தையின் இந்த குடிப்பழக்கம் மிகுந்த மனவேதனையைத் தந்தது. என்னால் எதிலும் சரியாக கவனம் செலுத்த முடியவில்லை. என்னுடைய இந்த வேதனைகளை என் ஆருயிர்த் தோழி ஆயிஷாவிடம் சொல்லி அழுதேன். அவள் எனக்காக பிரார்த்தித்தாள். மேலும் அன்றைய இரவு அவளுடன் என்னையும் தொழுகைக்கு அழைத்தாள். நான் மறுப்பு தெரிவிக்கவில்லை. அவளுடன் நின்று அவளைப் போலவே நானும் படைத்த ஏக இறைவனை முதன் முதலில் தொழுதேன்.

அந்த முதல் தொழுகையை என்னால் மறக்கவே முடியாது. என்னால் தலையை ஸஜ்தாவிலிருந்து எடுக்கவே முடியவில்லை. கண்ணீர் தாரை தாரையாக கொட்டியது. என் மனக் கவலைகள், வேதனைகள் என அனைத்தையும் எனக்கு நெருக்கமான ஏதோ ஒரு சர்வ வல்லமைப் படைத்த சக்தியுடன் முறையிட்டு விட்டதாக ஓர் உணர்வு.

இதற்கு முன் பல முறை நான் இந்து மதக் கடவுள்களின் கோவில்களுக்கு சென்றுள்ளேன். வீட்டில் சாமிகளை வணங்கியுள்ளேன். ஆனால் அப்போதெல்லாம் எனக்கு இப்படியொரு உணர்வு ஏற்பட்டதேயில்லை.

தொடர்ந்து அவளுடன் சேர்ந்து எல்லாத் தொழுகைகளையும் தொழ ஆரம்பித்தேன். என்னதான் கவலைகள், வேதனைகள் இருந்தாலும் தொழுகையில் என்னைப் படைத்த இறைவனின் முன்னிலையில் நிற்கும் போது அவை எல்லாம் பறந்து போய்விடும். இவைகளை நான் உளப்பூர்வமாக உணர்ந்தேன்.

தொழுகையைத்தவிர இஸ்லாம் குறித்து முழுமையாக தெரிந்துக் கொள்ள விரும்பினேன். என் தோழி ஆயிஷாவிடம் என் விருப்பம் பற்றி தெரிவித்தேன். அவள் எனக்கு இஸ்லாம் பற்றி நிறையச் சொல்லிக் கொடுத்தாள். நிறைய புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தாள்.

ஆயிஷா (ரழி) திருமணம்

இஸ்லாம் குறித்து ஆழமாக படிக்க ஆரம்பித்தேன். நிறைய படித்து தெரிந்துக் கொண்டேன். இந்த நிலையில் இறைநம்பிக்கையாளர்களின் அன்னை ஆயிஷா(ரழி) அவர்களைப் பற்றி படிக்க நேர்ந்தது. அப்போது அன்னை ஆயிஷா(ரழி) அவர்களுக்கு நபி(ஸல்) அவர்களுடன் ஆறு வயதில் திருமணம் நடந்ததாக படித்தேன். ஆரம்பத்தில் இதை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. என்னுடைய தோழி ஆயிஷாவிடம் அதிகமாக இதுகுறித்து விவாதிப்பேன். "என்னதான் இறைத்தூதராக இருந்தாலும் அதெப்படி ஒரு ஆறு வயது பெண்ணை திருமணம் செய்துக் கொள்ளலாம்?" என்று எனக்கும் அவளுக்கு வாக்குவாதம் நடக்கும். ஆனால் எனக்கு திருப்தியான பதில் கிடைக்காமலேயே இருந்தது.

அதன்பின் ஒரு நாள் நானே சிந்திக்க ஆரம்பித்தேன். மனித குல வரலாற்றில் இது போன்று ஏராளமான திருமணங்கள் நடந்துள் ளது. அவைகளெல்லாம் விமர்சனங்களுக்கோ, விவாதங்களுக்கோ உட்படுத்தப்படுவதில்லை. ஆனால் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் திருமணம் மட்டும் வரலாறு தோறும் விவாதிக் கப்படுவது ஏன்? அதற்கு பின்னால் உள்ள உலக அரசியலும், சூழ்ச்சிகளும் எனக்கு புரிய ஆரம்பித்தது.

உண்மையில் இஸ்லாத்தின் எதிரிகளால் உலகம் முழுவதும் பரப்பப்பட்ட விமர்சனங் களில் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் திருமண நிகழ்வும் ஒன்று. அதை விமர்சிப்பவர் களுக்கும், அதைப்பற்றி விவாதிப்பவர்களுக்கும், "நாம் ஏன் இப்போது இந்த ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி விமர்சனத்தை முன் வைக்கிறோம்" என்ற புரிதல்கள் கூட இல்லாமல் தான் இருக்கும்.

உண்மையில் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் வாழ்வில் பேசப்பட வேண்டிய சம்பவங்கள் ஏராளமாக உள்ளன. அன்றைய அரேபியா நிலப்பரப்பில் உத்தமத் தூதரின் நேசத்திற்குரிய மனைவியான அன்னை கதீஜா (ரழி) அவர்களின் மறைவிற்கு பின்னால், அண்ண லாரின் மிகவும் நேசத்திற்குரிய மனைவியாக இருந்தவர் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள். கல்வியில் சிறந்து விளங்கிய அவர் பல நேரங் களில் நபி(ஸல்) அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

அண்ணலாரின் மறைவிற்கு பிறகும் தொடர்ந்த பொன்னான அந்த நான்கு கலீபாக்களின் ஆட்சியிலும் ஆயிஷா (ரழி) அவர்களின் ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள் மேலோங்கியிருந்தது. மேலும் இஸ்லாமிய வரலாற்றை அடுத்த தலைமுறைகளுக்கு ஒழுங்குற கொண்டு சேர்க்கும் பணியான ஹதீஸ்களை தொகுக்கும் பணியிலும் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் பங்கு அளப்பரியது. இஸ்லாத்தின் அடிப்படை ஆதாரங்களில் ஒன்றான ஹதீஸ் துறையில், அதிக ஹதீஸ்களை அறிவித்த ஸகாபாக்களில் ஆயிஷா(ரழி) அவர்கள் இரண்டாவது இடத்தில்

இருக்கிறார்கள்.

இப்படி பரந்து விரிந்த இஸ்லாமிய சமூகத்தின் மிகப்பெரிய பெண் ஆளுமையாக திகழும் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களை, மனிதகுல பெண்களுக்கு முன்மாதிரியாக காண்பிப்பதே அறிவுள்ள எந்த மனிதனுக்கும் அழகு. அதை விடுத்து அவர்களின் வாழ்வின் நடந்த ஒரேயொரு சம்பவத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அதை விமர்சனத்துக்குள்ளாக்குவது என்பது பிற்போக்கு சிந்தனையாகும். இந்த வேலையை இப்போது இஸ்லாத்தின் எதிரி களோடு சேர்ந்து சில பெரியாரியவாதிகளும் செய்து வருகிறார்கள் என்பது தான் மிகவும் வேதனை.

## பெரியார் - இஸ்லாம் - பகுத்தறிவு

தென்னிந்தியாவில் ஒரு இந்துவாக பிறந்து பின்னால் இந்து மதத்தின் கடவுள் கொள்கைகள் பற்றி கேள்வி எழுப்பும் யார் ஒருவரும் பெரியாரை படிக்காமல் கடந்து சென்றுவிட முடியாது. அதனடிப்படையில் இஸ்லாத்தை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருந்த நான், பெரியார் இஸ்லாம் குறித்து என்ன கூறியுள்ளார் என்பதை படிக்க ஆரம்பித்தேன். இதற்காக நானும் எனது தோழி ஆயிஷாவும் நிறைய சுற்றியுள்ளோம். நிறைய பெரியாரிய தோழர்களை சந்தித்துள்ளோம். அவர்களிடத்தி லெல்லாம் பேசும் போது நாங்கள் இஸ்லாம் தான் சரி என்போம். அவர்கள், இல்லை பெரியாரிஸம் தான் சரி" என்பார்கள். எந்த முடிவும் இல்லாமல் வந்துவிடுவோம்.

இந்த நிலையில் நான் சில யதார்த்தங்களை சிந்திக்க ஆரம்பித்தேன்.

பெரியார், "கடவுள் இல்லை" என்ற பிரச்சாரத்தை மேற்கொண்ட களம் எது? இந்தியாவின் தென்னிந்தியப் பகுதி.

இந்த தென்னிந்தியப் பகுதியின் பிராதான கடவுள் கொள்கையின் மதமும், அதன் கோட்பாடுகளும் எது? இந்து மதமும், அதன் சாதிய வரணாசிரமக் கொள்கைகளும்.

அப்படியென்றால் பெரியாரின் "கடவுள் இல்லை" என்ற பிரச்சாரத்தின் எதிர்களம் இந்து மதமும், அதன் சாதிய கட்டமைப்புகளும் தானே தவிர, இஸ்லாமோ அதன் கடவுள் கொள்கையோ அல்ல என்பது இங்கே தெளிவு. பெரியாரின் போராட்டக் கள வரலாறுகளை விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு படிக்கும் எந்த ஒரு அறிவுள்ள மனிதனுக்கும் இது புரியும்.

இந்து மதத்தின் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக அவர் பயன்படுத்திய பிரச்சார ஆயுதங்களில் ஒன்றுதான் கடவுள் மறுப்பே தவிர, ஒட்டுமொத்த மனித குலத்தையும் கடவுள் மறுப்பை நோக்கி நகர்த்த வேண்டும் என்பது அவரது கொள்கையுமல்ல. பிரச்சாரமுமல்ல. பெரியார் ஒரு மிகச் சிறந்த பகுத்தறிவுவாதி. அதனால் தான் அவர் இஸ்லாம் குறித்தும் அதன் கடவுள் கொள்கை குறித்தும் தன் வாழ்நாள் முழுவதும் மக்களிடையே பிரச்சாரம் செய்திருக் கின்றார். தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக் கான ஒரே தீர்வு இஸ்லாம் மட்டுமே என்று பிரகடனப்படுத்தி மதமாற்றங்களை ஆதரித்து முன்னின்று நடத்தினாரே தவிர, என் பின்னால் நில்லுங்கள் என்னைப் பின்பற்றுங்கள் என்று கூறவில்லை. ஆகையால் பெரியாரிஸம் என்பது பெரியாரால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல என்பது எனக்கு விலங்கியது.

இவையனைத்திற்கும் மேலாக ஒரு மனிதன் தன்னுடைய வாழ்வியல் கோட்பாடாக ஒன்றை எடுத்துக் கொள்ள நினைக்கிறான் என்றால் அதற்கு அந்த மனிதனின் உள்ளங்களை கட்டுப் படுத்தும் சக்தி இருக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. அந்த சக்தி பெரியாரிஸத்திற்கு இல்லை. கட்டுப்பாடுகளற்ற சுதந்திரமான வாழ் வென்பது மனிதனின் குறையறிவு தானே தவிர, பகுத்தறிவல்ல. இன்றைய பெரியாரிஸ்டுகள் போதிக்கும் பெரியாரிஸம் இப்படித்தான் இருக்கின்றது.

ஆனால் இஸ்லாத்திலோ மனிதனின் உள்ளங்களை கட்டுப்படுத்தும் சக்தி ஆழமாக உள்ளது. நம்மைப் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான். அவன் எல்லாவற்றையும் கண்காணிக்கின்றான் என்ற சிந்தனை மனிதனை நேர்வழிப்படுத்தும். நீதி செலுத்த செய்யும். பிறருக்கு அநீதி இழைக்கச் செய்வதிலிருந்து தடுக்கும். ஆக இஸ்லாம் தான் மனிதன் பின்பற்றி வாழ்வதற்கு ஏற்ற மார்க்கம் என்பது எனக்கு விலங்கியது.



## ஹிஜாபுக்குள் நான்

இஸ்லாத்தில் ஹிஜாப் என்பது பெண்களுக்கான பாதுகாப்பு என்பதையும் தாண்டி அது பெண்களின் உரிமைகளில் ஒன்று என்றே நான் பார்க்கிறேன். எனது தோழி ஆயிஷா இஸ்லாத்தின் அழைப்புப் பணிக்காக நிறைய நபர்களை சந்திக்கச் செல்வாள். அப்போ தெல்லாம் நானும் அவளுடன் செல்வேன். அவள் முழுமையாக ஹிஜாப் அணிந்து வருவாள். நான் சாதாரணமான உடையணிந்து செல்வேன். ஆனால் சில இடங்களில் எனக்கு கூச்சமாகவும் வெக்கமாகவும் இருக்கும். அடிக்கடி என் ஆடையை சரி செய்ய வேண்டியிருக்கும். ஒரு நெருடலான மனநிலையை அது ஏற்படுத்தும்.

ஆனால் முழுமையாக ஹிஜாப் அணிந்திருக் கும் என் தோழிக்கு அப்படி எதுவும் இருக்காது. அவள் சுதந்திரமாக இருப்பாள். அந்த ஒரு சுதந்திரமான பாதுகாப்புணர்வை அவள் அணிந் திருக்கும் ஹிஜாப் அவளுக்கு கொடுத்திருப்பதை நான் கண்கூடாக பார்த்திருக்கிறேன். இதை உணர்ந்த நான் பலமுறை ஹிஜாப் அணிய ஆவல் கொண்டுள்ளேன். ஆனால் என்னுடைய சூழ் நிலைக் காரணமாக என்னால் அணியமுடியாமல் போய்விடும். அதன் பின் எனது திருமணத்திற்கு பின் தான் நான் முதன்முதலில் ஹிஜாப் அணிந்தேன். என் கணவர் தான் முதன் முதலில் எனக்கு ஹிஜாப் வாங்கிக் கொடுத்தார்.

வெளியிலிருந்து ஹிஜாப் பற்றி விமர்சிப்பவர் களுக்கு என்ன தெரியும்? பெண்ணடிமைத்தனம், கூண்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ள பெண்கள், லெட்டர் பாக்ஸ் பெண்கள் என எப்படி வேண்டுமானாலும் அவர்கள் விமர்சிக் கலாம். ஆனால் எங்களைப் பொருத்தவரை இந்த விமர்சனங்களெல்லாம் ஒன்றுமேயில்லை. ஹிஜாப் வெறும் ஆடையல்ல. அது பெண்களுக் கான ஓர் அற்புதமான உணர்வு. அதை அனுபவித் தவர்களால் மட்டுமே அதை உணர முடியும். எங்கள் உணர்வுகளோடு கலந்த அந்த ஹிஜாப்-ஐ யாராலும் அழித்து விடமுடியாது.

## கஷ்மீர் முஸ்லிம்கள் - என் கணவர்

நான் இஸ்லாத்தைப் பற்றி படித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் தான் புல்வாமா தாக்குதல் நடந்தது. எல்லோரும் பாகிஸ்தான் தீவிரவாதிகள், முஸ்லிம் தீவிரவாதிகள் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது நானும் எனது தோழியும் கஷ்மீர் பற்றி தேட ஆரம்பித் தோம். கஷ்மீர் முஸ்லிம்கள் மற்றும் அவர்கள் படும் துன்பங்கள் குறித்து நிறைய தகவல்கள் படித்தோம். அந்தத் தகவல்களையெல்லாம் எங்களுக்கு தெரிந்தவர்களிடத்தில் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். என் தந்தையிடம் கூட இந்த கஷ்மீர் சம்பவம் குறித்து பல மணி நேரங்கள் விவாதித்துள்ளேன்.

இந்த நிலையில் கஷ்மீர் முஸ்லிம்கள் குறித்து பேசும் தமிழ் நூல் ஒன்றைப் பற்றிக் கேள்வி பட்டேன். அந்த நூலை வாசிக்க ஆவல் கொண்டு தேடினேன். ஆனால் கிடைக்கவில்லை. பின்னால் எனக்கு திருமணமாகி என் கணவரிடத்தில் இந்த விடயத்தை கூறும் போது எனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

அந்த நூலின் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்களின் மாணவர் தான் என் கணவர் என்ற உண்மை எனக்கு தெரிந்தது. கஷ்மீர் பாதி விதவைகள் என்ற நூல் தான் அது. எல்லா நூலும் விற்றுத் தீர்ந்து விட்டன. மறுப்பதிப்புக்காக காத்திருக்கிறேன். அந்த நூலை வாசிக்க வேண்டும் என்ற ஆவலுடன்!

## தியாகத்தால் முளைத்த இஸ்லாம்

எல்லாம் வல்ல அல்லாஹ் தனது திருமறையில் இப்படிக் கூறுகின்றான்;

*"உங்களுக்கு முன்னே சென்று போனவர் களுக்கு ஏற்பட்ட சோதனைகள் உங்களுக்கு வராமலேயே சுவர்க்கத்தை அடைந்து விடலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? அவர்களை (வறுமை, பிணி போன்ற) கஷ்டங்களும் துன்பங்களும் பீடித்தன; "அல்லாஹ்வின் உதவி எப்பொழுது வரும்" என்று தூதரும் அவரோடு ஈமான் கொண்டவர்களும் கூறும் அளவுக்கு அவர்கள் அலைகழிக்கப்பட்டார்கள்; "நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி சமீபத்திலேயே இருக்கிறது" (என்று நாம் ஆறுதல் கூறினோம்.) (2:214)*

சோதனைகளை எதிர்கொள்ளச் செய்வதின் மூலம் யார் ஒருவரின் ஈமானையும் அல்லாஹ் சோதிக்கத் தவறியதில்லை. அகிலத்தின் அருட் கொடையாம் உத்தமத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களே பல சோதனைகளையும், இன்னல் களையும் தாண்டித்தான் அல்லாஹ்வின் இந்த மார்க்கத்தை மேலோங்கச் செய்தார்கள். அதனடிப்படையில் எனக்கும் பல சோதனைகள் வந்தன.

இஸ்லாம் என்று சொன்னாலே என் குடும்பம் என்னை வெட்டிப் புதைத்து விடுவார்கள். அப்படியொரு நிலை. அதனால் பல நாட்கள் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட விடயத்தை என் குடும்பத்திற்கு தெரியாமலேயே வைத்திருந்தேன். ஆனால் ஒருக்கட்டத்தில் எனக்கு புரிந்து விட்டது. இதற்கு மேல் இங்கே நம்மால் இஸ்லாத்தை பின்பற்றி வாழமுடியாது.

மேலும் விஷயம் தெரிந்தால் நிச்சயமாக சொந்தத்தில் யாரையாவது பிடித்து திருமணம் செய்து வைத்து விடுவார்கள். துணிந்து முடிவெடுத்தேன். அல்லாஹ்விற்காக வீட்டை விட்டு வெளியேறினேன். அல்லாஹ் எனக்கு துணை நின்றான். நான் விரும்பியபடியே எனக்கு சிறந்த வாழ்க்கைத் துணையை அளித்து என்னைப் பாதுகாத்தான்.

நான் வீட்டை விட்டு வெளியேறி வந்து விட்டதால், என் குடும்பம், சாதிகாரர்கள் எல்லாம் மிகுந்த கோவத்துடன் இருக்கிறார்கள். என் தந்தை என்னை வெறுத்துவிட்டார். என் தந்தை மிகவும் நல்லவர். அமைதியானவர். ஆனால் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தைப் பற்றி சொல்லும் போது, "லவ் ஜிஹாத்" போன்ற வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தி யுள்ளார். நிச்சயமாக இதெல்லாம் என் தந்தைக்கு தெரியாது. யாரோ கயவர்கள் என் தந்தையின் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி பின்னால் இருந்து சொல்லிக்கொடுக்கிறார்கள். கூடிய விரைவில் என் தந்தை இந்த சூழ்ச்சிகளை புரிந்துக் கொள்வார் என்று பிரார்த்திக்கிறேன்.

நான் மீண்டும் கூறுகின்றேன். மனிதர்களின் உள்ளங்களை கட்டுப்படுத்தும் சக்தி எந்த கொள்கைக்கு இருக்கிறதோ. அந்தக் கொள்கை தான் மனித வாழ்வியலுக்கு உகந்தது. இந்த அளவுகோலின் அடிப்படையில் இஸ்லாம் மட்டுமே மனிதனின் உள்ளத்தை முழுமையாக கட்டுப்படுத்தக் கூடிய சக்தியை பெற்றிருக்கிறது.

"அல்லாஹ் இருக்கின்றான். அவன் எல்லாவற்றையும் கண்காணிக்கின்றான்." என்ற உணர்வே மனிதனின் நேரான வாழ்வியலுக்கு அடிப்படையாகும். இந்த அடிப்படை உணர்வு தான், நேர்மையான ஆட்சியாளர்களையும், குடிமக்களையும் உருவாக்கும். அதை நோக்கி நாம் நகராதவரை நமக்கு அமையாதியான வாழ்வென்பது கேள்விக்குறியே! அஸ்ஸலாம்.

**பேட்டி: கே.எம்.கனிமொழி (எ)**
**ஜாஸ்மின் பாத்திமா** B.Sc.B.ed.,

**- த. அஷ்ரஃப் இஸ்லாம்**



# கடந்த 30 ஆண்டுகளாக நாங்கள் இரத்தத்தை தவிர வேறு எதனையும் பார்த்ததில்லை

காஷ்மீரின் முன்னாள் முதல்வரின் மகள் இல்திஜா முஃப்தி 16 நாட்களுக்கு பிறகு வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார். வெளியில் வந்த பிறகு Huffpost ஊடகத்திற்கு அவர் அளித்த பேட்டி. தற்போது காஷ்மீரை விட்டு அவர் வெளியேறி விட்டார். தான் இருக்கும் பகுதியை பற்றி வெளியிட வேண்டாம் என்றும் பத்திரிக்கையிடம் கேட்டுக் கொண்டார்.

*20 நாட்களாக காஷ்மீரில் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இங்கிருந்து செய்திகள் எங்கு செல்கின்றன?..*

நாங்கள் எங்கு செல்கிறோம், என்ன செய்கிறொம் என்பது அனைத்தும் இந்திய அரசை சார்ந்தே இருக்கிறது. அவர்கள் எல்லாவற்றையும் நுணுக்கமாக செய்கிறார்கள். ஐக்கிய நாடு சபை இந்தியா நிகழ்த்தி வரும் தகவல் தொடர்பு தடை, ஊரடங்கு உத்தரவு எல்லாவற்றையும் நிறுத்த சொல்லியிருக்கிறது என்று நம்புகிறேன். இது மனிததன்மைக்கு எதிரானது. கொடுமையானது. நான் சத்தமிடுவதாக உங்களுக்கு தெரியலாம். காரணம், நாம் மிக கோபமாக இருக்கிறேன்.


*சட்டரீதியிலானதும், அரசியலமைப்பு என்றால் கூட பிரிவு 370ஐ மறந்துவிடுங்கள். அதைப்பற்றியான விவாதம் பல ஆண்டுகளாகவே தொடர்கிறது. இதனை எதிர்கொள்ள உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் எதற்காக இவ்வளவு நாட்கள் ஊரடங்கு உத்தரவு?..*

காஷ்மீர் தற்போது இயல்பு நிலையில் இல்லை, எல்லாமே மாறிப்போயிருக்கிறது. நான் உங்களிடம் பேசிக்கொண்டிருக்கும் போது எங்கிருந்து தொடங்குவது என்பதே கடினம். அவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறோம்.

என்னுடைய தலைமுறையை சார்நத காஷ்மீரிகளிடம் கேளுங்கள். கடந்த 30 ஆண்டுகளாக நாங்கள் இரத்தத்தை தவிர வேறு எதனையும் பார்த்ததில்லை. எங்கள் வாழ்க்கை உடைந்து விட்டது. ஆனாலும் காஷ்மீரிகள் தங்கள் வாழ்க்கையை உருவாக்க போராடிக்கொண்டு தான் இருக்கிறார்கள். இங்கே அற்புதமான உணவகங்கள், அழகான காபி கடைகள், புத்தக நிலையங்கள், நூலகங்கள் என ஒவ்வொரு தொழில்முனைவோரின் நிலை இனி என்னவாக போகிறது? என் வாழ்க்கையில் ஒருபோதும் இவ்வளவு அடக்குமுறையை உணர்ந்ததில்லை. நாங்கள் எங்கள் நிலங்களிலேயே வெளியாட்களை போல் உணர்கிறோம்.

காஷ்மீர் எங்களுக்கு சொந்தமில்லாதது

என்பதை போல நாங்கள் உணர்கிறோம். நான் நேற்று பள்ளத்தாக்கிலிருந்து வந்தேன் . இரண்டு நிமிடத்திற்கு ஒருமுறை நிறுத்தி சோதனை செய்யப்படுகிறது. இது கொடுமையானது. மனிதாபிமானம் அற்றது. கூட்டு தண்டனையை போல் இருக்கிறது இச்செயல்.




இது தொடர்ந்தால் என்ன நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?.

மக்களை நீங்கள் பிரசர் குக்கரின் நிலையில் வைத்திருக்கிறீர்கள். மூன்று வாரங்களாக அவர்களை பூட்டி வைத்திருக்கிறீர்கள். அவர்கள் இதனை மறந்து விடுவார்கள் என நினைக்கிறீர் களா?. கண்டிப்பாக இல்லை. இந்தியாவின் மற்ற பகுதிகளில் எதிர்ப்பு தெரிவிக்கும் போது நீங்கள் இப்படித்தான் நடந்து கொண்டீர்களா?..

நாகலாந்து மக்கள் தங்கள் சொந்த கொடி யுடனும், தங்களது தேசிய கீதத்துடனுமே இந்த சுதந்திர நாளை கொண்டாடினார்கள். ஆனால், நீங்கள் ஏன் காஷ்மீரை மட்டும் தனியாக பறித்தீர்கள்?.. இந்த நாட்டின் பன்முகத்தன்மை தான் இந்நாட்டின் பெரும் பலம். அதையே கெடுக்கிறீர்கள். கூட்டாட்சி முறையை ஒழிக்கிறீர்கள். நாளை உங்கள் மாநிலத்தையும் இதே மிருக பெரும்பான்மை பலம் கொண்டு மூன்றாக, நான்காகவும் பிரிக்கலாம்.

ஆகஸ்ட் 15க்கு பிறகு இதற்கெல்லாம் முடிவு வரும் என மக்கள் நினைத்தார்கள். ஆனால் இது தற்போதைக்கு முடிவதாக தெரியவில்லை, மக்களின் எதிர்ப்பு குறையும் வரை இதே நிலையில் வைத்திருக்க அரசு விரும்புகிறது என்று நினைக்கிறீர்களா?

அவர்கள் அனுமானம் பலிக்காது. முதலில் பிரிவு 370ஐ பறித்தீர்கள்.இது எங்களுக்கு பெருநாள் பரிசல்ல. எங்களுக்கு அரசியலமைப்பு கொடுத்த உத்தரவாதத்தை பறித்திருக்கீறீர்கள். காஷ்மீர் பிரச்சனையை பாருங்கள். மக்கள் சோர்வாக இருப்பதாக கருதுகிறீர்களா? அவர்கள் களைந்து போகப்போவதில்லை. காஷ்மீரிகள் இப்போது மிகவும் புத்திசாலிகள், அவர்கள் நங்கு படித்தவர்கள், அவர்கள் தங்கள் போராட்டத்தை அமைதியான முறையில் தொடர்வார்கள்.

நீங்கள் காஷ்மீர் மக்களை சிறையில் வைக்கலாம். ஆனால் அவர்களின் உணர்வுகளை சிறை வைக்க முடியாது.

பல அரசியல் தலைவர்கள், ஏன் மிகிஷில் முதலிடம் பிடித்த ஷா பைசல் உட்பட பலர் வீட்டுக்காவலில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி?....

ஷா பைசல், அவர் காஷ்மிரில் உள்ளவர் களுக்கு பெரிய முன்மாதிரி. சிவில் சர்விஸ் தேர்வில் முதலிடத்தில் வந்தவர். சிறந்த நிர்வாகி. ஆனால், நீங்கள் அவரை அவமானப்படுத்தி யுள்ளர்கள். அவரையும் சிறை வைத்திருக் கிறீர்கள். இது கொடுமையானது.

நீங்கள் வீட்டுக்காவலில் தடுத்து வைக்கப் பட்டீர்கள் வீட்டுக்காவலில் இருப்பது என்பது என்றால் எப்படி?..

இது சிறையில் இருப்பதை போன்றது. என்னை எதற்காகவும் அனுமதிக்கவில்லை. யாரையும் சந்திக்க முடியவில்லை. வீட்டிற்கு வந்தவர்கள் வாசலிலேயே தடுத்து நிறுத்தி அனுப்பபட்டனர். என் வீட்டிற்கு வெளியே பூட்டு போடப்பட்டது. வெளியில் நின்றிருக்கும் அதிகாரிகளிடம் இதையெல்லாம் ஏன் செய்கிறீர்கள் என கேட்டேன். அதற்கு இதெல்லாம் உயரதிகாரிகளின் உத்தரவு என்றார்கள்.

டெல்லியில் இருக்கும் இருவரிடம் இருந்து தான் உத்தரவு வருகிறது என்றார்கள். வீட்டின் பணியாட்களையும் ஒவ்வொருவராக நிறுத்தினார்கள். அவர்கள் மூலமாக செய்தியை வெளியே சொல்வேன் என்று நினைத்தார்கள். (பின்னர் தன் தாயின் கைது நடவடிக்கையை பற்றி கூறினார்)

**(இல்திஜா முஃப்தி அளித்த பேட்டியின் சுருக்கம்)**




# யூடியூபில் 30 லட்சம் பார்வையாளர்களை கவர்ந்த விவாதம் (பெட்டிச் செய்தியாக)

நிகழ்கால வரலாற்றில் இந்த விவாதத்திற்கு மிக ஸ்பெஷலான இடமுண்டு. "இஸ்லாமா? நாத்திகமா? எது அறிவுக்கு ஒத்துவருகிறது" என்ற தலைப்பில் ஏழு வருடங்களுக்கு முன்பு நடந்த இந்த விவாதம், யூடியூப்-பில் 30 இலட்சத்திற்கும் அதிகமான பார்வைகளை தற்போது வரை பெற்றிருக்கிறது. ஏன் இந்த விவாதம் தனித்துவ மானது என்ற கேள்விக்கான பதில், இதில் நாத்தி கர்கள் சார்பில் கலந்துக்கொண்ட நபர் தான்.

பேராசிரியர் லாரன்ஸ் க்ராஸ், மேற்கத்திய நாத்திகர்களால் ரிச்சர்ட் டாகின்ஸ்க்கு அடுத்த இடத்தில் வைத்து கொண்டாடப்பட்ட இயற்பியல் விஞ்ஞானியாவார். இவரின் புகழுக்கு சிறப்பான முறையில் முஸ்லிம்கள் முடிவுரை எழுதிய விவாதம் என்பதால் இது முக்கியத்துவம் பெறுகிறது.

முஸ்லிம்கள் சார்பில் சகோதரர் ஹம்சா ஜார்சிஸ் கலந்துக்கொண்டார். முஸ்லிம்கள் அறிவியலுக்கு என்றும் எதிரியாக இருந்ததில்லை என்பதற்கு ஆயிரம் ஆண்டுகள் நீடித்த இஸ்லாமிய அறிவியல் பொற்காலமே சாட்சி என்பதை சுட்டிக்காட்டிய ஹம்சா, அதே நேரம் கண்மூடித்தனமாக எல்லாவற்றையும் நம்பவும் முடியாது என்றார்.

அறிவியலால் எல்லாவற்றிக்கும் விடை சொல்ல முடியாது, ஒழுக்கத்தின் எல்லைகளை எப்படி அறிவியலால் வரையறுக்க முடியும் என்று கேள்வி எழுப்பிய ஹம்சா, உதாரணத்திற்கு தன் பாலின உறவை (Homos*xuality) சுட்டிக் காட்டினார். இஸ்லாமிய ரீதியில் அதனை ஏற்க முடியாது என்ற ஹம்சாவிற்கு பதிலாக, தன் பாலின உறவுமுறை அறிவியல் ரீதியாக தவறில்லை என்றும் இருவரும் மனம் ஒத்து போனால் (கொடும) என்ன தப்பு என்றும் க்ராஸ் கேட்டார்.

**ஹம்சா:** சரி, அப்படியானால் incest (மொழி பெயர்க்க விரும்பவில்லை) குறித்து உங்கள் கருத்தென்ன? அது சரியா?

**க்ராஸ்:** நான் அதை பரிந்துரைக்கவில்லை, ஆனால் அறிவியல் ரீதியில் இது தவறில்லை. இருவரும் இயல்பாக மனம் ஒத்துபோனால் அறிவியல் ரீதியாக இதில் தவறு சொல்ல முடியாது.

இப்படி க்ராஸ் சொன்னது தான் தாமதம், பார்வையாளர்கள் மத்தியில் இருந்து "ஊ ஊ ஊ ஊ" என்ற பலத்த சத்தம். உண்மையில் க்ராஸ் சொன்னது சரியே. தன் பாலின உறவு, Incest

போன்ற ஒழுக்க கேடுகளை அறிவியலால் தவறு என சொல்ல முடியாது. அப்படியானால், எது ஒழுக்கம் என வரையரை செய்வது யார்? எப்படி? கண்மூடித்தனமாக அறிவியலை மட்டுமே நம்பினால் ஒழுக்ககேட்டை கூட நாம் ஆதரிக்க வேண்டிவரும்.

எது ஒழுக்கம் என்பதை தனி மனிதர்களாலும் வரையறுக்க முடியாது, காரணம், ஒவ்வொரு வரும் ஒவ்வொரு அளவீட்டை கூறுவார்கள். ஒழுக்கத்தின் வரையரையை தெளிவாக தீர்மானிக்க நம்மை படைத்தவனால் மட்டுமே முடியும். இஸ்லாம் இதனை தெளிவாக செய் கிறது. அப்படியானால், ஒழுக்க அளவீட்டில், எது அறிவுக்கு ஒத்துவருகிறது இஸ்லாமா? நாத்திகமா? என ஹம்சா ஜார்சிஸ் கேட்டதற்கு க்ராஸ்சிடம் பதிலில்லை.

ஒருகட்டத்தில், Incest-ஐ ஆதரிக்கும் க்ராஸ்-சிற்கு இஸ்லாமிய பெண்களின் உடையை விமர்சிக்க எந்த தார்மீக உரிமையும் இல்லை என ஹம்சா சொல்ல அரங்கத்தில் கைதட்டல் பறந்தது.

மற்றுமொரு தருணத்தில் ஒரு இயற்பியல் யுக்தியை ஹம்சா சுட்டிக்காட்ட, அது தவறு என்றார் க்ராஸ். அப்படியா, நீங்க சொன்னத தான் நான் சொன்னேன் என க்ராஸ் எழுதிய புத்தகத்தை எடுத்து 81-வது பக்கத்தை ஹம்சா காட்ட க்ராஸ் திணறிபோய் தன் இருக்கையில் இருந்து எழுந்து தன் டென்ஷனை காட்ட, பார்வையாளர்கள் மத்தியில் பலத்த சிரிப்பு சத்தம். இந்த தருணத்திலேயே க்ராஸ் வீழ்ந்து விட்டார்.

எந்தவொரு விசயத்தையும் அவர் சொன்னார் இவர் சொன்னார் என நம்பாமல் நீங்களே செய்து பார்த்து நம்புங்கள் என்ற க்ராஸ்-சிடம்,

**ஹம்சா:** 'அப்படியா அப்ப நீங்க பரிணா மத்தின் எல்லா துறைகளிலும் ஆய்வு செய்திருக் கிறீர்களா'

**க்ராஸ்:** இல்லை

**ஹம்சா:** அப்படியானால், பரிணாமத்த ஏன் நம்புகிறீங்க?

**க்ராஸ்,** 'ஆ வந்து' என இழுக்க பார்வை யாளர்கள் மத்தியில் ஆரவாரம் அடங்க நேரமானது. முடிவில், நாத்திகம் உள்ளிட்ட எந்தவொரு நம்பிக்கையையும் அறிவியல் ஆதரிக்காது, அது நடுநிலையானது என்பதை ஒப்புக்கொண்ட க்ராஸ், அதே நேரம், அறிவியல் கொடுக்கும் ஆதாரங்களை வைத்து, கடவுள் இல்லையெனதான் நம்புவதாக கூறினார். அப்படி யானால், அறிவியல் கொடுக்கும் ஆதாரங்கள் தங்கள் இறைநம்பிக்கையை வலுப்படுத்துவதாக ஆத்திகர்கள் நினைப்பதிலும் தவறில்லை தானே.

இந்த விவாதம் நடந்து ஏழு ஆண்டுகள் ஆகிறது. பலரையும் இந்த உறையாடல் இஸ்லாமை நோக்கி ஈர்த்திருக்கிறது என்பதை இவ்விவாதத்தின் கமெண்ட் பகுதியை பார்த்தால் தெரியும். 60,000 - த்திற்கும் அதிகமான கருத்துக் கள் கொண்டுள்ள இவ்விவாதத்தின் கமெண்ட் பகுதியில், பெருவாரியாக நாத்திகர்களும் இந்த விவாதத்தில் க்ராஸ் தோற்கடிக்கப்பட்டி ருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

ஒரு நாத்திகர் கூறுகிறார், '3.5 வருடங் களுக்கு முன்பு இந்த விவாதத்தை பார்த்தேன். உண்மையில் க்ராஸ் கூறிய அனைத்தையும் ஏற்றுக்கொள்ள முயற்சித்தேன். இஸ்லாமை அம்பலப்படுத்துவார் எனவும் எதிர்பார்த்தேன். ஆனால், இல்லை, க்ராஸ் முழுமையாக தோல்வி யடைந்து விட்டார். இன்றோ, நான் ஒரு முஸ்லிம். நாத்திகத்தின் ஒழுக்க நெறி பிரச்சனை களை அப்போது ஏன் என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை? மனித ஒழுக்கத்திற்கு நாத்தி கத்தின் பதில் என்ன? இந்த கேள்விக்கான பதில் என்னை இஸ்லாமை நோக்கி தள்ளியது'


மிக நிதானமாக சூழ்நிலையை கையாள் வதுடன், ஒன்றுக்கு இரண்டாக திருப்பி கொடுப் பதிலும் கை தேர்ந்தவர் ஹம்சா. க்ரீஸ் நாட்டை சேர்ந்த ஹம்சா ஜார்சிஸ் நாத்திகத்திலிருந்து இஸ்லாமை ஏற்றுக்கொண்டவர் ஆவார்.

கடந்த 2018-ஆம் வருடம், பெண்களிடம் தவறாக நடந்துக்கொண்டது நிரூபிக்கப்பட்ட தின் பெயரில் தன் பல்கலைக்கழக டைரக்டர் பதவியை இழந்தார் க்ராஸ். அறிவியலில் ஒழுக்கம் என்றெல்லாம் ஒன்றுமில்லை என்று சொன்ன க்ராஸ் இப்படியாக செயல்பட்டதில் ஆச்சர்யம் எதுவும் இல்லை.

**படம்: விவாதத்தில் லாரன்ஸ் க்ராஸ், ஹம்சா ஜார்சிஸ் மற்றும் நடுவரான யூசுப் சேம்பர்ஸ்.**

# புத்தகத்திலிருந்து!

**இந்திய துணைக்கண்ட பிரிவினையை எதிர்த்த ஜமாத்தே இஸ்லாமியின் ஸ்தாபகர் மௌலானா மௌதூதியின் சில கருத்துக்களை படம் பிடித்துக் காட்டும் புத்தகம் "சிறைப்பறவை" அதன் ஆசிரியர் தாழை மதியவன். பக்கம் 50 முதல் 53 வரையிலான பகுதியில் இடம்பெற்றுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல்கள் இங்கு தரப்படுகிறது.**




*1947,ஏப்ரல் 26 சென்னையில் பேருரையாற்றினார் மௌலானா மௌதூதி. விடுதலை பூரிப்பிலும், பிரிவினை உணர்ச்சியிலும் புரண்டு கொண்டிருந்த அன்றைய அரசியல் சூழலிலும் உண்மையை, யதார்த்தத்தை, ஆபத்தை வெளிச்சம் போட்டு காட்டினார் அவர்.*


இஸ்லாமிய அழைப்பு பணி, அதற்கான செயற்களம், முஸ்லிம்களின் நிலைமை என பேசிக் கொண்டே வந்த மௌலானா மௌதூதி, விடுதலைக்குப்பின் இந்துஸ்தானில் முஸ்லிம்களின் கதி எப்படி இருக்கும் என படம் பிடித்து காட்டினார்.

"இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் முஸ்லிம்கள் எந்த இனவாத அடிப்படையில் ஒன்றுபட்டு செயலாற்றினார்களோ அது அவர்களை எப்படிப்பட்ட காட்டில் அனாதைப்பிணமாக கொண்டுவந்து போட்டுள்ளது என்பதை வெகு விரைவில் உணர்வார்கள். அவர்கள் ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் செய்துவந்த இனப்போர், அழிவைத் தவிர வேறெதையும் தராது. எந்த ஜனநாயக முறையின்படி நெடுங்காலமாக இந்தியாவின் அரசியல் முன்னேறியதோ, முஸ்லிம்களும் தங்களை ஓர் இனமாக கருதி அந்த அரசியலை ஏற்றுக் கொண்டு தங்களின் கோரிக்கைப் பட்டியலை வகுத்துக் கொண்டார்களோ அதை பார்த்த உடனேயே விளங்கிக் கொள்ள முடியும்.

அதாவது இந்த அடிப்படையில் அமைந்த அரசில் எது கிடைத்தாலும் அது பெரும்பான்மையினருக்கே கிடைக்கும். ஒருவேளை சிறுபான்மையினருக்கு கிடைத்தால் அது தானதருமமாகவே இருக்கும். உரிமையின் அடிப்படையிலோ, சரிசமமானவர்கள் என்றோ, நம்மோடு இணைந்திருப்பவர் என்ற கணக்கிலோ கிடைக்காது. எப்போது ஜனநாயக முறைப்படி சுதந்திர ஆட்சி ஏற்படுமோ, அப்போது இந்து இந்தியா பெரும்பான்மையினரின் மதவாத நாடாக உருவாகியே தீரும். அதில் எந்த ஒரு சிறுபான்மையினருக்கும் இன அடிப்படையில் சிறப்பு சலுகைகள் இருக்காது. இனவாத அரசு இதர எந்த இனத்தையும் ஏற்று அங்கீகரித்து அவர்களின் உரிமைகளை முழுமையாக வழங்குவதில்லை.

மாறாக அவர்கள் அவற்றை சிதைத்து தன்னுள் செறித்து விடவே முயல்வார்கள். முடியாவிட்டால், மற்றவர்களை அடக்கிவைப்பார்கள். இறுதியாக அடக்கப்பட்ட சமுதாயம் அடங்காமல் குரல் கொடுக்குமானால் தேசிய பெரும்பான்மையினர் முற்றிலுமாக அழித்தொழிக்க ஆயத்தமாவார்கள். இவையாவும் இந்துக்களின் மதவாத நாட்டில் சிறுபான்மை முஸ்லிம்கள் அனுபவிக்க வேண்டிவரும்.

இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான இந்துக்களை ஐக்கியமாக்கியது எந்தவிதத் திட்டமோ, தத்துவமோ, குறிக்கோளோ அல்ல; வெறும் இனவாத உணர்ச்சியே. இப்போது உருவாக்கப்படுகின்ற அரசியல் சாசனத்தில் ஜனநாயகம், சமூக நீதி, சமதர்மம், சமவாய்ப்பு என்ற வசீகர வார்த்தைகள் எல்லாம் ஏட்டளவில் தான் இருக்கும்" என்றார்.



# ஊரடங்கு காலத்தில் ஆர்.எஸ்.எஸ். தலைவரின் கோவை வருகை

ஆர்.எஸ்.எஸ்ஸின் தேசிய தலைவர் மோகன் பகவத் கோவைக்கு 15.07.2020 அன்று காலை விமானம் மூலம் பெங்களூரிலிருந்து கோயம்புத்தூர் வந்து சேர்ந்தார்.

இந்த பேரிடர் (Pandemic) நோய்த்தொற்று காலத்திலும் கோயம்புத்தூர் வரவேண்டிய அவசியம் என்ன?

பள்ளிக்கூடங்கள். கல்லூரிகளும் மூடப்பட்டு மாணவர்களின் கல்வியே கேள்விக்குறியாகும் நிலையில் எட்டிமடையிலுள்ள அமிர்தா பள்ளிக் கூடம் மட்டும் ஆர்.எஸ்.எஸ் தொண்டர்களுக்கு மோகன் பகவத் வந்து வகுப்பெடுப்பதற்காக திறக்கப்பட்டதன் மர்மம் என்ன?

### அமிர்தா பள்ளியின் சட்டவிதி மீறல்:

நோய்த்தொற்று காலத்தில் எந்த பள்ளிக் கூடமும் திறக்கக்கூடாது என்ற ஆணை அமுலில் இருக்கும் போது எட்டிமடை அமிர்தா பள்ளி மட்டும் திறந்திருந்தது மாவட்ட கல்வி அலுவலகத்திற்கோ, சுகாதாரத்துறைக்கோ, மாநகராட்சிக்கோ எட்டிமடை பஞ்சாயத் திற்கோ தெரியாது என்று காதில் பூ சுத்த முடியாது.

ஏனெனில் மோகன் பகவத் எப்போது வருகிறார் எப்படி வருகிறார் எங்கு சந்திப்பு நடக்கும் எப்போது புறப்படுவார் என்ற இவரின் பயண ஷெட்யூல் முதற்கொண்டு அமிர்தா பள்ளியில் தான் புரோக்ராம் என்பது வரை அப்பட்டமாக பத்திரிக்கைகளில் வந்து விட்டது. பாசிசவாதிகளுக்கு ஆதரவாகத் தான் சட்டம் வளையும் என்பதை மாவட்ட, மாநில நிர்வாகம் ஒத்துக் கொள்கிறதா? சாமானியனுக்கு ஒரு நீதி பாஸிஸவாதிக்கு ஒரு நீதியா?

### இ-பாஸ்:

கர்ப்பிணி பெண்களுக்கு மருத்துவமனைக்கு கூட செல்வதற்கு மறுக்கப்படும் இ-பாஸ் பாசிச வகுப்பெடுப்பதற்காக வரும் மோகன் பகவத்திற்கு எப்படி கிடைத்தது? என்ன காரணத்திற்காக வழங்கப்பட்டது?

சென்னையிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு வந்தாலே 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படும் இவ்வேளையில் இவர் மட்டும் தனிமைப்படுத் தப்படாமல் எப்படி கோவைக்குள் அனுமதிக் கப்பட்டார்?

### 2017-ல் மோகன் பகவத்தின் வருகை

மோகன் பகவத் கோயம்புத்தூர் வந்தாலே கொலை அல்லது கலவரம் நடப்பது என்பது நடைமுறையாகி விட்டது! சென்ற முறை மோகன் பகவத் (15.03.2017 ) வந்த மறுநாள் (16.03.2017) இரவு திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஃபாரூக் கொலை செய்யப்பட்டார்.

### தீக்கிரையான கோவில்கள்

இந்த முறை 15.07.2020 அன்று மோகன் பகவத் கோவை வந்தார். சொல்லி வைத்தாற்போல் 18.07.2020 அன்று (அதாவது 19.07.2020 அன்று மோகன் பகவத்

கோவையை விட்டு புறப்படவிருக்கின்றார்) அதிகாலையில் ஆறு கோயில்கள் தீ வைக்கப் பட்டன.

## கலவரத்திற்கான ஒத்திகையா?

கோயில்கள் தீ வைத்து எரிக்கப்பட்டது சாதாரண விஷயமா? காலை 11 மணியளவில் தீ வைக்கப்பட்ட அனைத்து கோயில்களின் முன்பும் இந்து முன்னணி பிரமுகர்கள் கூட்டம் கூட்டமாக சேரத் தொடங்கினர். ஆனால் பந்த் கடையடைப்பு என்று ஒன்றுமே நடக்க வில்லை. எல்லோருக்கும் இது சந்தேகத்தை ஏற்படுத்தியது. இது கலவரத்தை ஏற்படுத்த இவர்களே போட்ட திட்டமாக இருக்குமோ? அப்படியானால் இரண்டாவது முறையாக இவர்களது திட்டம் (ஆர்.எஸ்.எஸ்) பிசுபிசுத் துப் போனது. அதனால் அமைதியாக கலைந்து சென்றனர். தேர்தலுக்கு தேதி குறிக்கட்டும். பிறகு வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தனரோ? என்னமோ?

## ஏற்கனவே ஒரு மனநோயாளி

சென்ற 29.05.2020 அன்று இரண்டு கோயில்களில் பன்றி கறி வீசி கலவரத்தை ஏற்படுத்த முயன்றவனை சரியான முறையில் கையாண்டிருந்தால் இந்த சம்பவம் நிகழ்ந் திருக்காது! ஆனால் போலீசாரின் கையாலாகாத் தனமோ அல்லது மேலிடத்து அழுத்தமோ பிடிபட்ட குற்றவாளியை மனநோயாளி என்று சான்றிதழ் தந்ததினால் இந்த தீவைப்பு நிகழ்வு தைரியமாக நடத்தப்பட்டிருக்கிறது!

## உண்மைக் குற்றவாளி

தீ வைக்கப்பட்ட ஒவ்வொரு கோயிலும் மெயின் ரோட்டில் 24 மணிநேரமும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி. ஆனால் இப்போது ஊரடங்கு அமுலில் உள்ளதால் ஒரு மனிதன் கூட நடமாட முடியாது. எல்லா பகுதிகளிலும் போலீசார் காவல் நிற்கின்றனர். அப்படியிருக் கையில் குற்றவாளி மட்டும் எப்படி சுதந்திரமாக நகர் உலா வரமுடியும்? ஒரு வேளை போலீ சாரின் வாகனத்தில் வந்திருப்பானோ? ஆனால் சிசிடிவி கேமரா 24 மணி நேரமும் இயங்கும். அது போலீசாருக்கு மட்டுமல்ல எங்களைப் போல நிருபர்களுக்கும் காட்டிக் கொடுக்கும். குற்றவாளி யாரென்று!

## குற்றவாளி ஒரு மனநோயாளி?

இந்தமுறையும் போலீசார் கலவரக்காரர் களுக்கு சாதகமாகவே நடந்து கொள்கின்றனர்? அதனால் தானோ என்னமோ இந்த வழக்கையும் கையாளத் தெரியாமல் மீண்டும் குற்றவாளி (தீ வைத்தவன்) மனநோயாளி என்ற கதையை அளக்கின்றனர். இதனால் பொது மக்களில் பலர் போலீசார் குற்றவாளியை பிடிப்பதை விட்டு மனநோய் மருத்துவமனைக்கு சென்று அங்கு உறங்கிக் கொண்டுள்ள யாரை யாவது பிடித்து வந்து குற்றவாளியாக்குகின் றனரா? என்ற சந்தேகத்துடன் பார்க்கும் சூழ்நிலை.

## ஒரு ஜீரோ, ஹீரோவான கதை

அதுவும் இந்த முறை கஜேந்திரன் என்பவன் தான் குற்றவாளி. அவன் ஒரு மனநோயாளி. சேலத்தை சேர்ந்தவன். தனது வீட்டாரிடையே ஏற்பட்ட தகராறில்

வீட்டை விட்டு (வெள்ளிக்கிழமை) புறப் பட்டு பஸ், கார், பைக் என்ற எந்த வசதியுமில்லா மல் (இ பாஸ் இல்லாமல்) மூன்று மாவட்டங்கள் கடந்து சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்குள் கோயம்புத்தூர் வந்து அரை மணி நேரத்திற்குள் ளாக (ஒரு மனநோயாளி) மிகச்சரியாக (திட்ட மிட்டபடி) ஆறு கோயில்களுக்கு தீ வைத்து விட்டான். அதில் ஒரு கோயில் (நல்லாம் பாளையம்) உள்ளூர்வாசி செல்வதற்கே அரை மணிநேரம் ஆகும். வெளியூர்காரர்கள் யாரா யினும் உள்ளூர்காரர்கள் துணையில்லாமல் செல்லவே முடியாது.

ஆனால் குற்றவாளி எந்த வாகனமுமில்லாமல் யார் துணையுமில்லாமலும் நல்லாம்பாளையம் சென்று கோயிலுக்கு தீ வைத்தான். போலீசார் சொல்லும் இந்த கதை நம்புறமாதிரி தானே இருக்கு?

**உளவுத்துறையினரே! இப்படியே உண்மைக் குற்றவாளியை கண்டுபிடிக்காமல் பேரளவிற்கு ஒருவரை கைது செய்வது தொடருமாயின் கோவை போலீசார் என்றாலே சந்தி சிரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சத் தோன்றுகிறது.**

கவலையுடன்
கோவையிலிருந்து நமது நிருபர்

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் - செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை - டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்-
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? -
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் - பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? -
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் - பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் - மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்-
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள்-
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் -
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது - டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி - கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.